

# ஆசிரியத்துவ வாண்மைத் தேர்ச்சிகள்

# Teacher Professional Competencies

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**

670.007

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள்


பாலசுப்பிரமணியம் தனபாலன்

SLTS I, SLTES III

B.A.(Cey)PGDE (Merit), M.Phil in Education

Dip in Psy 1st class, Cerin Vocational Guidance (Singopore)



வெளியீடு

**லங்கா பதிப்பகம்**

FL, 1 /14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர

கொழும்பு – 12.

**2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | :"**ஆசிரிய வாண்மைத் தேர்ச்சி**" |
| ஆசிரியர் | : | பாலசுப்பிரமணியம் தனபாலன் |
| பதிப்புரிமை | : | கர்ணி தனபாலன் |
| பக்கங்கள் | : | viii + 170 |
| பிரதிகள் | : | 2000 |
| வெளியிடுவோர்: | | லங்கா பதிப்பகம்<br>FL, 1/14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு - 12.<br>T.P.0112341942 |
| கணினி வடிவமைப்பு: | | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>இல. 424, கே.கே.எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். |
| விலை: | | 350/= |
| Title | : | **"Teacher Professional Competencies"** |
| Author | : | Balasubramaniyam Thanabalan |
| First Edition | : | September 2011 |
| Copy rights | : | Karni Thanabalan |
| Printed and Publisher | : | Lanka Printers<br>FL, 1/14, Daias Place,<br>Gunasingapura,<br>Colombo - 12. |


---

**அட்டைப்படம்:** சிறிலங்கா புத்தகசாலையின் கல்விச்சேவை 75ஆவது ஆண்டு பூர்த்தியானதை முன்னிட்டு யாழ். வன்னி மாவட்ட வறுமையான மாணவர்கள் பயிலும் பத்துப் பாடசாலைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை யாழ். தே.க.க. பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்கள் ஊடாக நிறுவனத்தலைவர் திரு.க. இராஜேந்திரன் அவர்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

சிறிலங்கா புத்தகசாலையின் 75ஆவது

வருட கல்விச் சேவையை

முன்னிட்டு இந்நூல் சமர்ப்பணம்

செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமகால உலகளாவிய ஆசிரியர் கல்விச் செல்நெறிகள் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆசிரியர்களின் வேலைப்பளுவைக் குறைத்து வினைத்திறனை அதிகரிக்கும் வெளியீடுகள், செயலமர்வுகள், கலந்தாய்வுகள், செயற்பாடுகள், நவீன அணுகுமுறைகளில் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

எமது நாட்டில் இச்செல்நெறி ஆக்கபூர்வமானதாக மேலும் வளர்க்கவேண்டியுள்ளது. ஆசிரியர்களை முகாமை செய்யும் உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோர் ஆசிரியர் கல்வி தொடர்பாக மிகக்கூடுதலான கவனம் செலுத்தவேண்டிய காலமாக இன்றைய காலம் உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுடைய வாண்மைத் தேர்ச்சிகளை சுயமாக விருத்தி யாக்கும் நோக்கில் உலக அளவிலும் இலங்கையின் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், மாகாணக் கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆசிரிய கல்வி நோக்கங்களுக்கு அமைய இந்நூல் உருவாக்கப்பட்டது.

இந்நூல் ஆக்கத்தை சிறப்பாக வெளியிட உதவிய சிறிலங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு. S. சதீஸ் அவர்களுக்கும், தலைவர் திரு. க. இராஜேந்திரன் அவர்களுக்கும் முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும்இந்நூலாக்கத்திற்கு உதவிய கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும், நூல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் தொடர்பான ஆலோசனைகளையும், விமர்சனங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன். இந்நூல் எனது நாற்பதாவது நூல் வெளியீடாகும். இதற்கான அடிப்படைகளை ஏற்படுத்திய எனது பேராசான் பேராசிரியர். சபாரத்தினம் ஜெயராஜா அவர்களை இந்நேரத்தில் நினைவு கூருகின்றேன். என்னை வளர்த்து ஆளாக்கிய அப்பேராசானுடைய பாதத்தை வணங்குகின்றேன்.

- நூலாசிரியர்
பா. தனபாலன்

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
*06.09.2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | நவீன கட்டுருவாக்கக் கல்வியியலில் ஆசிரியர் வகிபாகங்கள் | 01-08 |
| 2. | ஆசிரியம் - கற்பிக்கும் கலை | 09-42 |
| 3. | ஆசிரியத்துவ வாண்மை | 43-70 |
| 4. | ஆசிரிய வாண்மையில் முகாமைத்துவம் | 71-96 |
| 5. | வகுப்பறை முகாமைத்துவம் | 97-118 |
| 6. | வாண்மையுள்ள ஆசிரிய ஆளுமை | 119-147 |
| 7. | பின்னிணைப்பு | 148-170 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கட்டுருவாக்கக் கல்வியியலில் ஆசிரியர் வகிபாகங்கள்

மாணவர்கள் சார்பான நவீன ஆசிரியர் கல்வி பரிமாணங்கள் பல வகைகளில் விரிவடைந்து வருகின்றன. கற்றல், கற்பித்தல் தேர்ச்சித்திறன்கள், ஆசிரிய தொழில் வாண்மைகள், கடமைகள், குணநலன்கள், நவீன கட்டுருவாக்கக்கல்வியியற் செயன்முறைகள், விழுமியங்கள் என்பவை பற்றி நிலவும் புதிய தேவைகளுக்கு ஏற்ப; ஆசிரியர் களுக்கான புதிய கல்வி முறையியல்கள், வெளியீடுகள், வந்து கொண்டிருக்கின்றன. கல்வியின் புத்தாளர்களாகவும், தேசத்தைக் கட்டியெழுப்புவோராகவும், சமூக மாற்றத்தின் முகவர்களாகவும் செயலாற்றவேண்டிய ஆசிரியர்களின் வகிபாகத்தை உறுதிப்படுத்தும் பல்ஊடக வெளிப்படுத்தல் கள் விரைவாக நடைமுறைக்கு வருகின்றன. இந்த நீரோட்டத்தில் நாமனைவரும் இணைய வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இதில் நவீன கட்டுரு வாக்கக் கல்வியியலிற் செயலாற்றுகைகள் முதன்மை பெறுகின்றன. இவற்றினூடாகப் பல சவால்களுக்கும் விமர் சனங்களுக்கும் முகம் கொடுக்கும் சமகால ஆசிரியர்களின் புதிய வகை வகிபாகங்களும் நடைமுறைக்கு வந்துவிட்டன.

### கட்டுருவாக்கவாதம் (Constructivsm)

கற்போன் புதிய விடயங்களை ஏற்கனவே அவனிட முள்ள அறிவுப்பின்னணியிற் கட்டியெழுப்பிக் கற்கின்றான் என்பதே கட்டுருவாக்கமாகும். அறிவுசார் பிரயோகத்திற் புதிய விடயங்களைக் கற்கும்போது ஏற்கனவேயுள்ள அறிவுப்புலத்தோடு தொடர்புறும் வகையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பித்தல் அனுபவத்தை வழங்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக உயர்ந்த கற்றற் பெறுபேறு கிடைக்கும் என்பதை இக்கோட்பாடு எடுத்துரைக்கின்றது. இக் கோட்பாட்டையே கற்றல் கற்பித்தலிற்-பிரயோகிக்க யுனெஸ்கோ நிறுவனம் உலக நாடுகளுக்குச் சிபார்சு செய்துள்ளது. எமது பாடசாலை களிலும் இக்கோட்பாடு தற்போது நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதன் பிரயோகங்களாக ஆரம்பக் கல்வியிற் குழுவாகக் கற்றல், இடைநிலைக்கல்வியில் 5E- 7E முறைமை, உயர்தரத்திற் குழுவேலை, செயற்றிட்ட களஆய்வுகள் என்பன செயற்படுத்தப்படுகின்றன. இக்கட்டுருவாக்க வாதத்திற் பின்வரும் தொழிற்பாடுகள் எடுத்தியம்பப் படுகின்றன.

i அறிவு என்பது மனிதனது சிந்தனை ஆக்கத்தால் உருவாக்கப்படுகின்றது. இது ஒழுங்கமைக்கப்பட்ட எண்ணக்கருக்களின் உயர் சிந்தனையின் பிரதிபலிப் பாகும். கட்டுருவாக்கம் பிரச்சினைகளைத் தளமாகக் கொண்ட மாணவர் மையக் கற்றல் முறையாகும்.

ii. இக் கோட்பாட்டில் அறிவுக் கட்டுமானம் ஆனது இயக்கவியல் கொண்டதாகவும், பொருள் பொதிந்த தாகவும் இருக்கும்.

iii. அறிவானது அனுபவத்தின்மூலம் கூட்டாகவும், தனியாகவும் மாணவர்களால் ஆசிரியர்களின் வழி காட்ட லில் மகிழ்ச்சிகரமாகக் கட்டியெழுப்பப் படுகின்றது.

iv. நடத்தைகள், திறன்களைவிட உளவியல் எண்ணக்கருக் கட்டுமானமே இங்கு மிகமுக்கியமானது. எண்ணக்கருப் பட விளக்கம் இதற்குத் துணை செய்கின்றது. பிரதிபலித்தல் மூலமே கற்றல் நிகழ்கின்றது.

v. மாணவர்கள் உயிர்த்துடிப்புடன், பல்வேறு செயலாற்று கைகள் மூலம் அறிவைக்கட்டியெழுப்புதல் கற்றலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் வழங்க வேண்டும்.

vi. மாணவர்களின் கற்றலில்; சவால்கள் ஏற்படும்போது மேம்படுகின்றது! அச்சுறுத்தல் ஏற்படும்போது தடைப் படுகின்றது.

vii. ஒவ்வொரு மாணவர்களுடைய மூளையும் தனித்து வமானது என்பதற்கு ஏற்ப ஆசிரியர்களின் கற்பித்தல் பன்முகத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். மாணவர்களின் மூளை முழுமையையும் - பகுதிகளையும் ஒரே நேரத்தில் நிரல்படுத்துகின்றது.

## கட்டுருவாக்க ஆசிரியர்

நவீனஆசிரிய வகிபாகம் மாணவர்களுக்குப் பிரச் சினைகளை வழங்கி, அவர்களின் தேடலுக்கான வழிகளை இயம்பிக் கண்காணிக்கும். மாணவர்களின் அறிவு விசாரிப்பை வழிப்படுத்தி புதியசிந்தனைக்கோலங்களை மேம்படுத்தும். ஒத்த உணர்வுடன் ஆசிரியர் மாணவர்களை அணுகுவார். மாணாக்கர்களின் மனவெழுச்சி நுண்மதி - பன்முக நுண்மதி திறன்களினூடாக ஆளிடைத் தொடர்பாடற் தேர்ச்சிகளை மேம்படுத்துவார். கட்டுருவாக்கவாதம் பெரும்பாலும் அடிப் படைத் தரவுகள், முதல்நிலை மூலங்கள், இடைவினை தரும் சாதனங்கள் , ஆகியவற்றைப பயன்படுத்துகின்ற இவற்றைப் பிரயோகிக்கும் ஆசிரியர் மாணவர்களைத் தமது சொந்த தேடல்களில் ஈடுபடவும் ஊக்கிவிப்பார். படிப்படியாக மாணவர் கற்றல் என்பது திரண்டு எழும் அறிவு, நம்பிக்கைகள், திறன்களை பயன்படுத்தும் உளரீதியாக; கட்டுருவாக்க ஆசிரியர் தனது தேர்ச்சிகளைப் பிரயோகிப் பார். எனவே, இவர் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அறிவை, ஏற்கனவே இருந்த அனுபவங்களுடன் இணைத்துக் கட்டுமானப்படுத்துவதில்; தெரிதல், தொகுத்தல், ஒன்றிணைத்தல், சகபாடிகளின் - ஆசிரியரின் இடைவினைகள், பிரச்சினையை இனம் காணல், விமர்சன சிந்தனை, அவதானித்தல், பரிசோதித்தல், கலந்தாய்தல், பிரதிபலித்தல், காரணம் கண்டறிதல், விமர்சனம் செய்தல், மீளப்பெறல், பிரச்சினையை விடுவித்தல், விளக்குதல், முன்வைத்தல், பகிர்தல், அறிவைப் பொருத்தமான இடத்தில் இடம் மாற்றிப் பிரயோகித்தல். ஆகிய கற்றல் தொடர்பான உள, சமூக செயற்பாடுகளை விருத்திசெய்யும் உயர் வாண்மையாளராக - புத்திஜீவியாக, புதிய கட்டுருவாக்க ஆசிரியர் செயலாற்ற வேண்டும். இதற்கான சூழ்நிலைகளை பாடசாலை அதிபர், கல்வி முகாமையாளர்களும் சமூகத்தவர்களும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இன்றைய மிக முக்கிய தேவையாக வுள்ளது.

இவ்வாறான கட்டுருவாக்க ஆசிரியரின் வழிகாட்டலிற் கற்போனாகிய மாணவன் கற்றலுக்கான பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்வதுடன், கற்றலை மேம்படுத்துவதற் கான ஆர்வமும், கற்றலை ஆரம்பிப்பதற்கான விருப்பமும் தொடர்ந்து கற்பதற்கான சக்தியையும் பெற்றிருக்க வேண்டும். மாணவன் ஆசிரியரின் வழிகாட்டலில் தன் கற்றல் தொடர்பான வேலைகளைத் தானே ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். புதிய தகவலையும் கற்றல் முறைகளால் உள்வாங்கி; இணையம், கணினி, வீடியோ - ஓடியோபோன்ற பல்வேறு சாதனங்களையும் கற்றலுக்காகப் பயன்படுத்தும் தேர்ச்சி களையும் பெறவேண்டும் என்பதற்கான வழிகாட்டலையும் கட்டுரு வாக்கவாதக் கோட்பாடு எடுத்தியம்பு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுருவாக்க ஆசிரியரின் வகிபங்குகள்

இன்றைய சமகால ஆசிரியர் வகிபங்குகள் பல சவால்களையும், எதிரீடுகளையும், விமர்சனங்களையும், எதிர்பார்ப்புக்களை உடையதாக காணப்படுகின்ற நிலையில்; கட்டுருவாக்க ஆசிரியர் வகிபங்குகள் மேலும் உன்னதமான, மாணவர்களின் உணர்வுகளுடன் சங்கமமாகக் கூடியவையாக, எதிர்கால வியல் தரிசனங்களுக்கு வழிகாட்டுபவையாக அமைகின்றன. அவை மாணவர்களின் நண்பராக/ அவர்களின் கற்றலுக்குத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துகின்ற உதவியாளராக விளங்குதல், வழிகாட்டி என்ற வகையிற் கற்றலுக்கான ஆலோசகராகவும், கற்றலுக்கு வேண்டிய திசைமுகப்படுத்தல் களை வழங்குபவராக இருத்தல், சிறந்த கனவான் தன்மை கொண்ட ஊக்குவிப்பாளராக, அறிவுசார் உதவியாளராக, பரிந்துரை செய்பவராக, சவால்களுக்கு முகம்கொடுத்து தீர்ப்புக் கூறுபவராக, புத்தாக்குநராக, சுதந்திர சிந்தனைக்கு வழிகாட்டுபவராக, தனிப்பட்ட மாணவர்களைக் கணிப் பிட்டு அவர்களது பலங்களையும் - பலவீனங்களையும் - தேவைகளையும் - அபிலாசைகளையும் - உணர்வுகளையும் புரிந்து உதவுபவராக, கட்டுருவாக்க ஆசிரிய வகி பாகங்கள் விரிவடைந்து செல்கின்றன. இவ்வகிபங்குகள் ஊடாகப் பின்வரும் விளைவுகள் கிடைக்கப்பெறும்.

- கட்டுருவாக்கவாத ஆசிரியர் 1ஆம் தர - புத்துஜீவித்தன - அறிவார்ந்த - மனிதத்துவ பண்புடையவராகத் திகழ்வார். அன்றைய சமூகத்திலிருந்த உயர் ஆசிரியர் அந்தஸ்தைப் பெறுவார்.
- மாணவர்களுக்கான கற்பித்தலிற் புத்துணர்ச்சி பெற்றுத் தம் சொந்த அறிவை விரிவாக்குவார்.
- கல்வித் தொழில் நுட்பவியலில் புதிய வாண்மைத்துவத் திறன்களைப் பெற்றிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணாக்கர்கள் முன்னனுபவங்களை அறியக்கூடிய தேர்ச்சியையும் விளைதிறன் மிக்க கற்பித்தல் மு றை களுடன் உத்திகளையும் கையாளுவார். மாணவர் ஒழுக்க விழுமியங்களில் அக்கறை செலுத்துவார்.
- பாடங்களுக்கிடையிலான கலைத்திட்ட - இணைக் கலைத்திட்ட விருத்திகளை மேற்கொள்ள ஏனைய ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து உதவிபெறுவார்.
- மாணவர்கள் சுயமாகவும், வெவ்வேறுபட்ட வேகத்தில் கற்கின்ற - செயற்படுகின்ற ஒரு வகுப்பை முகாமை செய்யும் தேர்ச்சியைப் பெறுவார்.
- சிறந்த நல்லாசிரியரின் பண்புகளைக் கடைப்பிடிப்ப வராகவும், நல்ல மனிதராகவும் செயலாற்றுவார்.

இவ்வகையில் ஆசிரியர் முதற்கண் சமூகமயமான பாத்திரமுடையவராகவும், சமூக மாற்றத்தின் முகவராகவும் செயற்படவேண்டும் எனக் கட்டுருவாக்கவாதம் இயம்பு கின்றது. கற்றல் என்பது சமூகம் சார்ந்ததாகும். சமூகம் சார்ந்த கற்றலில் கருத்துக்கள் பரிமாற்றப்படுவதோடு பிரச்சினைகள் கூட்டாகத் தீர்க்கப்படுகின்றன. பிரச்சினையை இனம் கண்டு மற்றவர்களுடன் இணைந்து கற்பதன் மூலம் கற்பவனின் அறிவு விருத்தியடைகின்றது. வகுப்பறையானது கற்றலுக்குப் பொருத்தமான சமூகச் சூழலாக மாற்றப்படும்போது மாண வன் தான் அறிந்த விடயங்களை தமக்கிடையே பரிமாறி மேலும் தெளிவுபெற வாய்ப்புக்களை ஆசிரியர் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதையும் இக் கோட்பாடு வலி யுறுத்துகின்றது.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே உரித்தான அனுபவங்களின் அடிப்படையில் அறிவைக் கூட்டுத் திறன் மிகு விளைவாக்குகின்றார்கள். அனுபவத்தின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அறிவு கட்டியெழுப்பப்படும்போது ஒவ்வொரு தனித்தனி மாணவரும் தமக்கேயுரிய அனுபவத்தின் அடிப்படையில் அறிவைக் கட்டியெழுப்புகின்றனர். அனுபவத்தின் அடிப்படையிற் புதிய விடயங்களும் சேர்கின்றன. மாணவரின் கடந்த கால அனுபவங்கள் புதிய அறிவைக் கட்டுமானப்படுத்த உதவுகின்றன. இவ் வகையில் ஒவ்வொரு மாணவனும் இன்னொரு மாணவனில் இருந்து வேறுபடுத்துகின்றான்,. எனவே ஒவ்வொரு மாணவனினதும் தனித்துவமான அனுபவங்கள் கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அறிவுசார் கட்டமைப்பு அதன் அமைப்பில் இயக்கத்திறன் உடையதாகின்றது. இது அறிவை மீளாய்வு செய்வதோடு புதிய விடயங்களை, தேர்ச்சிகளைச் சேர்த்துக்கொள்ளவும் உதவுகின்றது. இதற்கு ஆசிரியர்களின் இதயபூர்வமான வழிகாட்டல் வகிபாகம் முதன்மையானதாகும்.

இம்முதன்மை வகிபாகத்தினூடாக ஆசிரியர்கள் கட்டுருவாக்கக் கற்பித்தல் முறைகளான பிரச்சினை தீர்த்தல், கட்டுமானப்படுத்துதல், பரிசோதனை செய்தல், சமூகக்கருத்தாடல், சிக்கல் முறை, சித்திரவடிவ ஒழுங்காக்கி முறைகள், எடுகோள்சார் ஒப்புவமை முறை, ஒன்றிணைந்த கற்பித்தல் முறை, பாத்திர நடிப்பும் போலச் செய்தலும், தொழில்நுட்பம் முறை, சோதித்தல் முறை, எதிர்வு கூறல் முறை, எண்ணக் கருப்பட முறை ஆகிய நவீன கற்பித்தல் முறைகளை பிரயோகிக்ககூடிய வகிபங்குப் பாத்திரங்களை வகுப்பறைச் சூழ் நிலைக்ளுக்கு ஏற்ப பிரயோகிக்கின்ற ஆசிரியராவார்.

இவர் தன்னமைவாக்கம் மற்றும் தன்னிசைவாக்கத்தை ஊக்குவித்து, கற்றல் அனுபவங்களை வடிவமைத்து, மாணவர்களுக்கு வழங்கும் வசதிப்படுத்துநராக, வளவாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகச் செயலாற்ற வேண்டும். சூழலைத் தேடிக் கற்றல், அனுபவத்திலிருந்து அர்த்தத்தைக் கட்டி எழுப்புதல், அறிவைத் தனிப்பட்ட ரீதியில் அர்த்தமுள்ள சூழலிற் பிரயோகித்தல், கணிப்பிடல், மெய்யான உலக உண்மைகளையும், தேவைகளையும் பிரதிபலிக்கக்கூடியதான ஒப்படைகளை வழங்கி சமகால - எதிர்கால நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆற்றல்களை எமது மாணவர்களுக்கு வழங்கும் ஆற்றலும் - அர்ப்பணிப்பும் உள்ள ஆசிரியரே கட்டுருவாக்கவாத ஆசிரியராவார். இவ்வகையில் இவ்வருட - ஆசிரியர் தினத்திலிருந்து நவீன கட்டுருவாக்கவாத ஆசிரிய வகிபாகமுடைய ஆசிரியர்களாக அனைத்து ஆசிரியர் களையும் மனப்பாங்குகளால் உருவாக்கும் செயலாற்றுகை களை நாமனைவரும் எமது மண்ணில் மிக விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம் - கற்பிக்கும் கலை

உலகிலேயே மனித செயற்பாடுகளில் முதன்மை யானது கற்றலாகும். கற்கத்தூண்டுவதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் கற்பிப்போராவர். கற்பிப்போர் கலைஞர்கள், கற்போர் கலைஞர்கள் என்ற அர்த்தங்கள் பல பரிமாணங் களைப் பெற்று, கல்வி என்ற உன்னத இலக்கை அடைய வழிகாட்டுகின்றன. சுய முன்னேற்றம், திறன்கள் அடைவதற்கு ஒருவரைப் பக்குவப்படுத்தும் செயன்முறையே கல்வியாகும். இன்றைய சிக்கலான, ஆற்றல் மிகுந்த சமுதாயத்திலே தகவல், அறிவு, ஆற்றல்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள், விழுமியங்கள் ஆகியவற்றை அடைவதற்கான ஏதுக்களைக் கல்வி வழங்குகின்றது.

கல்வியின் அடிப்படை நோக்கமானது; பௌதிக- அறிவியல், - சுயஉணர்வு - அறிவியல் என்பன ஒருங்கிணைந்த பூரண மனிதனைத் தோற்றுவித்தல் என்பதாகும். இந்நோக்க மானது மேலும் ஒருவரைத் தன்னிலை அறிவுத்தகைமை உடையவராக மிளிரச் செய்கின்றது. இதன் விளைவாக ஒருவர் தன்னிறைவு உடையவராக விருத்தியடைந்து, தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்திற்கும் அதன் அங்கத்தவனாக உதவிபுரிய வைக்கின்றது. தனது பணிகளை மற்றவர்களுக்கு ஆற்றுவதிற் செயற்றிறன், மெய்யுணர்வு, பலம் பொருந்திய குணஇயல்புகள் ஆகியவற்றை உடையவராக ஆக்குவதோடு, சகலரினதும் உரிமைகளைப் பேணுவதில் அக்கறையுள்ள வராக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியானது கற்றல் என்ற செயன்முறையினூடு விருத்தியாகின்றது. இக்கற்றலானது:

i. அனுபவத்திலிருந்து உருவாதல் (Derived from Experience)
ii. நடத்தை மாற்றம் ஏற்படுதல் (Change in behavior)
iii. அம்மாற்றங்கள் நீண்டகாலம் நிலைத்திருத்தல் (Be Relatively Permanent)

என்ற வகையில் மாணவர்களுக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும், குடும்பத்தவர்களும், சமூகத்தவர்களும், வெகுசனத்தொடர்புசாதனங்களும் வழிகாட்ட வேண்டும். கற்றலுக்கான முதன்மை வழிகாட்டிகளாக இவர்களில் ஆசிரியர்களே உள்ளனர். இன்று உலகின் சகல பாகங்களிலுமுள்ள கல்வியியலாளர்களும், கல்வித்திட்டமிடுவோரும் கல்வியின் சகல முனைகளிலும் புத்தாக்கங்களிலிருந்து (Innovative) சீராக்கங்களிலும் (Modefications) ஈடுபட்டு வருகின்றனர். இவை கற்பிக்கும் கலையான ஆசிரியத்தில் புதுமையைக் காட்டிநிற்கின்றன. இப்புதுமைகள் நவீன ஆசிரியர் கல்வி விருத்திக்கு வழிகாட்டுகின்றன. தற்போதைய, எதிர்கால ஆசிரியர் கல்வி விருத்திக்கு முக்கியமாகப் பின்வரும் நான்கு விடயங்கள் முன்நிற்கின்றன.


1) ஆசிரியர்களின் கள அனுபவம் மற்றும் மாணவர்களுக்குக் கற்பித்தல்மூலம் ஏற்படும் - **செயன்முறை அனுபவம்.**
2) கற்றல் - கற்பித்தல் தொடர்பான கருத்துக்கள், மைய விடயங்கள் போதனா முகாமை உள்ளடங்கிய - கல்வியியல் **கோட்பாட்டு எண்ணக்கருக்கள்.**
3) செயற்றிட்டங்கள், செயற்பாட்டாய்வுகள், ஆய்வுகள், அபிவிருத்திகள் மூலம் கிடைக்கும் **அனுபவத்தகவல்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) சிறந்த மற்றும் மோசமான ஆசிரியர்கள் கருமமாற்றியுள்ள விதம் தொடர்பான தகவல்கள், விடய ஆய்வுகள், பின்பற்றல்கள், கற்கக் கற்றல் தேர்ச்சிகள் (Learning to learn ) உள்ளடங்கிய விடய ஞானம்.

தற்போதைய கற்பித்தற் கலை தொடர்பான நவீன கருத்தியலாக; எல்லோரும் எப்போதிலும் வெற்றிகரமாக உபயோகிக்கக்கூடிய ஒரு நிச்சயமான உபாயம் கிடையாது. எனவே, ஆசிரியர் தான்பெற்ற அனுபவங்களையும், திறன்களையும் பயன்படுத்துவதனூடாக கற்றல் - கற்பித்தல் உத்திகளை உருவாக்கிக் கொள்ள முடியும். புதிய ஆசிரியர் கல்வியின் பிரவேசமாக அமைய வேண்டியது; ஆசிரியர் வகுப்பறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதல்ல. அவர் அப்பிரச்சினையைத் தீர்க்கும்போது கூர்மையான ஒரு வகிபாகத்தில் ஈடுபடுவதற் கான உதவியை வழங்குவதாகும். மேலும், கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உத்திமுறைகளும் இதன் மூலம் விருத்தியடையும். இதற்கான உத்திமுறை உதாரணம் கீழே தரப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி தொழில்வாண்மைப் பரப்பாக அமைவது ஆசிரியர் தனக்கே உரிய உத்திகளை விருத்திசெய்து கொள்வதற்கு உதவியாகப் பிரச்சினை தீர்க்கும் ஒரு பிரதேசத்தை விருத்திசெய்து கொள்வதற்கு உதவியளித்த லாகும். வகுப்பறை நிகழ்வுகள் மட்டுமன்றி ஒரு மாணவனின் ஆசிரியர் தொடர்பாக: அதிபர், ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சமூகத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளும் உண்டு என்பதை ஆசிரியர் அறிந்துகொள்ள வேண்டும். எனவே ஆசிரியர் அவருடைய பாடத்தைக் கற்பிப்பதற்கு மேலாக ஒவ்வொரு மாணவனினதும் சமூக - உளவியற் காரணிகள் பற்றிய அறிவும், மாணவன் எவ்வாறு கற்றலில் ஈடுபடுகிறான் என்பதுபற்றியும், அதற்குரிய மிகப்பொருத்தமான கற்பித்தல் முறைஎது என்பது பற்றியும் தெரிந்திருக்க வேண்டும்.

கற்றல் என்ற உயிர்ப்பான செயற்பாடு ஆசிரிய - மாணவர் உறவிலிருந்தே ஊற்றெடுக்கின்றது. இந்த அகப்பார்வையை அடிப்படையாகக் கொண்டு:

1) தத்துவார்த்தத் தர்க்கவியலின் பாவனை,
2) சாட்சிகளைத் தேடுதல்,
3) பிரச்சனை தீர்த்தலை ஊக்குவித்தல்,
4) பாடசாலைக் கலைத்திட்டத்தை அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் தொடர்பு படுத்திக் கற்க வழிகாட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றினூடாக கற்பிக்கும் கலையை மேலும் மெருகூட்ட வேண்டியுள்ளது இதற்கு நுட்பமுறைச் செயற்பாடுகள் உதவுகின்றன.

**கற்பித்தல் நுட்பமுறைச் செயற்பாடுகள்**

கற்பித்தல் நுட்பமுறைச் செயற்பாடுகள் குறித்த நோக்கங்கள், குறிக்கோள்கள், உள்ளடக்கம், கணிப்பீடு ஆகியவற்றிலே தங்கியுள்ளது. கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுகையில் ஆற்றல்கள், காலம், தேவையான வளங்கள் - தர உள்ளீடுகள், குறிக்கோள்கள், கற்றற்பேறுகள் தொடர்பாகவும் அக்கறை செலுத்தவேண்டும். கற்றற் குறிக்கோள் களை அடைவதிற் செயற்பாடுகளின் தன்மை பெருமளவுக்குத் துணையாக அமையும்.

நுட்பமுறைச் செயற்பாடுகளும், உயிர்ப்பான பங்கு பற்றுகையும் மாணவர்களின் கற்றலை மையமாகக் கொண்டு உருவாக்கப்படல் வேண்டும். அதாவது அறிவை மாணவர்களின் தேவைகளுடன் பொருந்தச் செய்தல் வேண்டும். தாம் உணர்பவை, ஆற்றவேண்டியவை, பற்றி மாணவர் தாமே முடிவெடுக்க வழிகாட்ட வேண்டும். ஆசிரியர் பயிற்சிச் செயற்பாடுகளின் போது மாணவர் பங்குபற்றுகை மற்றும் உயிர்ப்பானகற்றல் முறைகள் பயன் படுத்தப்பட வேண்டும். கற்பவர் அதிகமான செயற்பாடுகளில் ஈடுபடுவதால் கற்பித்தல் செயன்முறை பங்குபற்றுகை சார்ந்ததாகவும், வினைத்திறனுடையதாயும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மாணவர் பகுப்பாய்வுகளில் ஈடுபடுபவர். கருத்துக் களை, செயற்பாடுகளை ஆராய்வர். பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பர். கற்றவற்றைப் பிரயோகிப்பார். இதனால் உயிர்ப்பான கற்றல் துரிதமாக நிகழும் மகிழ்ச்சியான தாக அமையும். தனியான ஒவ்வொரு மாணவனின் ஈடுபாட்டுடனும் தொடரும்.

கற்றல் என்பது மாணவர்களின் மூளைக்குள் தகவல் களைப் புகுத்தும் செயன்முறையல்ல. கற்றலானது சொல்லிக் கொடுத்தலுக்கு அப்பாற்பட்டது. கற்றலின்போது கற்பவரின் உளச் செயற்பாடுகள் நிகழுகின்றன. இவ்வகையில் கற்றலின் உள்ளடக்கத்தைக் கற்கும்விதமே முக்கிய மானது. உதாரண மாகக் கற்றலே பெரும்பாலும் வகுப்பறையில் நிகழ்கின்றது. இங்கு கூட்டாகக் கற்றல் என்பது ஒரு குழுவினர் பொதுக் குறிக்கோளுடன் பரஸ்பர பெறுபேறுகளைப் பெறுவதற்காக வளங்களைப் பகிர்ந்து பரிமாறியவாறு, ஒருவரை ஒருவர் வலுவூட்டியவாறு மேற்கொள்ளப்படும் குழுநிலை முனைப்பாகும். குழுவின் அங்கத்தவர்கள் பாடத்தையோ, செயற்பாடுகளையோ நிறைவு செய்துகொள்வதற்காகப் பரஸ்பரம் உதவி புரிவர். ஆசிரியரும்கூட அப்போது குழு அங்கத்தவராக செயற்படுவார். அப்போது கற்றலின் வினைத் திறன் கூடும்.

இவ்வகையிற் கற்றற் செயற்பாடுகளுக்கான உதாரணங் களாக: கருத்துத்திரட்டல் - சிந்தனைக் கிளர்வு, விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகாட்டல், குழுச் செயற்பாடுகள், பரிசோதனை, நடித்துக் காட்டல்கள், செயற்றிட்டங்கள், செயல்நிலை ஆய்வுகள், விடய ஆய்வுகள், நேர்முகக் கலந்துரையாடல்கள் என்பவை உள்ளன. மேலும் இச் செயற்பாடுகள் மிகுந்த பயன்பாடுகளை உடையதாக இருக்க வேண்டுமானால் ஊடகங்களைப் பயன்படுத்தும் திறனும் வேண்டும். ஊடகம்என்பது செயற்பாடுகளை முன்வைக்கும் முறை யாகும். கரும்பலகை, நூல்கள், நுணுக்குக்காட்டிகள், வீடியோ, ஓடியோ கருவிகள், வழுக்கிகள், மேந்தலை எறிவைகள், கணினிகள், சுவரொட்டிகள், பல் ஊடக எறியி (Multi media Projector) என்பவை ஊடகங்களாக உள்ளன. இவை தரஉள்ளீட்டுத் தொகுதிகளில் அடங்குகின்றன.

**யுனெஸ்கோவின் (UNESCO) கற்பதற்குக் கற்றல் மூலமான புதிய பிரவேசங்கள்**


கற்பித்தற் கலைச் செயற்பாட்டிற்குப் புதிய பிரவேசங் களையும், புதுத்திருப்பங்களையும் ஏற்படுத்தி, வசதிகளையும் வளங்களையும் வங்கி, சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவராக ஆசிரியர்களை உருவாக்கக் கற்பதற்குக் கற்றல் தேர்ச்சி புதிய வழிகாட்டுகின்றது. மனிதனுடைய ஏழாவது அறிவு என எடுத்தாளப்படும் கற்பதற்குக் கற்றல் (Learning to Learn) தேர்ச்சியின் பரிமாணங்கள் பின்வருமாறு தரப்படுகின் றன. இதை ஒவ்வொரு ஆசிரியரும் முழுமையாக உள்வாங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பதற்குக் கற்றலுக்கான பிரவேசம்

## படம் I






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நூற்றாண்டின் ஆசிரியர்கள் அடிப்படை ஒழுங்குநெறி நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவதற்கும், உள்வாரியியான ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட போதனா முகாமைத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கும், பொதுசனத் தொடர்புசாதனங்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கும், தமது மாணவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும், தொடர்பு சாதனத் தகவல்களைத் தீர்க்கமாகத் தெரிவு செய்து அவற்றை உபயோகிப்பதற்கும், மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கும் மேலே குறிப்பிடப்பட்ட கற்பதற்குக் கற்கும் தேர்ச்சிப் பரிமாணங்கள் உதவிநிற்கின்றன. இவற்றின் ஒவ்வொரு அம்சத்தையும் பாடவிதானத்தினூடு தனது கற்பித்தற் கலைக் கூறுகளாக மாணவர்களுக்குப் பல வழிகளில் ஆசிரியர் வழங்க வேண்டும். இதற்கு மிருது நிலைத்திறன்களும் (Soft Skils) வழிகாட்டுகின்றன.

அத்தோடு, மாணவர்களிடையே காணப்படும் அடிப்படை நிபுணத்துவங்கள், மனப்பாங்குகள், படைப்பாற்றற்றிறன், புதுமைகாணல் என்பவற்றின் சிறப்பம்சங்கள், பல்துறைப்புலமை, மாறும் நிலைக்கேற்ப அமைதல், கொள்ளளவை அறிந்துகொள்ளல், விமர்சனப்பாங்கு, பிரச்சனைகளை இனம்காணுதல் மற்றும் தீர்ப்புத்திறமை என்பன பற்றிய ஆற்றல் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும். புதிய தகவல் தொழில்நுட்பப்புரட்சி, பூகோளமயமாதல், புதிய சவால்கள் என்பவற்றிற்கு முகம் காட்டக்கூடிய வகையில் சமூக மாற்றத்தில் ஒரு புதிய பங்காளராகவும் ஆசிரியர் மாறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய பரிமாணங்களின்மூலம் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்ப அலை மூலம் நிகழும் அழுத்தங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதோடு, எதிர்காலத்திற்கும் அது மையப்படுத்தப்பட வேண்டும். உலக நிகழ்வுகள்மூலம் எல்லையற்ற ஓர் உலகம் தோன்றியதோடு, தகவற் தொழில்நுட்பம் மூலம் உலகளாவிய அறிவிற்கு முன்பு எட்டாத வகையிலான நுழைவொன்றை ஏற்படுத்தியுள்ளது. இந் நுழைவுப் பிரவேசங்கள் காரணமாக ஆசிரியர்களுக்குத் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் சகல மட்டங்களிலும் கல்வியின் புதுவியலாளர்களாக மிகப் பெரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் கோளமயமாதல், தகவற்றொழிற்றுறையின் செல்வாக்குகளில் பலமாற்றங்கள் நிகழ்கின்ற போதிலும், எமது பாடசாலை முறையின் மிகமுக்கிய வளநபராக ஆசிரியர் எமது சமூகத்தில் தொடர்ந்தும் நிலைத்துக் காணப்படுவார். எம்மால் பாதுகாக்கப்பட்டுவரும் விழுமியங்கள், என்பன கோள மயமாதலால் அழிந்து போவதற்கு இடமளிக்காது மனிதத் தன்மைகளை வளர்த்தலுக்கும், கல்வியை விற்பனைச் சந்தை யாகக் கருதி பிரவேசித்தலுக்குமிடையேயும், பாரம்பரீய விழுமியங்களுக்கும் அத்துடன் புதிய வளர்ச்சிகளிடையேயும் சமநிலைத் தன்மைகளை ஏற்படுத்தும் அதிக உன்னதமானவர் ஆசிரியராகவே இன்றும் உள்ளார்.

இவ்வகையில் கற்பிக்கும் கலையான ஆசிரியத்தில் புதிய பிரவேசங்களுக்கான விபரங்களாக:

- கல்வி முறைக்கும், சமூகத்திற்கும் உலகளாவிய தகவற்தொழில்நுட்பம் போன்ற புதிய வளர்ச்சிகளாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் அழுத்தங்கள் அதனால் ஆசிரிய கல்வியில் ஏற்படும் பலாபலன்கள்.

- சமூகத்திலும், நாட்டிலும், சர்வதேசத்திலும் தற்பொழுதும் எதிர்காலத்திலும் கல்வியின் புத்தாளர்களாக ஆசிரியர்கள் காணப்படல்.
- சமூக மாற்றங்களின்போது ஆசிரியர்கள் சமூக மாற்று முகவராகச் செயற்படல்.
- கல்வி முறையின் சீரமைப்புச் சட்டகத்தினுள் ஆசிரியர் பங்களிப்பை மீண்டும் உறுதிப்படுத்தல்
- ஆரம்பக் கல்வியும், இடைநிலை - உயர்கல்வி, தொடர்கல்வியும், தொடர்ச்சியான வாழ்நாட் செயற்பாடொன்றாக விளக்கிக்காட்டும் ஒன்றிணைந்த ஆசிரியர் கல்விமுறை ஒன்றை விருத்தி செய்தல்.

ஆசிரியத்துவம் மிகவும் பரந்துபட்ட, சவால்களையுடைய, சிக்கல் வாய்ந்த பணியாக மாறி வருகின்றது. அணுக்கதிர் வீச்சை நிகர்த்த வலுவும், சுப்ப கணினியை நிகர்ந்த ஞாபகதிறனும், தந்திரம் மிக்க ஒரு நாட்டின் தூதுவரின் ஆற்றலை நிகர்த்த இராஜதந்திரமும், தாயிலும் மேலான அன்பும், இயேசுகிறிஸ்துவைப் போன்ற இரக்கமும் கௌதமபுத்தரைப் போன்ற ஞானமும், நபிகள் நாயகத்தைப் போன்ற திண்மையும், சுவாமி விவேகானந்தரைப் போன்ற ஆன்மீக சக்தியுமுடையவரே ஆசிரியத்தைச் செப்பமுற செய்ய முடியும். அதற்கு வழி ஆசிரியர் தொடருறு ஆசிரியர் கல்வியை (Continuing Teacher Education) மேற்கொள்வதும், சுயாதீனமாகக் கற்பவர் (The Autonomous Learner) ஆக இருந்து தனது வாண்மையை உயர்த்தவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீனமாகக் கற்பவர்

## The Autonomous Learner

### படம் -2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயாதீனமாகக் கற்றல் மிக உயர்ந்த ஒரு நடத்தை மாற்றமாகும். துருவி ஆராயும் செயற்பாட்டில் அடிப்படையான விதிகளைப் புரிந்து கற்கும் போது இது நிகழ்கின்றது. கற்றலிற் சுய ஆட்சித் தன்மையை வளர்ப்பதாகவும் உள்ளது. மேலும் ஒருவர் எதனைக் கற்றாலும் அக் கல்வி காலத்திற் கேற்பப் புதுப்பிக்கப்படலும், மீளாயப்படலும் வேண்டும். இதற்கு ஒருவர் தம் அவதானத்தைப் பேணுவதில் விழிப்புணர் வும், நுண்ணறிவும், திறமையும் உடையவராக இருப்பதோடு; ஒரு குறித்த நிலைமையில் அவசியமாகின்ற விடயங்களை விடாமுயற்சியுடன் கவனிப்பதற்கு விருப்ப மடையவராகவும், சுயாதினமாகக் கற்கும் திறனுடையவராகவும் இருப்பாரே யானால் புரட்சிகரமான முகாமைதுதவ தந்திரோபாய ஆற்றல்களைப் பெறுவார். இப்பேறு ஆசிரிய வாண்மையை உயர்த்தும். மாணவர் கற்றலை வினைத்திறனாக்கும். சுயாதீனமாகக் கற்றல் ஆசிரியர் கல்வியின் ஒரு பரிமாண மாகவே உள்ளது.

இன்று ஆசிரியர்கள்அறிவையும் விளக்கத்தையும் பரப்புபவர்களாக நோக்கப்படுவதில்லை. மாறாக அவர்கள் மாணவர்களிடையே; தாமாகச் சிந்திப்பதற்கும், தமக்காக சுயாதீனமாகக் கற்கவும், செயற்படுமான திறன்களை ஏற்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் விளைபவர்களாக உருவாக்க நோக்கப்படுகின்றனர். ஆசிரியர் கல்வியின் புதிய பிரவேசங்களாக: ஆசிரியர் கல்வியின் பண்புசார் தரமும் மாணவர்களது கற்றலும் பெருமளவிற்கு ஆசிரியர் கல்வியின் பண்புசார் தரத்திலே தங்கியுள்ளது. ஆசிரியர் கல்வியிலே எல்லா வகையான கல்வி முன்னேற்றத்திற்கும், புத்தாக்கங் களுக்கும் அடிப்படையாகவுள்ள உந்துசக்தியாக பண்புசார் தரம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தற் கலை, மகிழ்ச்சியூட்டும் கலைச் செயற்பாடாகும். ஆக்க மலர்ச்சிகொண்ட செயற்பாடாக இது அமைந்துள்ளது. புதிய புதிய நுண் உபாயங்களையும், மொழிசார்ந்த மலர்ச்சிகளையும் ஆசிரியர் உருவாக்கி வைக்க அவர்களுக்கு வழங்கும் கல்வியே வழிகாட்டுகின்றது. ஆசிரியர் கல்வியானது கற்போனின் இயல்புகளைக் குறைத்து விடாது. அடிப்படைக் கல்விக் கொள்கைகளைத் தற்போதுள்ள பாடசாலை நிலைமைகளுக்கேற்ப பிரயோகிப்பது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடியவர்களாகப் பயிற்றுவிக்கவேண்டும். எனவே, ஆசிரியர்களின் தொழில்சார் கல்வியானது கற்பித்தல் முறைமைகளையும், கற்றல் - கற்பித்தல் துணைப்பொருட்களின் முறையான பாவனையையும் தொடர்புபடுத்துவதாய் அமைய வேண்டும். இது இளம் கற்போருடன் வேலையில் ஈடுபடும் மறைகளை விதப்புரை செய்வதாய், அவர்களது உடனடிப் பிரச்சினைகளுக்கு விடையைத் தேடிக்காண உதவுவதுமானதோர் ஆசிரியர் கல்வி முறையை வேண்டிநிற்கின்றது. எனவே அசிரியர் கல்வியானது தமது வகுப்பறைகளில் சிறப்பான கற்பனா சக்தியோடும், நல்ல வினைத்திறனோடும் கடமையாற்றத் தேவையானதான அகக்காட்சியும் திறனும்பெற ஆசிரியர்களுக்கும் உதவ வேண்டும்.

**ஆசிரியர் கல்வி**

புதிய உலக ஆசிரியர் கல்விச் செல் நெறிகளில் 21ம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றிய சர்வதேச ஆணைக்குழு (International Commission on Education) யுனெஸ்கோ நிறுவனத்திடம் சமர்ப்பித்துள்ள 'கற்றல் உங்களுடைய வளமாகும்' (Learning Treasure Within) என்ற ஆவணத்தில்: கற்பித்தற் கலைக்குப் புதிய பிரவேசங்களும் வழிகளும் காட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. இதன்படி ஆசிரியர்களுக்கு முன் - சேவை (Preservice) சேவையிலிருக்கும் காலத்திலேயே (on the job) தொடர்பயிற்சிகள், சேவைக்கு அண்மித்ததாக (Close to the job) கள அமர்வுகள், சேவைக்குப் புறம்பான (off the job) பயிற்சிகள், சேவைக்காலப்பயிற்சிகள் (in service) ஆசிரியர் தொடருறு கல்வி (Continuing Teacher Education) என்றவாறாகப் பல வகைகளில் ஆசிரியர் கல்வி விரிவாகியுள்ளது. இலங்கை யிலும் சர்வதேச ரீதியிலும் இன்று ஆசிரியர் தொடருறு கல்விக்கு மிகுந்த முககியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது.

**தொடருறு ஆசிரியர் கல்வி**

ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சியளிக்கும் நோக்கில் தொடருறுகல்வி மிகுந்த முக்கியத்துவமுடையது. சேவைக் காலப் பயிற்சியிலிருந்து வேறுபட்டது. பயிற்சியானது ஆசிரியர்கள் பயிற்சியின் பின் எவ்வாறு வகுப்பறைகளில் கற்பித்தல் வேண்டும் என்ற அம்சத்துடன் நேரடித் தொடர் புடையது என்ற அளவுக்குப் பயனுடையதாகக் கருதப்படு கின்றது. விரும்பத்தகு கற்பித்தலைச் செயற்படுத்துவதற்கான செயல்முறைகளையும், விசேட கற்பித்தற்றிறன்களையும் சாத்தியமாக்குவதில் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்ட கற்பித்தல் குறிக்கோள் விடய, பொருள் கற்பித்தல் முறைகள் என்பன ஆசிரியர் கல்வியில் நற்பயனுடையது எனக் கருதப்படுகிறது. இது அசிரியர் பயிற்சியில் தயார்ப்படுத்தும் நுட்பத்தைப் பிரயோகிக் கும் ஒரு முறையாகவே உள்ளது.

மாறாகத் தொடருறு கல்வியானது ஆசிரியர்களது தொழில்சார் வளர்ச்சிக்கு உறுதுணையாகவே அமைவதோடு, ஆசிரிய வாண்மையை உயர்த்தவுமுதவுகிறது. முன் தீர்மானிக்கப்பட்ட முறைகளிற் கற்பிக்கத் தயார்ப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிலும் பார்க்க அவர்தம் தொழில்சார் விருத்திக்கு சாதகமான நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம் இயல் தகைமையுடையதாக்கும் செயன்முறையின் கருத்தாகவுள்ளது. இது கற்பித்தற் கொள்கைகள் செயல்முறைகள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கும். இது உள்ளீடுகளின் பெறுமதி ஆசிரியர்களைத் தம்மிடையே இடைத்தாக்கம் அடைவதாகச் செய்யுமே அன்றி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுப்பதாக அமையாது.

தொடருறு ஆசிரியர் கல்வியானது தற்போது பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பிரயோகிக்கக் கூடியது. இக்கல்வியானது நேரடியான தொடர்பாடற் கற்கை நெறிகளில் பங்குபற்றுதலின் மூலம் அல்லது (தொடர்பாடல் வகுப்புக்களை உள்ளடக்கிய) தொலைக்கல்வி முறைமூலம் கொடுக்கப்படலாம். வரையறைக்குட்பட்ட தகைமை கொண்டோருக்கான அடிப்படைக் கற்கைநெறி தொடக்கம் உயர்பட்டங்களுக்கு இட்டுச்செல்லும் விசேட கற்கை நெறிகள் வரை பல்வேறு மட்டங்களில் தொடருறு கல்வியை வழங்கலாம். இக்கல்வி பின்வரும் நான்கு முறைகளில் தற்போது வழங்கப்படுகிறது.

1) தரமேம்பாட்டுக் கற்கை நெறிகள் (Upgrading courses): இதன்மூலம் ஆசிரியர்களுக்கு அமைக்கப் பட்ட கற்கை நெறிகளை வழங்குவதன்மூலம் அவர்தம் பாடவிடயம், முறையியல்கள் தொடர்பான நிபுணத்துவ அறிவை மேம்படுத்துதல், தொடர்கல்வியினூடு தொடர்ச்சியான வாழ்நாட் செயற்றொடராக ஆசிரிய கல்வி முறையை விருத்தியாக்க இது வழிகாட்டும். பொதுவாக தொடர் பாடல் வகுப்புக்கள், குறுங்கால வதிவிட வகுப்புக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்கல்வி முறைமை மூலம் மூன்றுவார 15 மொடியூல்கள் கால அளவுடன் தர மேம்பாட்டுத் தொடர்கல்வி கற்றைநெறிகள் முறைமைப்படுத்தப்படுகின்றன. இது இலங்கையில் தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வியற் கல்லூரிகள் மூலம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவான தகைமைச் சான்றுதலுக்கு உரித்துடையதாகும்.

2) தகமை விருத்திக் கற்கைநெறி (Broadining courses) இக் கற்கை நெறி மூலம் ஆசிரியர்களது மேலதிகத் தகைமைகள் விருத்தியாக்கப்படுவதுடன் கல்வியியல் உயர் தகைமைத் திறன்கள், ஆய்வுக்களுக்கான வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும் இத்தொடர் கல்விக் கற்கைநெறிகள் ஒன்று தொடக்கம் மூன்றுவரை நீடிக்க லாம். பல்கலைக்கழகங்கள், தேசியகல்வி நிறுவகம், கல்வியியற் கல்லூரிகள் இக்கற்கை நெறிகளை வழங்குகின்றன. இவை B.Ed (கல்வி மாணி), M.Ed (கல்விமுதுமாணி) போன்ற பாடநெறிகளாகும்.

3) மீள்பயிற்சிக் கற்கைநெறி (Re- training courses) விசேட துறைப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை மையமாகக் கொண்டு அவர்களுடைய கற்பித்தல் புலைமையை வலுவாக்கப் பயிற்சிநெறி வழங்கப்படும். குறிப்பான பாடத்துறைகளைக் கற்பிக்கும் அசிரிய பயிற்சியை ஐந்து வருடங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்பவர்களுக்கு இப்பாடநெறி பின்பற்றப்படும். குறிப்பானபாடத் துறைகளின் தன்மைக்கேற்ப மீளப் பயிற்சிக்காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடம்வரை வேறுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம், கற்பித்தல் டிப்புளோமா சான்றிதழ் தகைமைக்கு உயர்வான சான்றிதழ் வழங்கப் படும்.

ஆசிரியர்களின் அவசிய வாண்மைத்துவத் தேவைகளை இனம்கண்டு அவர்களின் தொழில்சார் தகைமைத்துவம் சீரோங்கிடப் பலப்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு ஆசிரியருக்கும் பிரதி வருடமும் இப்பயிற்சி நெறிகள் வழங்கப்படும். அரை நாளிலிருந்து இரண்டுநாள்வரை நீடிக்கும் ஆசிரிய தொடர்கல்வி பயில்வுகளில் வாண்மையுள்ள ஆசிரியர்கள், நல்லதிபர்கள், கல்வியியலாளர்கள வளவாளர்களாகச் செயற்படுவார். இப்பயில்வுகள் ஆசிரிய நிலையங்களில் (Teacher center) நடைபெறும். முதற்கட்டமாக இலங்கையில் எண்பத்தி நான்கு ஆசிரிய நிலையங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. ஆசிரிய நிலையங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. ஆசிரிய நிலையத்துக்குப் பொறுப்பாக ஒரு முகாமையாளர் இருப்பா. மேலும் ஆசிரிய நிறுவனங்கள் மூலமாக வதிவிடத்துடன் கூடிய (மூன்று வாரங்கள் முதல் மூன்று வாரங்கள்வரை) தொடருறு பயில்வுகளும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. தொடருறு ஆசிரியர் பயியல்வுகளுக் கான வரிகாட்டல்களையும் தேசிய கல்வி நிறுவகம், தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை, கல்வியமைசசு, மாகாய, வலய, கோட்ட கல்விப் பிரிவுகள் மேற்கொள்கின்றன. கற்பிக்கும் கலையான ஆசிரிய வாண்மையைப் பல்பரிமாணங்களில் உயர்த்தும் நோக் காகவே ஆசிரியர் தொடருறு கல்வி உள்ளது.

**தொடருறு ஆசிரிய கல்வியின் அவசியம்**


1. கல்வியில் தர மேம்பாட்டை ஏற்படுத்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. புதிய மாற்றங்கள், சீர்திருத்தங்கள், புத்தாக்கங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்த,
3. ஆசிரியர் வாண்மையை மேம்படுத்த,
4. கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர் களுக்கு ஏற்படும் நடைமுறைப் பிரச்சினை களையும் - சந்தேகங்களையும் நிவர்த்தி செய்வதற்கு,
5. கல்வி நடைமுறைகள் பற்றிய பின்னூட்டல்களைப் பெறுவதற்கு,
6. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களைத் தீர்ப்பதற்கான மிக அவசியமான தேவைகளைத் தீர்ப்பதற்கு.

**தொடருறு ஆசிரிய கல்விச் செயலொழுங்கு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1. பயிற்சித் தேவைகளை இனம் காணல் | ஆசிரியர்களுக்கு எவ்வெவ் விடயங்களிற் பயிற்சி தேவை எனத் தீர்மானித்தல்.<br>உ+ம் - குறைந்த செலவில் கற்பித்தல் உபகரணங்களைத் தயாரித்தல்.<br>- நவீன கற்றல் - கற்பித்தற் செயன் முறைப்பிரயோகங்கள்.<br>- மகிழ்ச்சிகரமான - செயற்பாடுகளுடன் கூடியகற்றற் கவின் நிலை. |
| 2. குறிக்கோள் களைத் தீர்மானித்தல் | தேவையை நிறைவேற்றுவதற்கான குறிக் கோள்களைத் திட்டமிடல். |
| 3. பயிற்சியைத் திட்டமிடுதல் | எதை? எங்கே? எப்போது? யாருக்கு? எப்படி? எவ்வளவு காலத்திற்கு? யாரால் வழங்கப்படுவது? என்பதை தீர்மானித்தல்<br>- குறிக்கோள், இடம், காலம், பங்கு பற்றுவோர், காலஅளவு, வளஆளணியினர் பற்றிய விபரங்கள். |
| 4. பயிற்சியை வடிவமைத்தல் | பயிற்சி முறையியல்கள் திட்டமிட்டதன் அடிப்படையில் ஒவ்வொருநாளும் நடை பெற வேண்டிய செயலமர்வையும், எவ்வாறு நடத்துவதென ஒவ்வொரு வள ஆளணியினரும் ஆயத்தம் செய்தல் (பாடக்குறிப்பு எழுதுவதுபோல) பின்வரு வன உள்ளடக்கப்படலாம்.<br><br>விரிவுரை, கலந்துரையாடற் செயற் பாடுகள், வெளிக்கள ஆய்வு, ஒப்படை, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துபார்த்தல், பரீட்சித்தல், பரிசோதனை செய்தல் போன்றவை.

**உபகரணங்கள் - தர உள்ளீடுகள்**

மேன்தலை எறியி (OHP), பக்கப்புரட்டி (Flip chart), கரும்பலகை, வெண்பலகை, மென்பலகை (Soft board) காட்டிசிப் பலகை (Display board), வழுக்கி எறியி (Slide Projector), வீடியோ சாதனங்கள் (Video equipment), ஒலிப்பதிவுச் சாதனங்கள் (Audio equipment), பல் ஊடக எறியி (Multi media Projector), உருப் பெரிதாக்கி (Episcope)

5. பயிற்சியை நடைமுறைப் படுத்தல்

திட்டமிட்டபடி குறிக்கோள்களை அனுசரித்து உரிய வளங்களுடன் ஏற்ற முறைகளைக் கையாண்டு பயிற்சியை நடைமுறைப்படுத்தல். செயற்பாடுகளுடன் கூடிய பங்குபற்றல் நடைமுறைகளுடன் உற்சாகத்துடன் ஈடுபடக்கூடிய தந்திரோபாயங்களைக் கையாளுதல், அனைவரையும் ஒருங்கிணைத்து ஈடுபடச் செய்தல், செயற்பாடுகளின்போது அவதானித்துக் கணிப்பீடு செய்தல்.

6. மதிப்பீடு செய்தலும் பின்னூட்டலும்.

- பங்குபற்றுனர்களில் துலங்கல்களை அவதானித்துக் கணிப்பீடு செய்தல்.
- படிவங்கள் மூலம் கணிப்பீடு செய்தல்.
- அபிப்பிராயம் பெறல்.

  (தெளிவு பெறாத பகுதிகளைப் பற்றிப் பின்னூட்டல் பெற்றுப் பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கணிப்பீட்டு மதிப்பீட்டுத் தொடர் பாடல்களில் இடம்பெற வேண்டிய முக்கிய விடயங்களாக: பங்கு பற்றுனர்களின் கருத்துக்களை தெளி வாக விளக்குதல், அவதானமாகச் செவிமடுத்தல், கண்ணோடு கண் ணோக்கி - மெய்ப்பாடுகளை அவ தானித்து, கற்றல் உணர்வுகளை ஒன்றிக்கும்போது கணிப்பிடல், தேவை யான வழி காட்டல்களை வழங்கல்.

இத் தொடருறு ஆசிரியர் கல்விச் செயலமர்வுகளும், அதனோடு தொடர்புடைய பயில்வுகளும் வளர்ந்தோரைப் பயிற்றுவித்தலுடன் தொடர்புடையவை. வளர்ந்தோரைப் பயிற்றுவித்தல், மாணவர்களைப் பயிற்றுவித்தல் போன்ற தல்ல. அவ்வாறே, வளர்ந்தோர் கற்கும் முறைகளும், மாணவர்கள் கற்கும் முறைகள் போன்றதன்று. எனவே, வளர்ந்தோரைப் பயிற்றுவிக்கும், வளர்ந்தோர் கற்றல் முறைகள் பற்றிய அறிவு அவசியமானவை. இதனை ஆசிரியர்கள் கட்டாயமாக அறிந்திருப்பதுடன், சுயமாகத் தமது வாண்மையை உயர்த்திக்கொள்ளப் பயன்படுத்தியும் கொள்ளலாம். தொடருறு ஆசிரியர் பயில்வுகள் ஏனைய வற்றைவிடப் பயனுறுதி வாய்ந்ததாக, சுதந்திரமாக, ஆழ்ந்த அகன்ற கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகளுக்குப் பல்வேறு தரப்பினர்களின் அனுபவங் களைப் பெறக்கூடிய களங்களாக இருப்பதால், கவர்ச்சியான, பயன்பாடுள்ள செயலமர்வுகளாக வுள்ளன.

இதற்குப் பல்வேறு கற்றல் - கற்பித்தல் உத்திகளும் முறையியல்களும் பல்வேறு சந்தர்ப்பங்களும் தேவைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பப் பயன்படுத்தபடுகின்றன. இவற்றில் அனுகூலங்களும் - பிரதிகூலங்களும் காணப்படலாம். இவற்றிலும் வினைத் திறன்களை ஏற்படுத்த பல்வேறு நியாயிப்புகள்மூலம் உயர் அடைவைப் பெறமுடியும்.

## கலந்துரையாடல் (Discussion)

ஒரு விடயம் தொடர்பாகப் பலரின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் ஒரு நடைமுறை பல்வேறு கோணங் களிலிருது விடயம் நோக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, பொதுத் தீர்மானம் எடுக்கப்படும். பலவழித் தொடர்பு குழுநிலையில் மிக உபயோகமானது. தனிநபர் கருத்துக் களுக்கு மதிப் பளிக்கப்படுகிறது. பங்குபற்றுவோர் தீர்மானம் முதன்மை பெறுகின்றது. சகலரும் விளக்கம் பெற உதவுகிறது. நடைமுறைத் தேவைகளுக்குப் பொருந்தத் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. வினாக்கல் கேட்டல், தர்க்கித்தல், விமர்சித்தல், நியாயப்படுத்தல், தீர்மானித்தல், முடிவுக்கு வருதல் போன்றவை கலந்துரையாடலின் அம்சங்களாகும்.

## அணிக்கலந்துரையாடல் (Panel Discussion)

இது ஒருவகைக் கலந்துரையாடலாகும். சிறப்புத் தேர்ச்சி பெற்ற அணியினர் கருத்துக்களை முன்வைப்பர். சபையிலுள்ளோர் வினாக்களைக் கேட்பர். புதிய விடயம் ஒன்றை அறிமகம் செய்வதற்கு இந்த மறை பயனுள்ளது. விடயம் பற்றி ஐயம் திரிபுற விளக்கம் பெறுவதற்கு இது வாய்ப்பானது.

## சிந்தனைக் கிளறல் (Brain storming)

ஒரு வினாவை அல்லது ஒரு பிரச்சினையை முன் வைத்து பங்குபற்றுவோரின் சிந்தனையை முடுக்கிவிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் விரிசிந்தனை ஏற்படுகிறது. சகலரின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. சரி, பிழை, பொருத்தப்பாடு பற்றி உடன் கவனிக்கப்படுவதில்லை. ஆராய்விற்கு இடமளிக்கப் படுகின்றது. எனினும், ஈற்றிற் கருத்துக்கள் தொடர்புபடுத்தப் பட்டு, நியாயப்படுத்தி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்க உதவுகின்றது.

## குழுநிலைச் செயற்பாடுகள் (Group Activities)

பங்கு பற்றுநர்களைச் சிறு குழுக்களாக்கி (5-8பேர்) செயற்பாடுகளில் ஈடுபடுதலை இது குறிக்கும்.

- விரைவான கற்றலுக்கு,
- ஆழமான, விளக்கமான கற்றலுக்கு,
- சகலரும் ஈடுபாடு கொள்வதற்கு,
- பொதுத்தீர்மானம் எடுப்பதற்கு,

இது பயன்படும். இது பகுத்து ஆராய்தல், தகவல் சேர்த்தல், பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், ஆலோசனை களை முன்வைத்தல் போன்ற சந்தர்ப்பங்களுக்குப் பொருத்த மானது.

## ஒப்படை வழங்கல் (Assignments)

ஒரு விடயத்தைப் பல கோணங்களில் இருந்து நோக்கி, பல்வேறு தகவல்களைப் பெற்றுத் தீர்மானம் எடுக்க ஒப்படை வழங்குதல் உகந்தது. ஒப்படையைத் தனியாகவும், குழுவாக வும் மேற்கொள்ளலாம். செயலமர்விற்கு முன்னும் பின்னும் ஒப்படை வழங்கலாம். செயலமர்விற்கு முன் வழங்குவது, தகவல்கள் சேகரித்து அவற்றைச் செயலமர்வுகளில் சமர்ப்பிப் பதற்கும், செயலமர்விற்குப் பின் வாங்குவது, கற்றவற்றை நடைமுறைப்படுத்தவும், பின்னூட்டல் செய்யவும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலரும் ஈடுபடவும் , குறுகிய காலத்தில் பரந்த விடயத்தை விளங்கிக்கொள்ளவும், மீள வலியுறுத்தவும் வாய்ப்பானது.

### விடய ஆய்வு (Case Study)

சிக்கலான ஒரு பிரச்சினைக்குத் தீர்க்கமான தீர்வு எடுப்பதற்கு விடய ஆய்வுமுறை உகந்ததானது. இதனைத் தனியாகவும், குழுவாகவும் மேற்கொள்ளலாம். முன்பு மேற் கொண்ட விடய ஆய்வுகளைத் தழுவி, மேலும் எழுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அணுக முடியும். செயலமர்வு ஒன்றில் தீர்வுகாண முடியாத ஒரு பிரச்சினைக்கு விடய ஆய்வுமுறை மூலம் தீர்வு காணலாம். இது வகுப்புமட்டச் செயல்முறை ஆய்வுக்கு (Action Research) ஆசிரியர்களுக்கு உதவ முடியும்.

### பாத்திரமேற்று நடித்தல் (Role Play)

பாத்திரமேற்றல் உடனடியாக எதுவித ஆயத்தமு மின்றி முன்வைக்கப்படுவதொன்றாகும். ஒருவரையோ, பலரையோ அல்லது ஒரு நிகழ்வையோ உணர்வுபூர்வமாக முன்வைப்பதற்கு இது சிறந்த ஓர் உத்தியாகும். தெளிவான விளக்கத்தையும், தன்னம்பிக்கையையும், செயலமர்வில் இது ஒருவித உற்சாகத்தையும் ஏற்படுத்தும். சில ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், மாணவர்கள், பெற்றோர் போன்றோரின் போக்குகளை வெளிப்படுத்த பாத்திரமேற்றல் உவப்பான ஓர் உத்தியாகும். பாத்திரமேற்றல் மூலம் ஒருவரது நடத்தைகளைப் பல கோணங்களில் நோக்கித் தீர்க்கமான தொரு முடிவை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினை தீர்த்தல் முறை (Problem Solving)

பிரச்சினை ஒன்றை முன்வைத்து யாவரும் தீர்வுகாண முயற்சிப்பதன் மூலம் முடிவுக்கு வருதல் பிரச்சினை தீர்த்தல் முறையாகும். பிரச்சினையைப் பயிற்றுநரும் முன்வைக்க லாம். பங்குபற்றுவோரும் முன்வைக்கலாம். யாவரும் கருத்துக் களைப் பரிமாற்றியே முடிவுக்கு வருதல் வேண்டும். பிரச்சினைகள், செயலமர்வு விடயங்கள் தொடர்பாடலாக இருக்கலாம். வகுப்பறைக் கற்றல் சார்ந்தவையாக இருக் கலாம். பாடசாலை சார்ந்தவையாக இருக்கலாம்.

## செய்துகாட்டல் முறை (Demonstration)

ஏதாவது ஒரு பொருளைத் தயாரிப்பதற்கு வெறுமனே உபதேசம் செய்யாமற் பொருளைத் தயாரித்துக் காட்டுவ தோடு விளக்கமளித்தலும் செய்துகாட்டல் முறையாகும். பயிற்றுநர் செய்துகாட்டும்போது அதே படிமுறைகளில பங்குபற்றுபவர் களும் செய்தல் வேண்டும். செயல்பாட்டில் தனியாகவும், குழுவாகவும் ஈடுபடலாம். கற்றல், கற்பித்தல் உபகரணங்களைத் தயாரிப்பதற்கு இது மிகப் பொருத்த மானது.

## கண்டுபிடித்தல்முறை (Discovery)

சில விடயங்களைச் சார்ந்த கோட்பாடுகளை, நேரடியாகப் போதிக்காது, பங்குபற்றுனர்கள், தாமாகவே கண்டறிய வழிநடத்தல் கண்டுபிடித்தல் முறையாகும். இதன் மூலம்

- சுயமாக திடமான முடிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
- பங்குபற்றுநர் பூரண விளக்கம் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பங்குபற்றுநரை ஊக்கப்படுத்தல் சிறந்தமுறை,
- பங்குபற்றுநர் புதியனவற்றைக் கண்டுபிடிக்கத் தூண்டப்படுதல்.

**வெளிக்கள ஆய்வு (Field Study)**

ஒரு குறிப்பிட்ட விடயத்தைச் செயலமர்வு மண்டபத்துள் இருந்து நோக்காது சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரடியாகவே சென்று அவதானித்துத் தகவல் பெறுவது வெளிக்கள ஆய்வாகும்.

உதாரணம் - நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளின பிரச்சினைகளைஅறியப் பாடசாலைக்குச் சென்று பார்வையிடல்.


- அகதிமுகாம்பற்றி அறிய அகதி முகாம்களுக்குச் செல்லுதல்.

இவ்வாறாக ஆசிரியர்களுடைய செயலாற்றுகைகளைப் பல்வேறு பரி மாணங்களில் விருத்தி செய் து அவர்கள் பாடசாலைகளில் எதிர்நோக்கும் பிரச் சினைகளைத் தீர்க்க பல்வேறு புதிய சந்தர்ப்பங்கள், வழி காட்டல்கள், வாண் மைத்துவப் பங்களிப்புகள் தேவையாக உள்ளன. இவை பாடசாலைகளின் வகுப்பறைகளைக் களங்களாகக் கொண்டு விருத்தியாக்கப்படவேண்டும். எமது நாட்டில் உள்ள பாடசாலை வகுப்பறைகளில் ஆசிரியர்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். இவற்றைத் தீர்ப்பதற்கு வாண் மைத்துவ ஆற்றலும் தொடர் பயிற்சிகளும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுபவ ஏணி**




இங்கு முதலாம் நிலையில் B பகுதியிற் அனுபவம் ஏதும் அற்றநிலை காணப்படுவதுடன், A பகுதியில்பல பிரச் சினைகளும், தேவைகளும் காணப் படுகின்றன. பயிற்சியை இரண்டாம் நிலைக்கு உயர்த்த; தேவைகள், பிரச் சினைகள் (அறியாமை) குறைய அனு பவம் கூடுகின்றது. (ஆளுமை) ஐந்தாம் நிலையிற் அனுபவம் வாண்மைத்துவப் பயிற்சிகளுடன் நிறைவடையத் தேவைகளும் பிரச்சினைகளும் அற்றுப் போகின்ற நிலை ஏற்படுகின்றது. இவ்வகையில் ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவக் கற்கையை நீண்டகாலம் மேற் கொண்டு வகுப்பறைப் பிரச்சினைகளைப் பயிற்சிகளாகப் பெற்று அவற்றைத் தீர்க்கும் வகிபாகத்தை அடையும்போது வாண்மைத்துவ ஆசிரியர்களாகப் பிரகாசிக்கலாம். இதைத் தொடர்ச்சியாகப்பேணஅவர்கள் தமது ஆற்றல்களையும் தொடருறு கல்விப் பயில்வுகளில் விருப்பத்துடன் ஈடுபட வேண்டும்.

**விவகார ஆய்வுக் கற்கை - 1**

நகரப்புறத்தை அண்டி சேரிக்குடியிருப்புக்களுக்கு மத்தியில் உள்ள பாடசாலைகளில் க. பொ. த. சாதாரண தரம் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் கூறும் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

அ) நான் இப் பாடசாலையிற் கடந்த 4 வருடங்கள் கற்பிக்கின்றேன். வந்ததில் இருந்து இங்கு கற்கும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலான பிள்ளைகளின் பெறுபேறுகள் குறைவாகவே உள்ளன. இதற்குக் காரணம் பிள்ளைகள் மக்குகளாக உள்ளதுடன், பெற்றோரும் கல்வியறிவில்லாதவர்களாக உள்ளனர். தரம் 11 இல் உள்ள பெரும்பான்மையினர் தரம் 5 அடிப்படை அறிவே இல்லாதவர்கள். நலிவான பிள்ளைகளுக்கு உதவ என்னால் முடியாது. அப்படிச் செய்தாற் பாடத்திட்டத்தைப் பூர்த்தியாக்கவில்லை. என மேலிடத்தில் இருந்து கெட்ட பெயர் வரும். மேலும், பிள்ளைகளின் பாடவேளைக்குப் பெற்றோரால் உதவ முடியாவிட்டால், எம்மால் எப்படி உதவ முடியும். நான் பாடத்தை முடிக்கின்றேன். படிக்கும் வேலை, பிள்ளை களைப் பொறுத்தது. எல்லோரையும் சித்தியடையச் செய்ய என்னால் முடியுமா?

ஆ) எனது பாடசாலையில் கடந்த மூன்று வருடங்களாக பாட ஆசிரியர் இலலை நான் இந்த வருடமே இப் பாடசாலையில் கடமையேற்றேன். கணித பாடத்தில் மாணவர்களின் அடைவுகள் குறைவாக இருந்ததுடன், கணிதபாடத்தைக் கற்க மாணவர்கள் ஆர்வமற்றிருந்தனர். நிலைமைகளை ஆராய்ந்த நான் கணிதம் கற்பித்தலை விட கற்றலுக்கான வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங் களையும் பிள்ளைகளுக்கு அளித்தலையே மேற்கொண் டேன். இச் செயற்பாட்டிற்குப் பிள்ளைகள் சிறப்பாகத் துலங்கத் தொடங்கினர். கணித பாடத்தில் ஆர்வம் அதிகரித்தது. இயலாத பிள்ளைகளுக்கு இயன்ற பிள்ளைகள் உதவிட வழிகாட்டி அதிலும் வெற்றி பெற்றேன். அன்றொருநாள் திடீரென வந்த திணைக்களப் பரிசோதனைக் குழுவினர் பாடசாலையைத் தரிசித்தனர். என் மீது உரிய காலத்திற் பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளை விளக்கினேன். என்னுடன் முரண்பட்ட அவர்கள் சம்பவத்திரட்டுப் புத்தகத்திற் கணித பாட அலகுகள் உரிய காலத்திற் கற்பிக்கப்படவில்லை என எழுதிச் சென்றனர். தற்போது எனது பணியில் எனது ஆர்வம் குறைந்திருக்கும் என நீங்கள் கருதலாம். ஆனால், எனது பணியை மேலும் ஆர்வத்துடன் செய்ய முயற்சிக் கின்றேன்...

இ) நான் 11 ஆம் தரத்திற் கடைசி D வகுப்பிற் கற்பிக்கும் ஆசிரியர். என் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு 100 வரை பூரணமாகக் கணிதமே தெரியாது. அதையாவது கற்பிப்போம் என்றால் அதிபர் விடுகிறார் இல்லை. மாணவர்களைக் கொண்டு வாழைத்தோட்டத்தை ஆக்கவும், நீர் பாய்ச்சவும், பாத்தி கட்டவும், பூந்தோட் டம் அமைக்கவும் மற்றும் வேலைகளைச் செய்யவும் பணிக்கின்றார். பாடசாலைக்கு வரும் நாட்களில் மாணவர்கள் ஒரு சொல்லையாவது படிக்கவேண்டும் என்பது என் அவா. பெற்றோர்கள் அக்கறையில்லை. அதிபரோ அவர்கள் அடுத்த வருடம் குடும்பத் தொழிலான மீன்பிடியில் இறங்கிவிடுவர். பெண்கள் திருமணம் செய்வர். அவர்களுக்கு ஏன் படிப்பு என்கிறார். மேற்பார்வையாளர் பாடசாலையைத் தரிசித்துவிட்டு செழித்துள்ள பூந்தோட்டம், வாழைத் தோட்டத்தைப் பார்த்து அதிபரைப் புகழ்ந்து சென்றார் கள். ஆனால், எனது வகுப்பில் கருகிவரும் மாணவப் பூக்கள் பற்றியார் சிந்திக்கப்போகிறார்கள்.

**வினாக்கள்**

1) பாடத்திட்டங்களை உரிய காலத்திற் பூர்த்திசெய்தல் கல்விக் குறிக்கோள்கள் ஆகுமா? காரணம் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) பாடசாலைகளில் வழங்கப்படவேண்டிய கல்வித் தேர்ச்சிகள் தொடர்பான விளக்கமின்மைகள் மேற்குறித்த விடயக் கற்கைமூலம் எவ்வாறு புலனாகின்றது.

3) நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பாடத் திட்டங்களைக் கற்கையில் ஒரே முறையையும் காலத்தைப் பின்பற்ற வேண்டுமா?

4) மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை உடைய பாடசாலை களில் மேற்பார்வை வழிகாட்டுநர்களின் அணுகுமுறை எவ்வாறானதாக இருக்க வேண்டும்?

5) பாடசாலைக்கே உரிய விசேடமான குறிக்கோள்களை உருவாக்கிக் கொண்டுவாண்மைத்துவ ஆசிரியராக கற்பித்தலில் ஈடுபட முடியுமா?

6) மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை உடைய வகுப்பறை களில் எவ்வாறு கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என வாண்மை உள்ள ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் அளிக்கக்கூடிய அறிவுறுத்தல் என்ன?

மேற்படி விவகார ஆய்வில் ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துக்கள் பெரும்பாலான பாடசாலைகளில் கேட்கப்படு கின்ற குரல்களாகவே உள்ளன. தேசிய கல்விக் குறிக்கோள்கள் வாயிலாகப் பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டிய தேர்ச்சிகள் தொடர்பாக ஆராயும்போது, பல நலிவுகளும், பல பிரச்சினைகளும், போதாமைகளும், தெளிவின்மைகளும் உள்ளமை புலனாகின்றது. தேசிய கல்விக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகப் பாடசாலைகளால் ஆக்கப்பட வேண்டியவை எவை என்பது பற்றிய பிரச்சினைகள், முரண்பாடுகள், அதிபர் ,ஆசிரியர், கல்விப்பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், கல்வியியலாளர்களிடையே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இதன் தொடர்ச்சியாகப் பாடசாலைக் கலைத்திட்டம் அதை அமுலாக்குதல் தொடர்பான பிரச்சினைகளும் இவ்விவகார ஆய்வில் எழுகின்றது.

**பாடசாலைகளில் கல்விக் குறிக்கோள்கள்;** தேசிய கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றலும், பாடசாலைக் கலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலுமாகும். நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகள்தொடர் பாகவே மிக அவதானமாக இருக்க வேண்டும். அவ்வாறான பிரச்சினைகளே இவ் விவகார ஆய்வில் எழுந்துள்ளன. முக்கியமாக ஒரு வாண்மையுள்ள நல்லாசிரியர், முயற்சியால் ஊட்டப்படும் பிள்ளைகள் எத்தகைய பாடசாலையில் கற்றாலும் வாழ்க்கைகத் திறன்களை இனங்கண்டு, நாட்டினதும் வீட்டினதும் அபிவிருத்திக்கு ஏதோ ஒரு வகையில் பங்காளனாக மறுவான். இதற்கு ஒவ்வொரு பாடசாலைகளும் அதனைச் சார்ந்தோரும் வழிகாட்ட வேண்டும். ஏதோ ஒரு வகையில் கல்வித் தேர்ச்சியினைப் பாடசாலை வழியே காணவேண்டும். இதற்கு ஏற்ற வகை கூறக் கூடியவராக ஆசிரியர், அதிபர், கல்விப்பணிப்பாளர்கள் இருந்தே ஆகவேண்டும், இதிலிருந்து விலகிக்கொள்ள முடியாது என்ற வகையில் இவ்விவகாரக் கற்கைக்கான விடைகளைஅணுகலாம்.

**விடைகள்**

1) இல்லை. பாடத்தில் உள்ள கற்றற் தேர்ச்சிகளை மாணவனைக் கொண்டு அடையச் செய்தலே கல்விக் குறிக்கோள்களாகும்.

2) ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துக்கள்

   1. நான் பாடத்தை முடித்துள்ளேன் படிக்கும் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுடையது.

2. பிள்ளைகள் மக்குகளாக உள்ளனர் பெற்றோர்களால் உதவமுடியாவிட்டால் என்னால் எப்படி உதவ முடியும்.

2) அதிபர்;

1. உரிய காலத்தில் பாடத்திட்டத்தைக் கட்டாயப்படுத்தி மடிக்கச்செய்தல்.

2. D வகுப்பு மாணவர்களைக் கற்கவிடாமல் வேலை வாங்குதல்.

3) மேற்பார்வையாளர்கள்;

மெய்யான் பாடசாலைச் சூழலை விளங்கிக் கொள்ளாமை, வகுப்பு மாணவர்களை இனங் காணாமை.

3) கல்வித் தரம் ஒரே மாதிரியாக இருந்தால் இக்கூற்று பொருத்தமானது. ஆனால், அவ்வாறான நிலை இல்லை. எனவே, ஒரே முறையையும், காலத்தையும் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தியலில் நெகிழ்ச்சித் தன்மை வேண்டப்படுகின்றது.

4) கற்பித்தல் நடவடிக்கையை விருத்தி செய்தல் (வகுப்புபறை அவதானிப்பு, குழுக்கலந்தரையாடல், தனியாள் கலந்துரையாடல், வழிகாட்டப்பட்ட கற்பித்தல், தரமேம்பாட்டு வளர்ச்சி) என்ற நோக்கிலேயே மேற்பார்வையாளரின் அணுகுமுறை அமைய வேண்டும். தற்போதைய மேற்பார்வை கற்றல் - கற்பித்தற் சந்தர்ப்பத்தின் மீதே அன்றி, தனியார் தொகுதியினரை நோக்காகக் கொண்டதல்ல. மேற்பார்வைக் குழுவினர், சந்தர்ப்பத்தை முன்னேற்றுவதை இலக்காகக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் ஒத்துழைப்புடன் உதவியளிக்கும் குழுவாக அமைதல் வேண்டும். அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் தம் கீழுள்ளவர்களை, அல்லது. வழிகாட்டல் தேவையானவர்களை விருத்தி செய்யும் அதிகார மனப்பான்மை நடவடிக்கை என கல்வி மேற்பார்வை வரைவிலக்கணம் செய்யமுடியாது என்பதையே இவ்விவகார ஆய்வு தெளிவுபடுத்துகின்றது.

5) வாண்மைத்துவ ஆற்றலும், தற்றுணிவும், வகைகூறக் கூடிய சேவையும், திறமையும், ஏனையவர்களுக்கு வழிகாட்டும் ஆற்றலும் உள்ள ஆசிரியர்களால் இயலும் எனினும், இது தொடர்பான விருத்தி நிலை எமது நாட்டில் இன்னும் ஏற்படவில்லை.

6) பாடத்திட்டங்கள் உரிய காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வமுள்ள அனைவரும், அத்திட்டத்தின் ஊடாக அனைத்துச் தேர்ச்சிகளையும் மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதில் அக்கறை செலுத்துவதுடன், பொறுப்புக் கூறுபவர்களாக இருத்தல் வேண்டும். இந்நிலையை உறுதியாகக் கொண்டு மாணவர்களின் நல்விருத்தியை மையமாகவைத்து எல்லோரும்புரிந்துணர்வுடன் நிலைமையை உணர வைத்து, உறுதியாக மாணவர்களுக்கு வழிகாட்டல், அதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல், தனது வாண்மைத்துவ வகைகூறல் - பொறுப்பேற்கும் இயல்பு, தியாகம், அர்ப்பணிப்பு ஆகியவற்றைக்கொண்ட வாண்மைத்துவ ஆசிரியர் இவ்வாறான நிலைமைகளை எதிர்நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவ வாண்மை

இன்றைய அபிவிருத்திக்கான மாற்றத்தின் மையம் பாடசாலை ஆகும். மாற்றத்தை ஏற்படுத்துகின்ற முதன்மை முகவர்களாக, வாண்மையாளர்களாக, ஆசிரியர்களும் அதிபர்களும் உள்ளனர். பாடசாலை மட்டத்திற் கல்வி அபிவிருத்திக்கு பாடசாலையில் உள்ள ஆசிரியர், அதிபர், மாணவர், பெற்றோர் ஆகியோரின் செயலூக்கத் திறனும் - சுறுசுறுப்புடனும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் யாவரும் ஒரே சமூகமாகித் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும் இடமே கற்கும் பாடசாலை ஆகும். இது மாணவர்களின் கற்றல் என்ற அடிப்படைச் செயலை விரிவாக்கும் ஒரு சமூகமாகும். பாடசாலைமட்டக் கல்வியின் நீண்டகாலப் பெறுபேறு "பாடசாலையைக் கற்றுக்கொள்ளும் ஓர் அமைப்பாக விருத்தி செய்வதாகும்." ஒரு கல்விச் செயற்பாட்டைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கணிப்பீடு செய்தல், மதிப்பீடுகளுக்கு உள்ளாதல் என்பவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்கதல் என்பவை இப்பாட சாலையிற் கூட்டுக் கற்றலை ஏற்படுத்தும். இது சுய அறிவு, ஆசிரியவாண்மை விருத்தித் தகைமைகளை பாடசாலை நிலையில் உயர்வடையச் செய்யும்.

இங்கே பாடசாலையிற் சகல செயன்முறைகளின் உயிர்த் துடிப்புக்களுக்கும் ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளும், அர்ப்பணிப்புகளும், தியாகக் கடப்பாடுகளும் காரணமாக உள்ளன. ஆசிரியர்கள் தம்மை ஒரு வாண்மையாளர்களாக உயர்த்திக் கொள்ளும் பொழுது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையும் - சமூகமும் - நாடும் உயர்கின்றது. இவ்வகையில் உயர் தொழில்வாண்மையுள்ள ஒரு ஆசிரியர் தேசநிர்மாணி (Nation Builder) என்ற தகைமையைப் பெறுகின்றார். எல்லா ஆசிரியர்களும், உயர் தொழில் வாண்மையாளர்களாக மாறவேண்டும். இங்கே தொழில் வாண்மை என்பது உயர் தொழிற்றகைமைகளைக் குறிக்கும்.

இன்றைய உலகளாவிய ரீதியிற் கற்பித்தற் கலையானது ஒரு வாண்மைத் தொழிலாகப் பரிணமித்து வருவதைக் காணலாம். அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கை போன்ற நாடுகளிற் கற்பித்தற் கலை ஒரு வாண்மைத் தொழிலாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. புதிய பிரதேசங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. கற்பித்தல் கலையானது ஒரு முழுமையான வாண்மைத் தொழில் என்பதை நிலைநாட்டுதலால் கற்பித்தலின் தரத்தில் மேம்பாட்டைக் காண்பதற்கு ஆசிரியர்கள் பெரும்பாலும் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். கற்பித்தற் கலையானது ஒரு முழுமையான வாண்மைத் தொழில் என்ற நிலையை ஏற்படுத்த ஆசிரியர்கள் முயற்சியுடன் ஈடுபடவேண்டும். மேலும், இது தொடர்பான விளக்கத்தைப் பெறுதலும் மிக அவசியமாகும். வைத்தியர், கணக்காளர், பொறியியலாளர், சட்டத்தரணிகள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் வாண்மைத் தொழில்களாக எமது நாட்டில் உள்ளன.

### வாண்மைத் தொழிலின் பண்புகள்

- பொது மக்களுக்குச் சேவையாற்றல் தொடர்பான உணர்வைக் கொண்டிருத்தல். தொழில் சார்ந்த அர்ப்பணிப்பு வாழ்நாள் முழுவதும் நீடித்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீண்டகாலச் சிறப்புப் பயிற்சி பெற்றிருத்தல், அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் மூலம் அல்லது வாண்மைத் தொழிலிற் பிரவேசிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு இருத்தல்.
- தாம் ஆற்றும் பணிகள் தொடர்பாக எடுத்த முடிவுகள், செயற்பாடுகள் பற்றிய பொறுப்பை ஏற்கத்தக்க நிபந்தனைத் தொகுதி, ஒழுக்கக் கோவைக்கு உட்பட்டிருத்தல்.
- வாண்மைத் தொழிலாளரின் தொழில்சார் பணிகள் தொடர்பாக நிர்வாகிகளை ஈடுபடுத்தல். பணிகளில் ஈடுபடும்போது சிறப்பான மேற்பார்வைக்குள்ளாக்கப் படுதலில் இருந்து சுயாதீனம் பெறல்.
- வாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களா லான சுய கட்டுப்பாடுடைய தொழில்சார் அமைப்புக்கள் இருத்தல், தனியாள் அடைவை அங்கீகரிப்பதற்கான தொழிற்சங்கங்கள் இருத்தல்.

மேற்குறிப்பிட்ட இயல்புகளுடன் வாண்மைத்துவத் தொழிலில் தாம் ஆற்றும் பணிகள் தொடர்பான சிக்கல் நிலைமைகள், நிச்சயமற்ற நிலைமைகள் போன்றவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவும். அறநெறிக் கோவை காணப்படுவதுடன் வாண்மைத் தொழிலில் ஈடுபடுவோர் தொடர்பாகப் பொதுமக்களின் உயரிய நம்பிக்கையும் தெளிவும் சிறப்பாகக் காணப்படும். உயர் மட்டத்திலான சமூக அந்தஸ்தும், பொருளாதார ரீதியாக உயர்ந்த சம்பளமும், உறுதிப்பாடும் காணப்படும். இவ்வாறாகத் தொழில் வாண்மை யானது:

1. விசேட அறிவும், நுட்பங்களின் தொகுதிகளைக் கொண்டிருத்தல். (The Main Specialized knowledge and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Professionalism)

2. முறைசார் அனுபவமும், பயிற்சியும் பெற்றிருத்தல் (Formal Training and Experience)
3. வாண்மையை ஒன்றுகூட்டும் ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் (An Organization to Espouse Professionalism)
4. நடத்தை வழிகாட்டலுக்கான ஒழுக்கக் கோவை ஒன்றைப் பின்பற்றல். (An Ethical Code for Guidance of Conduct)
5. நிதிசார் வெகுமதிகளைக் கருதாது சேவைக் கடப்பாடு உடையவராய் இருத்தல் (A Commitment to Service Rather than Monetary Awards)

இவ்வாறாக, ஆசிரியர் தொழிலுக்குரிய வாண்மைத்துவப் பொதியை ஆசிரியர்கள் தமதாக்கிக்கொள்ள வேண்டும். மேலும், தமது தொழிற்திறன்கள் தொடர்பான தீமானங்களை எடுக்கும் ஆற்றல், தொடராகக் கற்கும் திறன் தொடர்பாக வாண்மையுள்ள நல்லாசிரியர் பண்புகளையும் கொண்டிருப்பார்.

**வாண்மையுள்ள நல்லாசிரியரின் பண்புகள்**

- மாணவர்களின் நெருங்கிய ஆலோசகராக, வழிகாட்டியாக கற்பிப்பதில், கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துபவராக கரும மாற்றுவார். மாணவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவார்.
- கற்பித்தல் நடவடிக்கைக்காக நித்தம் ஆயத்தத்தோடும், ஆர்வத்தோடும் வகுப்பறைக்கு வருகை தருவார்.
- மாணவர்களின் அபிவிருத்திக்கான அவரது அர்ப்பணிப்பு தியாகம், கடப்பாடு, உயரிய மட்டத்தில் இருக்கும்.
- பாடசாலையின் ஆசிரியர் குழாத்துடனும், அதிபருடனும், அதிகாரிகளுடனும், ஒத்துழைப்புடனும் பரஸ்பர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையுடன் பணிபுரிவார்.

- தம் தொழில்சார் கல்வித் திறன்களை மேம்படுத்தியபடி இருப்பார், நித்தம் புதியவற்றைத் தேடியவண்ணம் அவற்றிற்கேற்ப மாற்றம் - அபிவிருத்தி அடையக் கூடியதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்டிருப்பார். சுயாதீனமாகத் தீர்மானங்களைக் கொண்டிருப்பார்.
- மாணவர்களுக்கும் - சக ஆசிரியர் - பெற்றோர் - அதிபர் - சமூகத்தவர்களுக்கு உதவுகையில் களைப்படைய மாட்டார். பாடத்திற்குப் புறம்பான கருமங்களின்போது முன்னணியில் நின்று செயற்படுவார். ஒழுக்கக் கோவைக்கு உட்பட்டவராகக் காணப்படுவார். தனது செயற்பாடு களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வார்.

இவ்வாறான அம்சங்களுடன் ஒரு ஆசிரியர் பாடசாலையில் துலங்க இயலுமாயின் அதனைவிட ஒரு உன்னதமான ஒரு திருப்தி வேறுஎந்தத் தொழிலிலும் பெறவே முடியாது. இவ்வகையில் "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற உயர் நிலைக்கு ஆசிரியர் ஆளாக்கப்படுவார்.

வாண்மையுள்ள நல்லாசிரியர்களின் செல்வாக்குத் தொடர்பான தகவல்களை வெளியிட்ட, தேசிய கல்வி ஆணைக்குழு பின்வருமாறு தெரிவிக்கின்றது.

மாணவர்கள், ஆசிரியர்கள்பற்றிக் கொண்டுள்ள மனப்பாங்குகளை அடிப்படையாகக் கொண்டே வகுப்பறை கருமங்கள் நடைபெறுகின்றன. மாணவர்கள், ஆசிரியர்களில் மிகுந்த கௌரவத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைதிறன் பொருந்தியவையாக அமையும். இவ்வாறாக நல்ல மனப்பாங்குகளைக் கொண்டுள்ள ஆசிரியரது சேவையைப் பெறும் மாணவர்கள் மற்றும் சமூகம் உட்பட வெளிவாரியாக அவதானிப்பாளர்களின் நம்பிக்கை - வரவேற்பு - விருப்பு - அவா என்பவற்றை ஆசிரியர்கள் சுவீகரித்துக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டே வாண்மையுள்ள நல்லாசிரியர் அங்கீகரிக்கப்படுகின்றார்.

தற்போது பொதுவாக ஆசிரியப் பணியில் ஈடுபட்டுள் ளோரை எடுத்துக்கொண்டால்,

1. தொழில்வாண்மை மட்டத்தை அண்மித்தோர் - அடைந்தோர்.
2. சாதாரணத் திறமைகளை உடையோர்
3. உதவிகள் - வழிகாட்டல்கள் - பயில்வுகள் - ஆலோசனைகள் என்பன அதிகளவு தேவைப்படு வோர்
4. கடுமையான பயிற்சி அளிக்கப்படல் வேண்டியோர்.

என்றவாறாகப் பாகுபட்ட நிலையைக் காட்டுகின்றது. இந்நிலை ஆசிரியர்கள் தம் தொழில் வாண்மையிற் கூடுதலாக ஈடுபட வேண்டும் என்பதை இயம்புகின்றது.

**யுனெஸ்கோவின் சர்வதேச நிர்ணயம்**

ஆசிரியர் பணி ஒரு சேவையாகவும், அதேவேளை ஒரு தொழில் வாண்மையாகவும் கருதப்பட வேண்டும் என யுனெஸ்கோவின் ஆசிரியர் சாசனம் எடுத்துரைக்கின்றது. இதன்படி ஆசிரியர்கள் :

1. இடையூறாது மேற்கொள்ளும் கற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பேணப்படும் விசேட ஞானம் - வாண்மைத்துவம்
3. விசேட திறமைகள் - நிபுணத்துவங்கள்

என்பவை ஆசிரியர்களுக்கு அவசியம். யுனெஸ்கோ ஆசிரியர் உடன்படிக்கைமூலம் உலக ஆசிரியர் சாசனம் தயாரிக்கப்படுகையில் ஆசிரியத் தொழில் வாண்மையானது ஆசிரியர்களாற் பெறப்படவேண்டிய ஒரு தன்மை என 146ஆவது சரத்து வெளிப்படுத்துகின்றது. ஏனைய வாண்மைத் துவத் தொழிற்றுறைகள் (மருத்துவம், சட்டம், கணக்கியல்) போன்றவற்றின் தொழில்வாண்மை தொடர்பான அளவு கோல்களால் அளந்து நோக்குமிடத்து ஆசிரியர்கள் நிவர்த்தி செய்யப்படவேண்டிய குறைபாடுகள் பல உள்ளன. தொழில் வாண்மை நோக்கி ஆசிரியர்களை அண்மிக்கச் செய்வதற்கான அடிப்படைப் பண்புகள் உலக ஆசிரியர் உடன் படிக்கையில் 70,71ஆவது சரத்துக்களிற் குறிப்பிடப் படுகின்றது.

70ஆவது சரத்து; ஆசிரியர்களின் தரம் பெரும்பாலும் அவர்கள்மீதே தங்கியிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டு, அனைத்து ஆசிரியர்களும் தம் தொழில் சார்ந்த கருமங் களின்போது இயன்றளவு மேற்படி தரத்தினை அடைய வேண்டும். இதற்கு மிக முக்கியமாகத் தொடருறு கற்றல் வழியிற் சுயகற்றலுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

71ஆவது சரத்து, ஆசிரியர் வாண்மைத்துவப் பயிற்சி நிறுவனங்கள் சிறந்த பயிற்சிகளில் ஆசிரியர்களைப் பங்கேற்கச் செய்து அவர்களின் தொழில்சார் கல்வி அளவுகள், அடைவுகள் எவை எவை என எடுத்துக்காட்டி உயர்ந்த அடைவுகளைப்பேண வழிகாட்ட வேண்டும். உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருத்தல் விசேடத்துவம் சேவைசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கட்டுப்பாடுகளைக் காக்கும் தொழில்சார் அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் என்பனவும் தொழில் வாண்மைக்கு அவசியம்.

மேலும், ஆசிரியர்கள் தொழில் வாண்மையாளராக உயரத் தமது பணிகளுக்குப் பொருத்தமான நுட்பமுறைகளை அறிந்திருத்தல், ஒழுக்கக்கோவைசார் நடத்தைகள், ஆசிரியர் சேவையைப் பெறுவோரின் நம்பிக்கை சிதையாதவாறு கடமையாற்றுதல் என்பவற்றின் ஊடாக தம் தொழில் மகத்துவத்தை உயர்த்தும் போது ஆசிரியத் தொழில் ஒரு வாண்மைத் தொழிலாக உயரும்.

**ஆசிரியர் வாண்மைக் கலைத்திட்டம்**

ஆசிரியத்துவமான கற்பித்தற் கலையின் நீண்ட கல்விக்கும், பயிற்சிக்கும் பின்னரே, ஒருவர் வாண்மையுள்ள ஆசிரியராக இனி உருவாகும் நிலை தோன்றியுள்ளது. வாண்மைத்துவப் பயிற்சியின்றி எந்தப் பாடத்தையும் கற்பிக்க முடியாத நிலையும் உருவாகியுள்ளது. இதன்படி ஆசிரியர் கலைத் திட்டத்தில்.

1. விசேட துறைசார் பாடப்பயிற்சி
   உ+ம் : ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம்
2. தொழில்வாண்மைப் பாடப்பயிற்சி - உளவியல், கல்வித் தத்துவம், சமூகவியல் ஆலோசனை வழிகாட்டல் முகாமைத்துவம்.
3. பொதுப்பாடத்துறைகள் - கணினி தகவல் தொழில் நுட்பமும், நூலகக் கல்வியியலும். பொது ஆங்கிலம், மொழித் திறன்கள் அழகியல் என்பவற்றின் கூட்டிணைவின் ஊடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A- கல்வி B -மாணவன்

C -கலைத்திட்டம் D -கற்றல் - கற்பித்தல்

E -ஆசிரியர் F - பாடசாலை

ஆகிய எண்ணக்கருக்களின் விரிவாக ஆசிரிய வாண்மை தொடர்பான பயிற்சிக் கலைத்திட்டங்கள் விரிவு பெறுகின்றன.

- கற்பவர் பற்றிய அறிவு - பாடசாலைக் கல்விநிலை பற்றிய அறிவு, கற்கும் சமூகம் பற்றிய அறிவு திறன்களை இயக்குதல்.
- விசேட பாட அறிவு - திறன்களை - முறையியல்களை நாட்டின் தேவைகளுக்கேற்ப ஒன்றிணைத்துப் பயன்படுத்தும் ஆற்றல்.
- தேசிய கல்விக் குறிக்கோள்கள் - அடிப்படைத் தேர்ச்சிகள், கலைத்திட்டம் தொடர்பான இலக்குகள், பாட உள்ளடக்கம் பற்றிய நிபுணத்துவம், பயிற்சித்திறன்கள் - செயன் முறைகள் - அனுபவங்களை வழங்கும் ஆற்றல் விருத்தியாக்கல்.
- கணிப்பீடு - மதிப்பீடு - பாண்டித்திய மட்டக் கல்வி அடைவுகள் தொடர்பான தேர்ச்சிகள், புத்தாக்கங்கள், வெளியீடுகள், செயல்நிலை ஆய்வுகள், விவகார ஆய்வுகள், நடைமுறைகள் தொடர்பான பிரவேசக் கல்வி.
- தகவல் தொழில்நுட்ப - கணினி - இண்டர்நெற் தேர்ச்சிகள், கற்பித்தற் சாதனத் தர உள்ளீடுகளின் பாவனை, மகிழ்ச்சிகரமான கற்பித்தற் கவிநிலை - களக்கற்பித்தல் பயிற்சிகள் உள்ளகப் பயிற்சிகள், மாதிரி நுண்முறைக் கற்பித்தற் பயிற்சிகள், கல்விப் பரீட்சியம், ஆசிரியரியல், செயற்றிட்டங்கள், சவால்களுக்கான, எதிரீடுகளுக்கான முகங் கொடுப்புக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவகையிற் சர்வதேச ரீதியான ஆசிரியர் பயிற்சி வாண்மைத்துவக் கலைத்திட்ட இணைப்புக்களை ஏற்படுத்தி ஆசிரிய வாண்மையை மேம்படுத்துதல் - கலைத்திட்ட நடைமுறைகளினூடாக வினைத்திறன்களை அதிகரித்தல் இன்று அவசியமாக வேண்டப்படுகின்றன. மேலும், ஆசிரியர் வாண்மைத்துவத் தொடர்புப் பயிற்சிகள், ஆசிரிய கல்வியிய லாளர்களின் (Teacher Education) திறமைகளைக் காலத்துக்குக் காலம் விருத்தியாக்கல், சிறப்பான வள - நிதி பயன்பாடுகள் ஆசிரிய வாண்மைத்துவப் பயில்வுகளுக்கும் - செலவு களுக்கும் அவற்றின் பலாபலன்களுக்குமிடையேயான தொடர்புகளைப் பரிசீலித்து உயர்த்துதல், ஆசிரியர் வாண்மை நிலையை மேம்படுத்தி நாட்டில் உள்ள 10 வீதமான ஆசிரியர்களைக் கல்வியியல் கலாநிதிப் பட்டம் பெற்றவர் களாகவும் 55 வீத மாணவர்களை கல்வியியல் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றவர்களாகவும், ஏனைய அனைவரையும் பட்டத்தின் பின், கல்வி டிப்ளோமா அல்லது கல்விமானித் தகைமையைப் பெறச்செய்து, தொடர்ச்சியாக ஆசிரிய வாண்மையை உயர்த்தும் நவீன கலைத்திட்டச் செயற்பாடு கள் தற்போது நடைமுறைப்படுத்துகின்றன.

ஆசிரிய வாண்மை, ஆசிரிய - அந்தஸ்துத் தொடர்பாக விமர்சன ரீதியான மாற்றுவகைக் கருத்துக்களின் அவசியம் இல்லாமை இலங்கையில் இதுவரையான ஆசிரியர் கல்வி நிலைமைகளை ஆராயும்போது தெளிவாகின்றது. புதிய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒருபுறம், மறுபுறம் பின்னடைவு கள் இவற்றின் அடிப்படையில் எமது நாட்டு ஆசிரியர் கல்வி இன்றும் மேலைநாட்டு ஆசிரியர் கல்வி முறைமையை ஆய்வுசெய்யாது உள்வாங்கி நடைமுறைப்படுத்தும் பொழுது பல இடர்கள் ஏற்படுகின்றன. மேலைநாட்டு உளவியல் அபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை இனங்காண முடியாமல் தாமே சுயமாக முடி வெடுக்க முடியாத விடுதலை அச்சம் (Fear of Freedom) ஆசிரியர் களைச் சூழ்ந்துள்ளது. திணிப்புக்கள் அதிகாரங்கள் காரண மாக ஆசிரியர்கள் தம் விமர்சன பூர்வபக்க கருத்துக் களை வெளியிடாமல் ஒரு மௌனப் பண்பாடு (Culture of Silence) ஆசிரிய சமூகத்தினரிடம் மேலோங்கியுள்ளது. இது அபிவிருத்திக்குப் பதிலாக புற்றுநோய் போன்ற ஆழ்ந்த தாக்க விசைகளைக் கல்வி முறைகளில் ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைப் பேராசிரியர் சபா ஜெயராசா மேலும் கருத்துத் தெரிவிக்கையில், போட்டிச்சந்தை - சமூகத்திற்குரிய நிலையை நோக்கி - முதலாளித்துவ - சர்வதேச பாடசாலைத் துவ நிலைகளை நோக்கிய நகர்வுகள் - சமூக ஒழுங்கமைப் பின் உயர்நிலையைப் பேணுவோரே ஆசிரியர் கல்வி பற்றிய தீர்மானங்களால் அகன்ற பார்வையுடனும், யதார்த்த நிலைகளில் இருந்து கொள்கை யாக்கங்கள் மேற்கொள்ளப் படாத நிலைகள், ஆசிரியவாண்மை அபிவிருத்திக்குப் பாதக நிலையை ஏற்படுத்துகின்றன எனத் தெரிவிக்கின்றார்.

நடத்தைக் காட்டுறுக்களே (Behdiourist Model) ஆசிரிய உருவாக்கத்திற் பெருமளவு பின்பற்றப்படுகின்றன. ஒரேவிதமான கோலங்களை உடைய ஆசிரியத்துவம் பற்றிய சிந்தனைகளே மேலோங்கியுள்ளன. எதிர்பார்ப்புக்கள் ஊடாக ஏற்றத்தாழ்வுகளைப் பிரித்து ஆளுதலை (Discriminala tion by Expectation) உருவாக்கும் அபத்தமான நிலை; வகுப்பறைகளிலும், பாடசாலைகளிலும் மேற்கொள்ளப் படுகின்றன. மாற்று வகையிலான உளவியற் கருத்துக்களோ, மாற்றுவகையான கல்விக் கோட்பாடுகளோ உதாரணம் போலோ; பிரேரி, மிசேல் பூக்கோ) ஆசிரியர் கல்வித் திட்டங் களிலே சேர்க்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் பலராலும் விமர்சிக்கப்படும் நிலைக்கு உள்ளாக்கப்படும் விசையின் தாக்கங்களுக்கு ஏற்றவாறு ஆசிரிய வாண்மையை உயர்த்தும் நடவடிக்கைகளின் அளவும் - விசையும், பங்குபற்றலும் சமூகத்தினாற் கருத்திற் கொள்ளப்படவில்லை. பல சந்தர்ப்பங்களில் ஆசிரியம் கொச்சைப்படுத்தப்படுகின்றது. ஆசிரியரை இயக்கும் நிர்வாக முகாமைத்துவப் பணிகளிலே கால தாமதங்கள் ஏற்படுகின்றன. மேலும், இலங்கையில் இனக்குழு விகிதாசாரம் ஆசிரிய நியமங்களிலும், ஆசிரியர் பதவியுயர்வுகளிலும் பராமரிக்கப்படாமையால் தமிழ்மொழிமூல ஆசிரியர்களும் - பிள்ளைகளும் பெருமளவு பாதிப்புக்குள்ளாகின்றனர். மேலும், அரசியல் செல்வாக்கும் குறித்த சாரூருக்கும் உயர்வுகளைக் காட்டிநிற்கும் நிலைகள் நீக்கப்படாவிடின் தொடர்ந்தும் இலங்கையில் ஆசிரிய வாண்மை அபிவிருத்தி பல பின்னடைவுகளையே இயம்பி நிற்கும். இவற்றை நீக்கி ஆசிரியர்கள் தமது ஆசிரிய வாண்மைச் செயற்பங்குகளை வெற்றிகரமாக ஆற்றுவதற்குப் பல நவீன தந்திரோபாயங்களைப் பின்பற்றவேண்டியுள்ளது.

**ஆசிரியர் செயற்பங்குப் பாத்திரங்கள்**

ஆசிரியர் செயற்பங்கைச் சரியாக ஆற்றுவதற்காக அவ் ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ளக்கூடிய பங்குகள், வாண்மைத்துவப் பங்களிப்புகள் இயைபுபடுத்தும் காரணிகள் அதிபர் - பெற்றோர் - அரசாங்க எதிர்ப்புக்கள் என்பவற்றின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் எண்ணக்கருக்கள், சவால்கள் ஆசிரியர்களை வலுப்படுத்துகின்றன. ஆசிரியர் செயற்பங்கு நடத்தையானது அவரது ஆளுமையுடன் செல்வாக்குச் செலுத்தும் சில சந்தர்ப்பங்களில் குறித்த செயற்பங்கில் விருப்புக் காட்டுவதற்கான காரணம் அச்செயற்பங்கு தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைக்குப் பொருத்தமானது என அவர்கள் கருதுவதே ஆகும்.

யாதேனும் செயற்பாங்கு; குறித்த சில தேவைகளைக் கொண்டது. அத்துடன், தனியார்களிடத்தே குறித்த சில தனிப்பட்ட எதிர்பார்ப்புகளும் காணப்படுகின்றன. இவை இரண்டிற்கும் பரஸ்பர தொடர்பு காணப்படாவிடின் செயற்பங்குத் தேவைகளுக்கும் - ஆளுமை எதிர்பார்ப்பு களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றும். உதாரணமாக ஆசிரியர் ஒருவர் அளவுக்கதிகமான நேரத்தை தமது கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தியவாறு, தமது குடும்ப நடவடிக்கைகளைக் கவனிக்காது விடுவார் எனின், அவர் தன் குடும்ப அங்கத்தவர்களின் வெறுப்புக்கு ஆளாவார். அதே வேளை, தனது பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கை களைக் கற்பிக்காது - தவிர்த்துப் பணம் தேடும் நோக்குடன் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவாராயின் மாணவர்களது; - பெற்றோர்களதும் பழிச்சொல்லுக்கு ஆளாவார். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவர் முரண்பாடுகளுக்கு உள்ளாகின்றார்.

ஆசிரியத் தொழில் ஒரு வாண்மைத் தொழிலாக வளர்ச்சி அடைந்த நாடுகள் ஏற்றுக்கொள்கின்றன. எனினும், எமது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இத்தொழில் ஒரு பாதி வாண்மைத் தொழிலாக (Semi Profession) சொந்த சேவைத் தொழிலாக (Personal Service) மற்றும் அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் தொழிலாக (Bureaucratic) உள்ளது. இந்நிலையை நீக்க ஆசிரியர் செயற்பங்குப் பாத்திர நிலைமை களில் துணிகரமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். பொதுவாக ஆசிரியர்களின் செயற்பங்குப் பாத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிபங்குகள் பலவாக உள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தின்

1. தீர்மானம் மேற்கொள்பவர், செயற்படுத்துபவர், முகாமையாளர், திட்டமிடுபவர்.
2. குழுப்பொறுப்பாளர், ஆலோசனை கூறுபவர், குழு உறுப்பினர், சமூகத் தலைவர்.
3. சிறப்பறிஞர், கலைஞர், இணைப்பாளர், புதுமை படைப்பவர், சமூகமாற்ற முகவர், ஆய்வாளர்.
4. நடுநிலையாளர், கணிப்பீடு செய்பவர், மதிப்பீட்டாளர், நீதிபதி, புலனாய்வாளர்.
5. வயதுவந்தவர், பொதுசன ஊழியர், அரசாங்க உத்தியோகத்தர், அர்ப்பண சேவையாளர், வழிகாட்டு பவர், நண்பர், துன்பத்திற் கைகொடுப்பவர்.

முழுமையான மனிதனை உருவாக்குவதற்காக சம நிலை ஆளுமை வளர்ச்சியும், சமூக - மாற்று அபிவிருத்தியும் ஏற்படும் கற்றற் செயன்முறைகளும், இளந்தலைமுறையினரை வழிப்படுத்த ஆசிரியர் ஏற்கும் சகல பாத்திரங்களும் மிகவும் பொறுப்புடையனவாக உள்ளன. சமூகத்தில் இளந்தலை முறையினர் எதிர்பார்க்கும் முன்மாதிரியான நடத்தைப் பாங்கைத் தானாக வெளிப்படுத்தும் நல்லொழுக்கப் பண் புள்ள ஒருவராக ஆசிரியர் விளங்குதல் ஓர் அடிப்படையான செயற்பங்குப் பாத்திரமாக வேண்டப்படுகின்றது. சமூகத் திலே நிலவும் நீதி, நியாயங்கள், சமூக விழுமியங்கள், கலாசாரப் பெறுமானங்கள் ஆகியவற்றைத் தற்காலச் சமூகத் திற்குப் பொருத்தமான விதத்தில் தர்க்க ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் இளந்தலைமுறையினருக்குச் சமர்ப்பிக்குந் திறனும் மனப்பாங்கும் கொண்ட ஒருவராக ஆசிரியரின் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய தொழில்கள் எல்லாவற்றையும்விட; சமூகப் பழக்கங்கள் பற்றியும், கலாச்சாரப் பாங்குகள் பற்றியும் உயர்ந்த விளக்கமுள்ளவராக ஆசிரியர் திகழவேண்டும். அதனாலேயே ஆசிரியர் தொழிலுக்குரிய சிற்சில சமூகமய மான நற்பழக்க வழக்கங்களைக் கட்டியெழுப்ப ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் பல புதிய வேலைத் திட்டங்களையும், செயல்நிலை ஆய்வுகளையும், செயற்றிட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கான ஒரு ஒழுக்கக் கோவை ஒன்று முறையாகப் பின்பற்றப்படும் நிலையும் தற்போது தோன்றியுள்ளது.

**ஆசிரியர் ஒழுக்கக்கோவையின் அவசியம்**

- மாணவர்களின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கு மாகத் தம்மைத் தியாகம் செய்ய, அர்ப்பணிப்புடன் செயற்பட,
- பொதுமக்கள் விரும்பும் சமூக நன்நடத்தைகளை உருவாக்கிக் கொள்ளலும், மக்கள் ஊழியனாகச் சேவை செய்வதற்குத் தியாகம் செய்தலும், கடமைகளை நிறை வேற்றுவதில் ஆழ்ந்த - அக்கறை பொறுப்புக்களுடன் ஈடுபடல்.
- ஆசிரியத் தொழில் கௌரவத்தைப் புனிதமாகப் பாதுகாக்க.
- சிந்தனை - சொல் - செயல் ஆகியவற்றில் நேர்மையாக இருந்து தனது தொழிலுக்குக் களங்கம் ஏற்படுத்தாதவாறு தொழிற்படல்.
- கல்வி அபிவிருத்தி மீதும் தன்தொழில் அபிவிருத்தி மீதும் ஈடுபாட்டைக் காட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூக மாற்றத்தின் முதன்மை முகவர் என்ற வகையில் நவீன தொழில்நுட்பம் - பாரம்பரியங்கள் ஆகிய இரண்டிற்கும் இடையிலான மானுட அபிவிருத்தியை ஏற்படுத்த.
- எதிர்கால சமூகத்தவர்களான இன்றைய மாணவர்களுக்கு முன்னுதாரண புருஷராகத் திகழ்வதற்கு.

இவ்வாறான ஆசிரியர் பாத்திரத்திற்கும், ஒழுக்கக் கோவைக்கும் அடிப்படையான தொடர்புப் பாங்குகள் பின்வருவனவையாக உள்ளன.

1. ஆசிரியர் - மாணவர் தொடர்பு
2. ஆசிரியர் - ஆசிரியர் தொடர்பு
3. ஆசிரியர் - அதிபர், கல்விப்பணிப்பாளர்களின் தொடர்பு
4. ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு
5. ஆசிரியர் - சமூக - நிறுவனங்கள் தொடர்பு

இதில், ஆசிரியர் மாணவர் தொடர்பானது இன்று மிக உயர்வான தொடர்பாகக் கொள்ளப்படுகின்றது. இவ் உயிர்த் துடிப்பான, ஆன்மீக ரீதித் தொடர்பின் மூலமே மெய்யான கற்றல் நிகழ்கின்றது. உலகளாவிய ரீதியில் எவ்விதமான தொழில் நுட்ப அபிவிருத்திகள் ஏற்பட்டாலும், உயர்வான, இறுதியான மானுட உறவே உயர்ந்த - மெய்யான பெறுபேற்றைப் பூரண திருப்திதரும் என்ற வகையில் நவீன கற்பித்தற் கலையில் ஆசிரியர் - மாணவர் உறவு மிக உயர்வாக நோக்கப்படுகின்றது.

மேலும், மாணவர்களுடைய தேவைகளை ஆசிரியர் விளங்கிக்கொள்வதும், அவர்களை இனம்கண்டு கொள்வதும், அவர்களுடைய சந்தேகங்களைப் போக்குவதினூடாகக் கற்றற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை உருவாக்கலாம். இதற்கு அடிப்படையாக ஆசிரியர்; மாணவர்மீது அன்பு - கருணை காட்டி, அவர்களது உளத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். மாணவர்களை விரும்பத்தக்க சமூக நடத்தை விருத்திக்கு உதவி, நற்பிரஜை யாக்க ஆசிரியர் பல்வேறு நுட்ப முறைகளைப் பிரயோகிக்க லாம்.

இதில், மாணவர்களின் ஆளுமை மற்றும் நடத்தை வளர்ச்சிக்குரிய கற்றல் - கற்பித்தல் அனுபவங்களைச் செயற்படுத்தல் இணைபாடவிதான வாண்மைத்துவப் பங்களிப்புக்கள் மூலமான அனுபவங்களை மாணவர்களுக்கு முறைசார வகையில் வழங்கி வாழ்க்கை அனுபவங்களையும், சாவல்களைச் சமாளிக்கும் சந்தர்ப்பங்களை வழங்குதல். மாணவர்களின் தனிப்பட்ட குறைபாடுகளைக் களைந்து சமூகம் சார் கூட்டுறவு சக்தியை விருத்தி செய்து அதனூடாக அவர்களுடைய தலைமைத்துவத்தையும் ஆளுமையையும் விருத்தி செய்யலாம்.

**ஆசிரியர் - ஆசிரியர் தொடர்புகள்**

- ஆசிரியர் தனது சகாக்களுக்கு கருணை காட்டல், மரியாதை செலுத்துதல், உதவி புரிதல், இரக்கம் காட்டுதல்.
- தனது அறிவையும், மனப்பாங்குகளையும், திறன்களையும் விழுமியங்களையும் தமது சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.
- தன் சக ஆசிரியர்களுக்கு, அவர்கள் கடமைகள், உத்தி யோகப் பணிகளை ஆற்றுவதற்கும் - உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் ஒத்தாசை வழங்குதல், ஒழுங்கீனங்களைக்களைய வழிகாட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர்கள் அவமானப்படுத்தும், இழிவுபடுத்தும், மானபங்கப்படுத்தும் எந்தவிதமான செயலிலும் ஈடுபடுதலைத் தவிர்த்துக் கொள்ளல் முக்கியமானவையாகும்.

**ஆசிரியர் - பெற்றோர் தொடர்புகள்**

- தம் பிள்ளைகளின் உடல் - உள - ஆன்மீக விருத்தி சம்பந்தமாகக் கலந்துரையாடவரும் பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தி அவர்கள் தேவைகளைப் பூர்த்தியாக்கல், பிள்ளைகளின் பலவீனங்கள், இயலாமைகள், குற்றங்கள் தொடர்பாகப் பெற்றோருடன் தயங்காது கலந்துரையாடல்.
- பிள்ளைகள் தொடர்பாகப் பெற்றாரிடம் உரையாடும் போது பிள்ளைகளைத் துன்புறுத்தும் வகையிலோ, இழிவு படுத்தும் வகையிலோ உரையாடாமல் தவிர்த்தல்.
- பிள்ளைகளின் உடல், உளக் குறைபாடுகளை, அவற்றைத் தீர்க்கும் நடவடிக்கைகளைப் பெற்றோருடன் உரையாடித் தீர்வுகள் காணல். மேலும், புதிய கல்வி - கணிப்பீட்டு அம்சங்களின் மாற்றங்கள், கல்வி அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வுகளைப் பெற்றாருக்கு ஊட்டும் சிறந்த உயிர்த் துடிப்பான தொடர்பை ஆசிரியர் வைத்திருக்க வேண்டும்.

**ஆசிரியர் - அதிகாரிகள் தொடர்புகள்**

- முரண்பாடுகள் இல்லாமல் இயல்பாகத் தன் கடமைகளைச் செய்ய அவர்களின் ஒத்துழைப்பை நேர்மையாகப் பெறல். தனது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிகளை அவர்கள் மூலம் காணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தனது தொழில் சார்ந்த அறிவையும், திறன்களையும் மேம்படுத்திக் கொள்ளும் விதிமுறைகள் - தகுதிப் பிரமாணங்கள் பற்றிய விளக்கங்களை அதிபர், கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்து தெரிந்துகொள்ளுதல்.
- ஏனைய ஆசிரியர்களுக்கு அவமானம் ஏற்படும் வகையி லான எந்த விடயங்களிலும் ஈடுபடல் ஆகாது. ஆசிரியத் தொழிலில் பிரவேசிக்கும் புதியவர்களின் குறைபாடுகள், பலவீனங்களைக் களைய உதவுதல், ஏனையவர்களுக்கு அது தொடர்பான விமர்சனம் செய்யாமை, எந்த ஒரு நிலையிலும் அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்குதல், வெகுமதிகள் வழங்குதலைத் தவிர்த்தல்.

இவ்வாறாக மாணவர், பாடசாலைக் குடும்பம், சமூகம், நாடு என்ற வகையில் ஆசிரியருடைய பணி விரிவுபட்டுள்ளது. இவ் விரிவாக்கமூடாக இவர்கள் அனை வருக்கும் ஆசிரியர் வகை கூறவேண்டியவராக உள்ளார்.

## வகைகூறல் (Accunability)

ஆசிரியர் தனக்குள்ள பொறுப்புக்களைச் சரிவர ஏற்று அதற்கான விளைவுகளை உணரும் தன்மையே வகைகூறல் ஆகும். சமூக மாற்றம், சமூக நீதி, சமூக எதிர்பார்ப்புகள், விழுமியங்களிற்கு அமைதல், தன்னைத் தயார்ப்படுத்தல், கலாசாரப் பெறுமானங்கள். தர்க்கரீதியாகச் சிந்திக்கும், செயற்படும் திறன், பொறுப்பேற்கும் தன்மை, மாணவர் களைக் குறித்த தேர்ச்சிமட்டத்திற்கு அடையவைக்கும் பொறுப் புணர்வைப் பெறல் என்பவை வகைகூறலின் அம்சங்களாக உள்ளன. ஆசிரியர்கள் தம் பணி தொடர்பாகப் பலரும் வகை கூறவேண்டியுள்ளது. பல்வேறு துறையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக ஆசிரியரிடம் பொறுப்பானது (Responsibility) கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆசிரியர் வகை கூறல்; அரசாங்க ஒப்பந்த ரீதியான வகைகூறல், தொழில் ரீதியாக வகைகூறல், நிதி - சம்பள ரீதியான வகைகூறல், அரசயில் ரீதியான வகைகூறல், சமூக உறுப்பினர் ரீதியாக வகைகூறல், கற்பித்தல் ரீதியான வகைகூறல் என விரிந்து செல்கின்றது. இவ் விரிவுகளுக்கெல்லாம் ஆசிரியர் வகைகூறக் கூடியவராக இருக்க; தமது தொழில் வாண்மையைத் தொடர்ச்சியாக உயர்த்திக்கொண்டே செல்லவேண்டும்.

கற்பித்தல் என்பது பிரதானமாகக் கற்றலை மேம் படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடாகும். கற்பித்தலின் நோக்கம் கற்றலாகும். இதனை தரமான வகையில் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் தம் தொழில்சார் விருத்தியைத் தாமே பொறுப்பேற்றுக் கல்வியினூடான விளக்கம்; கலைத்திட்டக் குறிக்கோள்கள்; மாணவர் கற்றலை முகாமை செய்தல்; கணிப்பீடும்-மதிப் பீடும், பெற்றோர் வெளிச்சமுதாயத் தொடர்புகள், தலை மைத்துவம், தமது ஆளுமை விருத்தி என்ற வகையில் தமது தொழிலை விருத்தி செய்யவேண்டும். இதற்கு

1. தாம் வகுப்பறையில் கற்றலில் ஈடுபடும் ஒரு சாரார் என்பதைக் கருத்தில் கொண்டு கற்பிக்கும் போது பரீட்சார்த்த ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடல்.
2. தமது தேவைகட்கும் விருப்புக்கும் ஏற்ப ஆசிரியர்கள் தொழில் விருத்தியைப் பெறவேண்டிய வழிகள், அறைகூவல்கள் பற்றித் தீர்மானித்தல் இதற்கு:
    1. சுயமதிப்பீடு (Selfevaluation)
    2. மீள்சிந்தனை (Reflection)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செயல்நிலை ஆய்வு (Action Research)
4. ஆய்வுகள் (Survey)
5. புதிய செயற்றிட்டங்கள் (New Projects)
6. புத்தாக்கங்கள் (Innovations)

ஈடுபடவேண்டும். இன்று கற்பித்தலை உலகில் உள்ள மிக உன்னதமான தோழில் என பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதற்கு ஆசிரியர்கள் முதலில் தமது தொழிலைப் பொறுத்தவரை அர்ப்பணிப்புடையவராக இருக்கவேண்டும் என்பதை ஆசிரியர்கள் மடுமன்றி மாணவர், பெற்றோர், அதிபர், கல்விப் பணிப்பாளர்கள், பொதுமக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆதலால் அர்ப்பணிப்புடன் செய லாற்ற வேண்டுமாயின் அர்ப்பணிப்பு என்பதால் எதிர் பார்க்கப்படுவது யாது? அர்ப்பணிப் புணர்வைத் தம்மிடம் உருவாக்கிக் கொள்வதற்காக யாது செய்யவேண்டும் இதனூடாக ஆசிரியத் தொழில் வாண்மையை எவ்வாறு உயர்த்தலாம் என்பதை பற்றிச் சிந்தித்தல் முக்கியமானது.

**அர்ப்பணிப்பு (Dedication)**

ஆசிரியர் கற்பித்தலுக்காக அர்ப்பணித்தல் ஓர் அபிலாஷையாகும். சம்மதம் தெரிவிக்கும் வாக்குறுதி இணக்கப்பாடாகும். மேலும். கட்டாயமாகச் செய்ய வேண்டியதைச் செய்வதற்குக் கட்டுப்பட்ட ஒரு நிலைப் பாடாகும். இதில், திடசங்கற்பம், பக்தி வலுவான விருப்பு என்பன அடங்கும். இது முழு நிறைவான ஆசிரியராக இருப்பதற்கு ஆன்மீக ரீதியில் ஏற்படும் ஒரு தூண்டுதலாகும். இது வகைகூறலுடன் தொடர்புடையது. ஆசிரியத்தில் அர்ப்பணிப்பும் - வகைகூறலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்பானது ஆசிரியர் தன் ஆற்றலைப் பூரணமாகப் பிரயோகித்தலும், உறுதிப்பாடும் தியாக உணர்வும் இதில் அடங்கும். ஆசிரியர் தன் உச்ச இயலுமையைப் பிரயோகிக்க உடன்படுத்தல் அதனை ஆற்ற முடியாத நிலைகள் தோன்றும்போது அதனைக் கைவிடாத நிலை வாழ்நாளில் எதிர்பார்ப்புக்கள் அடையத் தக்கதாக ஒரு செயற்றொடராக இது அமைந்துள்ளது. ஆசிரியர் தம் பணியை தன் சக்திக்கு ஏற்ப செலுத்தக்கூடிய உச்ச அளவு முயற்சியைப் பிரயோகித்தலும் அர்ப்பணித்தலாக உள்ளது. தான் அர்ப்பணிப் புடன் செயற்படும் விடயத்திற்கும் தனது சுய நன்மைக்குமிடையே முரண்பாடுகள் தோன்றும்போது, அர்ப்பணம் செய்யப்பட்டதற்கே முன்னுரிமை கொடுத்தல்.

உதாரணமாக ஆசிரியர் காலத்தை ஒதுக்குதல், உழைப்பையும் வளங்களையும் ஒதுக்குதல் போன்ற பிரச்சினைகளைக் கவனத்தில் எடுக்கும்போது மாணவருக்கே முன்னுரிமை வழங்குவர். இந்த அர்ப்பணமானது மாணவருக்கே விசேட சேவை கிடைக்கக் கூடியவாறான செயல்களாக அமையும். அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் எப்போதும் வழங்குவதற்குரிய ஏதும் ஒன்றை வைத்திருப்பார். போதிய அளவு தயார் நிலையில் இருப்பார். மாணவர்களைத் தனியாட்களாக இனங்காணத்தக்க (மாணவர் மீது ஆசிரியர் காட்டும் கரிசனையை அம்மாணவர் உணரும்வரை) அறிவுடையவராக,திறனுடையவராக இருப்பார். ஆசிரியர் ஒருவர் தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக உண்மை யாகவே சொல்ல முடிவது தனது தியாகத்தின் மூலமாகவே யாகும். இவ்வாறான அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் கீழ்வரும் பண்புகளை கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்விப்பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த முடியாத தடைகளாக அன்றி வசதியீனங்களாகவே கருதுவார். மற்றும் மாணவர்களுடன் செயற்படுவது தொடர்பாக மனப் பூர்வமான விருப்பைக் காட்டுவர். மாணவர் ஆற்றல் களைத் தேடியறிந்து ஊக்குவிப்பார்.
- கல்விசார்ந்த சூழ்நிலையில் தன்னைப் பொறுத்த மட்டிலும் ஏனையோரைப் பொறுத்த மட்டிலும் உயர் எதிர் பார்ப்பைக் கொண்டிருப்பார்.
- கற்பித்தல் சந்தர்ப்பங்களுக்கு அப்பாற்பட்ட பாடசாலைப் பிரச்சினைகள், சிக்கல்களை அதிலிருந்து வேறுபடுத்திக் கொள்வர்.
- தனது கடமை நேரம் தவிர்ந்த வேளைகளில் பாடசாலை யில் சேவையாற்றுவார். பயனுறுதிவாய்ந்த - மகிழ்ச்சிகர மான கற்பித்தல் பழக்கத்தைத் தமதாக்கிக்கொள்வார். கற்பித்தலில் உயர்மட்ட ஆற்றலை வெளிக்காட்டுவார்.
- கல்விப்பணி கடினமானதாயினும் கைவிடாது தொடர்ந்து செயற்படுவார். பிள்ளைகள் தொடர்பாக அன்பு செலுத்துவார். அவர்களின் உச்ச மேம்பாட்டுக்காகத் தமது பணிகளை ஒருங் கிணைப்பார்.
- புதிய கருத்துக்களைத் திறந்த மனதுடன் நோக்குவார். பழைய கருத்துக்களை மீள்நோக்குவார். சுயமாகத் தனது செயற்பங்கை நோக்கி தீர்மானம் எடுத்து கல்வி சார்ந்த தூர நோக்குடன் கடமையாற்றுவார்.

தன்னுடன் பணிபுரியும் மாணவர்கள் மற்றும் ஏனையோரிடத்திற் தெளிவான ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நோக்குடன் அர்ப்பணிப்பாகச் செயற்படும் ஆசிரியர் ஒருவரின் தொழில்சார் வாழ்விலே மனத்திருப்தி ஏற்படும். இவ் உள நிறைவான அர்ப்பணிப்பானது; மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான அர்ப்பணிப்பு, ஆசிரியர்கள் தொடர்பான அர்ப்பணிப்பு, பாடசாலை - சமூகம் தொடர்பான அர்ப்பணிப்பு, கற்றல் தொடர்பான அர்ப்பணிப்பு - தொழில் விருத்தி தொடர்பான அர்ப்பணிப்பு - பண்பான நடத்தை சார்ந்த அர்ப்பணிப்பு எனப் பல வகைகளாக உள்ளன. அர்ப்பணிப்பான ஆசிரியர் சேவை மூலம் இறையுணர்வைப் பெறமுடியும்.

## ஆசிரியர் உரிமைகளும் கடமைகளும்

அரசியல் யாப்பினால் ஊறுதிசெய்யப்பட்டுள்ள தனியாட்களுக்குரிய உரிமைகள் யாவும் ஆசிரியர்களுக்கு உண்டு. அவ் உரிமைகள் இழக்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே தமது உரிமைகள் தொடர்பாகப் போதிய விளக்கங்களைப் பெற்றிராத ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு உள்ளாகலாம். மேலும், தமது உரிமைகள் - கடமைகள் தொடர்பாகவும் ஆசிரியர்கள் தப்பான அபிப்பிராயங்களையும் கொண்டிருக்கலாம். ஆதலால் ஆசிரியர்கள் தமது உரிமைகள் பற்றி மட்டுமன்றிப் பொறுப் புகள் -கடமைகள் தொடர்பாகவும், மாணவர்களின் உரிமை கள் தொடர்பாகவும் அறிந்திருத்தல் அவசியம். ஆசிரியர் களுக்கு உரிமைகளும், சலுகைகளும் உண்டு. சில வேளை களில் சலுகைகளை அனுபவிக்கும்போது மாணவர் களின் உரிமைகள் மீறப்படுவதும் உண்டு.

உரிமைகள் எனப்படுபவை ஒழுக்கம் மற்றும் அறநெறிக்கிடையில் தொழிலைச் செம்மையுற ஆற்ற இன்றியமையாதவை. ஆனால், சலுகைகள் எனப்படுபவை பழுவில் இருந்து விடுபடுவதற்கான விசேட நிலைமைகளாக உள்ளன. ஆசிரியர் சேவையில் சேவைக்காப்பு உரிமைகளாக;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்கம் தாபிக்கும். அங்கத்தவராகும் உரிமை, வாண்மைத் தொழிலாளர் அமைப்புக் களில் அங்கத்துவம் பெறல், உயர் கல்விச் சுதந்திர உரிமைகள், அரசியல் சுதந்திர உரிமைகள், தொழில்நீதி தொடர்பாக நீதிமன்றம் சொல்லும் உரிமைகள் உதாரணங்களாக உள்ளன.

சலுகைகளுக்கு உதாரணங்களாக சமயோசித, சுகயீன கடமை லீவுகள், முழுச்சம்பளத்துடனான லீவு, சம்பளமற்ற லீவு, பிரசவ லீவு, புகையிரத ஆணைச்சீட்டுக்கள், உத்தியோகப்பிரயாணச் சீட்டுக்கள், வாழ்க்கைப் படிகள்.

**விவகார ஆய்வு (Case Study - 2)**

ஸ்ரீ வித்தக விநாயகர் கல்லூரி ஆலுவலகத்திலே கல்லூரி அதிபருக்கும் ஆசிரியர் ஒருவருக்குமான வாக்கு வாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்வளவு லீவு எடுக்க வேண்டாம் என பல தடவைகள் கூறியுள்ளேன். கடந்த மாதம் நீங்கள் 12 சமயோசிதலீவு எடுத்துள்ளீர்கள். இந்த மாதம் 6 நாள் அத்தோடு நாளைக்கும் லீவுக்கு விண்ணப் பித்துள்ளீர்கள். இந்த நிலையில் வகுப்பு மாணவர்களின் கதி என்ன? கல்வி தொடர்பான அவர்களது உரிமை மீறப்படு கின்றது. சேர் நீங்கள் மாணவர்களின் உரிமைகள் பற்றிக் கூறுகின்றீர்கள். எனக்கும் லீவு எடுக்கும் உரிமை உண்டு. சமயோசித லீவு 21 நாளும் சுகயீன லீவு 20 நாளும் பெற எனக்கு உரிமை உண்டு என ஆசிரியர் உரிமையுடன் கூறிக் கொண்டிருந்தார். ஆசிரியர் அவர்களேநீங்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளீர்கள். லீவு ஓர் உரிமையல்ல அது ஒரு சலுகை இச்சலுகையுடன் ஆற்றவேண்டிய கடமைகளும், பொறுப்புக்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) இவ்வுரையாடலின் தொனிப்பொருள் என்ன?
2) ஆசிரியர் லீவு எடுத்தால் எவ்வாறு மாணவர் கல்வி உரிமை பாதிக்கப்படும்
3) மாணவர் சிறுவர் உரிமைகள் தொடர்பாக விளக்கம் தருக?

**விடைகள்**

1) கடமைகள் -உரிமைகள்- சலுகைகள் தொடர்பான விளக்கமின்மை.

2) ஆசிரியர்கள் தமது உரிமைகள் அல்லது சலுகைகள் பற்றி மட்டும் அறிந்திருத்தல் போதாது தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் ஏனையோரது உரிமைகளைக் காத்தல்வேண்டும். எனவே கற்பித்தல் பணியின் பயன்களை அனுபவிக்கும் மாணவர்களுக்குரிய சிறுவர் உரிமைகளையும் மாணவர் உரிமைகளையும் அறிந்து செயற்படல், பணியாற்றுதல் மிக அவசியமாகும். தொடர்ச்சியாக ஆசிரியர்கள் பதிற்கடையும் இல்லாமல் ஆசிரியர் லீவு எடுக்கும்போது மாணவர் கல்வி பாதிப்படையும் இதனால் சந்தர்ப்பங்களைச் சரியாக உணர்ந்து புரிந்துணர்வுடன் செயலாற்ற வேண்டியுள்ளது.

3) 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் சிறுவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். மாணவர்களான சிறுவர்களுக்கு மனித உரிமைகள் சாசணப்படி நீதிமன்றங்களால் சட்டபூர்வமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசியல் யாப்பும் இதற்கு வழிவகுக்கின்றது. அரசியல் யாப்பிற்கமைய பொதுமக்கள் தனியாள் ரீதியாகக் கொள்ளப்படல் - இது குடியுரிமைகள் என்ற ரீதியில் மாணவர்களுக்கு உண்டு. எனவே ஆசிரியர்கள் தமது மாணவர்களை கௌரவத்துடன் மகிழ்ச்சியாகக் கற்க வழிகாட்ட வேண்டும். ஆலோசனை வழிகாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையியல் மூலம் அவர்களை அன்பு வழிப்படுத்தி அவர்களது உரிமைகளைப் பேணிக் கற்கவும்- வாழவும் வழிகாட்ட வேண்டும். மாணவர்களுக்கு உடல்ரீதியான தண்டனைகள் இடம்பெற்று வருகின்றன. கல்வி உளவியலாளர்களும், ஆசியிரார் தொழில் வாண்மை யினரும் ஏற்றுக்கொள்ளாத ஒழுக்கம் பேணும் இம் முறைக்கு ஒத்தாசைகள் தற்போதும் உள்ளன. ஆனால் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் உடல் ரீதியான எல்லாத் தண்டனைகளும் உலகளாவிய ரீதியில் தடை செய்யப்பட்டுள்ளன. தண்டனை மூலம் பிள்ளைக்கு ஏற்படும் சேதத்திற்கு சேதத்தை ஏற்படுத்திய ஆசிரியர் அல்லது அதிபர் வகைகூறவேண்டும் மேலும் குற்றவியல் சட்டத்தின்படி அவர்கள் தண்டனைக்கு உட்படுவர். மாணவர்களுக்கு உடல் ரீதியான சேதம், ஆத்திரத்தில் அடித்தல், தாக்குதல் போன்ற செய்கைகளுக்காக ஆசிரியர் குற்றவாளியாக வாய்ப்புண்டு.

மேலும், ஆசிரியர் தமது மாணாக்கரை காயங்கள், சேதங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளல் சட்டரீதியான ஒருதேவையாகும். இவ்வாறாக அசிரியரும், அதிபரும் முகாமையாளர்களும் மாணவர்களின் உரிமைகளைக் காக்க முயற்சித்தல் வேண்டும். அவை மாணவர்களுக்கு முன்மாதிரி யாகவே செயற்படுத்தப்படல் பயன்களை அதிகரிக்கும். மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களின் உரிமைகள் ஊடாகக் கற்றலுக்கு உகந்த அனுகூலமான சூழ்நிலை ஒன்றை வகுப்பறையில் உருவாக்கும் அதே வேளை தம்மைப் பற்றிய அனுகூலமான நல்லெண்ணக் கருக்கள் உருவாகுவதற்கு அது காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமூக நிலைமைகள், யுத்தத்தாக்கங்கள் ஆயுதம் ஏந்தியோரின் முரண்பாடுகள் சமூகத்தில் - பாடசாலையில் வெளிக்காட்டப்படும் வன்முறைகளுடன் தொடர்புடையதாகவுள்ளது. சிறுவர்கள் வீட்டிலும், பாட சாலையிலும் சமூகத்திலும் பல்வேறு விதமான வன்முறை களுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இன்றைய பெரும்பாலான நாடுகளிலும் இலங்கையிலும் சிறுவர்கள் மீதான எல்லா உடல்உள வன்முறைகளில் இருந்து பாதுகாப்பதற்கே சிறுவர்களுக்கு உள்ளசம உரிமையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபன சிறுவர் உரிமை ஸாசனத்தை (Convention on the Rights of the Child) அங்கீகரித்ததன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சிறுவர் கௌரவத்திற்கும் உரிமை களுக்கும் மதிப்பளிக்கும்வகையில் பாடசாலை ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுவதை நிச்சயப்படுத்த சகல நடவடிக்கையையும் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக் கொண்ட நாடுகள் கைக்கொள்ள வேண்டும். சரத்து 28 (2) இவ்வகையில் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக பல பொறுப்புக்களை ஆசிரியர்கள் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வாண்மையில் முகாமைத்துவப் பாத்திரங்கள்

முகாமைத்துவம் என்பது ஒரு தொழிலில் பொறுப்பு வாய்ந்த பயன்தரு திட்டமிடலும், செயற்பாடுகளை ஒழுங் காக்கலுமாகும். இங்கே பொறுப்பு என்பது எதிர்வுகூறல், எதிர்காலவியல் நோக்கில் திட்டத்தைத் தீர்மானித்தல் திட்டத்திற்கமைவாக அடைவை உயர்த்துதல் அதனூடாக ஆளணியினரை வழிகாட்டி இயைவுபடுத்தி ஆர்வமூட்டல் என்பதாகும்.

இவ்வகையில் இன்றைய உலகளாவிய ரீதியிலான புதிய, மிக நவீன ஆசிரியப் பாத்திரங்களில் முகாமைத்துவப் பாத்திரம் மிக முன்னணியில் உள்ளது. ஆசிரியர் ஒரு முகாமையாளராக இருந்து சமூக மாற்றத்திற்கான முகவராகப் பாடசாலையிலும், சமூகத்திலும் பின்வரும் முகாமைத்துவப் பாத்திரங்களில் செயற்படுகின்றார்.

சமூகத் தலைவர் (Social leader)
குழுப் பொறுப்பாளர் (Group leader)
ஆலோசனை கூறுபவர் (Counselor)
இணைப்பாளர் (Coordinator)
இணைந்து கருமமாற்றுபவர் (Collaborator)
ஊக்குவிப்பாளர் (Motivator)
திட்டமிடுபவர் (Planner)
சிறப்பறிஞர் (Specialist)
உத்தியோகத்தர் (Officer)
வசதிப்படுத்துனர் (Facilitator)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பீட்டாளர் (Assessor)
சமரசப்படுத்துபவர் (Negotiator)

ஆசிரியர் இப்பாத்திரங்கள் ஏற்கும்போது தன் வகுப்பறை பாடசாலையில் தனக்குரிய பிரிவு மற்றம் இதனுள் அடங்கும் மாணவர் கற்றல் பற்றி தீர்மானம் எடுக்கும்போது, அத்தீர்மானங்களைச் செயற்படுத்தும்போதும் ஒரு முகாமை யாளராகச் செயற்படுகின்றார். இவ்வகையிலே ஆசிரியரின் முகாமைத்துவப் பாத்திரம் முதன்மை பெறுகின்றது. மேலும், ஆசிரியர் குழுத்தலைவராகவும், குழுக்களை இயக்குப வராகவும் குழுக்களிடையே இணைப்பை ஏற்படுத்துப வராகவும் காணப்படுகின்றார். சக ஆசிரியர்கள், பெற்றோர் கள், சமூகக் குழுக்கள் என்பவற்றிற்கு ஆலோசனை வழங்கும் முகாமையாளராகச் செயற்படுகின்றார். ஆசிரியர் குழாம் அங்கத்தவர் என்ற வகையில் அவர்களுடன் இணைந்து ஒற்றுமையாக சேவை செய்கின்றார்.

மேலும், தனது பாடத்தில் அல்லது செயலில் விசேட அறிவுள்ளவர் என்ற வகையில், கற்றல் செயன்முறை கல்வி நடவடிக்கை மூலம் வகுப்பறையில் தலைமை தாங்கும் ஆசிரியர் ஒரு முகாமையாளர் என்ற வகையில் அவர் நிர்வாகம் - மேம்பாடு என்ற நடிபங்குகளில் பணியாற்ற வேண்டி யுள்ளது. வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் ஆலோசனை சார்ந்த செயல்முறையினை வெற்றிகரமாக ஆற்றுவதில் ஆசிரியரின் முகாமைத்துவ நடிபங்கு இன்று முக்கிய இடத்தை வகிக்கின்றது. சுற்று நிருபங்கள், சட்ட திட்டங்கள், ஒழுங்குகள் என்பன பிரகாரம் வகுப்பறையில் கிரமமாக நடை முறைப்படுத்துல் ஆசிரியரின் முகாமைத்துவ நடிபங்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இதற்கு மேலதிகமாக பாடசாலையை வெற்றிகர மாக இட்டுச் செல்வதில் தலைமை தாங்கி கருமமாற்றும் அதிபரது பொறுப்பான பணிகளுக்கும் அவர் பங்களிப்பினை நல்குதலும், முகாமைத்துவ நடிபங்கின் இன்னொரு வகிபாகத்தை இயம்புகின்றது. இவ்வகையில் ஒரு நல்லாசிரி யர் முகாமைத்துவம் தொடர்பான அம்சங்களைத் தெரிந்து வைத்திருத்தல் மிக முக்கியமாகும்.

**முகாமைத்துவ அம்சங்கள்**

முகாமைத்துவப் பாத்திரத்தை நிறைவேற்றுதல் என்பதால் கருதப்படுவது யாதெனில், தான் எடுத்துக் கொண்ட இலக்கை நோக்கிச் செல்வதற்கு ஏனைய சகல வளங்களையும் ஒழுங்கு செய்தல் பற்றிய ஒரு தொகுதி தீர்மானங்களை எடுத்தலும், அவற்றைச் செயற்படுத்தல் தொடர்பான அம்சங்களை நிறைவேற்றலுமாகும். இவ்வகை யில் அடிப்படையான முகாமைத்துவ அம்சங்களாக

1) திட்டமிடல்

2) ஒழுங்கமைத்தல்

3 ) செயற்படுத்தல்

4) முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பிடலும் என்பவை உள்ளன. திட்டமிடலில் இலக்குகளையும் நோக்கங்களையும் தெரிந்தெடுத்தல், அவை தொடர்பான தீர்மானங்களைப் பல தொகுதிகளாக மேற்கொள்ளல் அவை நடைபெற வேண்டிய விதத்திற்கு வழிபாட்டுதல் என்பவையாகவுள்ளன. செயற் படுத்தலின் கீழ் குறிப்பிட்ட விடயங்கள் உரிய இடத்தில் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்தலும் அடங்குகின்றது. இக்கட்டம் மிகமுக்கியமானதாகும். முன்னேற்றக் கணிப்பு மதிப்பீடும் என்பதனுள் நிறைவேறிய செயலின் வெற்றியை அளவீடு செய்தலும் அவ்வெற்றிக்குரிய காரணிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வு செய்தலும் உட்படும். இவை அனைத்தும் வகுப்பறைக் கற்றலை வழிப்படுத்தும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுகின்றன. முகாமைத்துவப் பாத்திரத்தை நிறைவேற்றும் ஆசிரியர்,

1) பிறரைக் கொண்டு வேலையைச் செய்வித்துக் கொள்ளவும், பிறருடன் சேர்ந்து வேலைகளில் ஈடுபடுவார்.
2) வரையறுக்கப்பட்ட வளங்களில் இருந்து உச்சப் பயனைப் பெறக்கூடிய வகையில் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவார்.
3) இதன்படி காலத்தையும் பணத்தையும் பௌதீக மனித வளங்களையும் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தி வினைத் திறனையும், நோக்கங்களையும் எதிர்பார்த்தவாறு மாணவர் கற்றலை உச்ச மட்டத்தில் நிறைவேற்றுவார்.
4) கற்றல்சார் தேர்ச்சிகளை மாணவர் அடைய உழைப்பார். அவதானித்தல், செயல்நிலை ஆய்வுசெய்தல், பரிசோதனை களில் ஈடுபடல், குழுமுறையான புதிய கற்பித்தல் முறைகளைப் பரீட்சிப்பார். கற்பித்தலில் புதிய சாதனங் களைப் பயன்படுத்து வார்.
5) தமது அறிவைத் தொடர்ந்து புதுப்பிப்பார். தன் கல்வியை வாண்மையை உயர்த்துவார். வகுப்பறையை - பாடசாலை யை பராமரிப்பார்.
6) சுற்று நிருபர்கள், சட்ட திட்டங்களுக்கு அமையச் செயற் படுவதுடன், புதுமைகளை ஆக்குதல் மற்றும் பின்வரும் பாடசாலை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்**

இலக்கிய மன்றம், ஆங்கில மன்றம், விஞ்ஞான மன்றம் ஏனைய பாடமன்றங்கள், விளையாட்டு, முதலுதவிக் குழு பாடசாலை வாத்தியக்குழு, கல்விச் சுற்றுலாக்குழு, வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சிக் குழு, கல்விக் கண்காட்சிக் குழு, நூலக மன்றம், எழுத்தாளர்கழகம், நாடகமன்றம், வெளிக்கள ஆய்வுப் பயணக்குழு.

**பாடசாலை ஆதாரச் செயற்பாடுகள்**

கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் கழகம், வளர்ந்தோர் கல்விக்கழகம், வாண்மைத்துவ விருத்திக் கழகம், நலன்புரிக் கழகம்.

**நிர்வாகச் செயற்பாடு**

காலைக்கூட்டம், ஆசிரியர் கூட்டம், பழையமாண வர் சங்கம், பரீட்சைக்குழு, அறிக்கை பேணுதல் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மாணவர் முதல்வர் வழிகாட்டல் குழு.

**சமூகம் சார் செயற்பாடுகள்**

செஞ்சிலுவைச் சங்கம், அறநெறிப் பாடசாலைகள், சிரமதானம், இரத்ததானம், சுகாதாரப் போசாக்குக் குழு, சமூகசேவை சனசமூக நிலையங்கள், அறிஞர்களின் சொற்பொழிவு ஏற்பாட்டுக்குழு. நவீன தொழில்நுட்ப ஏற்பாட்டுக் குழு என்பவற்றின் ஊடாக ஆசிரியர் பல்வேறு முகாமைத்துவப் பாத்திரங்களின் ஊடாகப் பல அமைப்புக் களில் குழுக்களின் முயற்சியாண்மை, உளச்சார்பு (Entreneureal Attributes) கொண்ட முகாமையாளராகச் செயலாற்ற வேண்டியுள்ளது. இதற்கு ஆசிரியர்; சாதனைகளை விரும்புகின்ற இலட்சியம், சுய நம்பிக்கை - சுயவியாபகம், விடாமுயற்சி, தன்னிச்சையான கட்டுப்பாட்டு உணர்வு, செயற்படுத்தும் ஆர்வம் செய்வதன் மூலம் கற்றுக்கொள்ள விரும்புதல், கடினஉழைப்பு, மனத்துணிவு, ஆக்கத்திறன், மாணவர்களில் அன்பு கொண்டவராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தற்போதைய கல்விச் சீர்திருத்த நடைமுறைகள் கல்வி முறையின் தராதரங்களை அதிகரித்துப் பாடசாலை மாணவர்களிற்கு வலுவூட்டி தொழிற்சந்தையின் தேர்ச்சியையும், தகைமையையும், வேலை செய்யும் ஆற்றலையும் (Employable) உடையவர்களாக ஆக்குதல் மற்றும் பாடசாலைக் கல்வியினூடாக மனித விழுமியங்களை வழங்குதல், இதனால் மாணவர் இரக்கம், கருணை, அன்பு,தர்மம், சாந்தி, சமாதானம், சத்தியம் என்பவற்றைக் கொண்ட சமூகப் பொறுப்புள்ளவர்களாக வளர்ச்சிபெறச் செய்தல், சுயசிந்தனை, படைப்பாற்றல், புத்தாக்க முயற்சி, பகுப்பாய்வுத் திறன்கள் பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் என்பவற்றை ஊக்குவிக்கும் புதிய சீர்திருத்த நடை முறைகளில் ஆசிரியர்களின் முகாமைத்துவப் பாத்திரங்களுக்கே மிகுந்த முக்கியத்துவத்தை வழங்குகின்றன. இதில் போதனைச் செயன்முறை முகாமை முக்கியம் பெறுகின்றது.

## போதனைச் செயன்முறை முகாமைத்துவம்

ஆசிரியர் வகிபாகத்தில் முக்கிய பணியாகக் கருதப்படும் போதனைத் திட்டமிடலானது போதனைச் செயன்முறையின் தொடக்கமாகும். திட்டமிடலின் ஊடாக ஒழுங்கமைப்புச் செயற்படுத்தல், முன்னேற்றக் கண்காணிப்பு, மதிப்பீடு என்னும் முகாமைத்துவச் செயன்முறைகள் வெற்றியீட்டினால் மாத்திரமே போதனா முகாமையினூடாக மாணவர் கற்றல் வெற்றியளிக்கும். வகுப்பறையில் போதனைச் செயன்முறை முகாமைத்துவத் திட்டமிடலுடன் தொடங்குகின்றது. கலைத்திட்டம், மாணவர்கள் தர உள்ளீட்டு வளங்கள் பற்றிய விபரங்கள், விடயங்களை அடிப்படையாகக் கொண்டு போதனைத் திட்டமிடல் நடைபெறம். இப்போதனைத் திட்டமிடலுக்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைப்படும் ஆசிரியர்; முறைசார் முறைசாரா முறையில் முறைமைகளில் மாணவர் கல்வி பெறும் இயல்புகளைத் தெரிந்திருக்க வேண்டும்.

இங்கு முறைசார் கல்வி (Formal Education) என்பது கல்வி அமைச்சின் விதைப்புரைகளுக்கு ஏற்ப பாடசாலையில் கற்பிக்கப்படும் ஒரு திட்டத்திற்கு உட்பட பாட விதானத்தினூடாக ஏற்படுவனவாகும். பாடசாலையில் காலத்திற்குக் காலம் முறையான ஒழுங்கமைப்பில் கலைத்திட்டம், ஆசிரிய வழிகாட்டிக் கைநூல்கள், பாடப்புத்தகம்முதலிய உதவிகளுடன் இது முறையாகச் செயற்படுத்தப்படும். சரியான கல்வி இலக்குகளையும், நோக்கங்களையும் அடைந்து கொள்வதில் இது கவனம் செலுத்தும். மேலும், இது தொடர்பான வழிகாட்டல்கள் கல்வியமைச்சு - திணைக்களத்தில் இருந்து சுற்று நிரூபங்களாக வெளிவருகின்றன. இம்முறைசார் கல்வியை உரிய முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்க ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி (கல்வியியற் கல்லூரிகள்), சேவைக்காலப் பயிற்சி (கல்வித் திணைக்களப் பயில்வுகள்), தொடருறு கல்வி (ஆசிரிய நிலையங்கள்), கல்வியியற் கல்லூரிகள்) நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதை மேற்பார்வை செய்து வழிகாட்ட முறைசார் மேற்பார்வை வழிகாட்டல் முறைமை ஒன்றும் பாடசாலை அமைப்புக்களில் உள்ளன.

முறைசாராக் கல்வி (Non Formal Education) என்பது முறைசார் கல்விக்குப் புறம்பாக பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை வளப்படுத்துவதற்காகக் கையாளப்படும் பாடசாலை மற்றும் புறம்பான வேலைத் திட்டங்கள் இங்கு முக்கியம் பெறுகின்றன. இதில் இணைப் பாடவிதானச் செயன்முறைகள், வாண்மைத்துவ, நிர்வாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆதாரச் செயற்பாடுகள் என்பவற்றுடன் முக்கிய மாகப் பாடசாலைக்கே விசேடமான சட்டதிட்டங்கள் வெகு மதிகள் - தண்டனைகள், பாடசாலைச் சின்னம், (இலச்சினை) கொடி, வாசகம் இவை முறைசாராக் கல்வி அனுபவங்களை வழங்கும். மேலும், பாடசாலை லீவு காலங்களிலும், பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேற்றை எதிர்பார்க்கும் மாணவர்கள் பாடசாலை அநேரத்திற்கப் புறம்பாக மேற்கொள்ளும் பயிற்சி நெறிகளான தட்டச்சு, கணனிப் பயிற்சி, வானொலி, தொலைக்காட்சி திருத்தும் பயிற்சிகள், அவசர சேவைகள் என்பவையும் முறைசாராக்கல்வி அமைப்பில் உள்ளடக்கப்படு கின்றன.

முறையிற் கல்வியில் (Informan Education) இது தொடர்ச்சியாக மாணவர்மீது அண்மைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எல்லா வாழ்க்கை அனுபவங்களும் இதனுள் அடங்குகின்றது. பூரண மனிதனை உருவாக்கு வதற்கு உதவும் அக-புற அனுபவங்களை இது ஏற்படுத்து கின்றது. தொலைத்தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிக் கருத்தரங்குகள், செயல மர்வுகள், சொற்பொழிவுகள், ஆலோசனை வழிகாட்டல் முறையியல்கள் என்பவை இதில் அடங்கும். இவற்றை ஆசிரியர்கள் உணர்ந்து தம்மிடம் பயிலும் மாணவர்கள் இவ் அனுபவங்களைப்பெற வழிகாட்டவேண்டும். மேலும், ஆசிரியர் தன் முகாமைத்துவப் பாத்திரத்தின் ஊடாகக் கீழ்வரும் இன்றைய கல்வி இலக்குகளை விளங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

- தனியார் பூரண வளர்ச்சியின் மூலம் அவரது ஆற்றல்களை உச்சமட்டத்திற்கு விருத்தி செய்ய உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித உரிமைகளையும், சுதந்திரத்தையும் உறுதிப் படுத்துவதற்கு விரிந்த, விளக்கமுள்ள சமூகத்திறனும், அறிவுமுள்ள மனித நேயம் கொண்ட தனியாட்களைச் சமூகத்திலே உருவாக்கல்.
- சமூகத்தில் தனியாள் நிலைப்பாட்டுக்கும், அபிவிருத் திக்கும் ஆதாரமாகவுள்ள உற்பத்தி நடவடிக்கைகளிலே பங்கு கொள்ளும் ஆற்றலும் திறனும் உள்ள நபர்களைத் தோற்றுவித்தல்.
- பரஸ்பர விளக்கத்துடன் ஒற்றுமை, சமாதானம், நட்பு ஆகியவற்றுடன் கூடிய கூட்டுறவு வாழ்க்கையை மதிக்கும் மனித சமூகம் ஒன்றைத் தோற்றுவித்தல்.

இந்த நோக்கத்தையும், எதிர்பார்ப்புக்களையும் நிறை வேற்றிக்கொள்ளும் நோக்கத்துடன், பாடசாலை செயற்படும் பொழுது அதற்கு ஒரு முகாமைத்துவ ஒழுங்கு முறைமையும் - செயல் முறைமையும் அவசியமாகும். இதன்படி, பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிடல், பாடசாலை நாட்காட்டி, நேரசூசி, பாடஏற்பாட்டு ஒன்றி ணைப்புக்கள், கற்றல்-கற்பித்தல் விருத்திகளில், தரமேம் பாட்டு விருத்தியும்; நூலகம், ஆய்வுகூடம், ஒழுங்கமைப்பு, ஆசிரியர் மேற்பார்வை, வகுப்பறை மேற்பார்வை, அபி விருத்தி நடவடிக்கைகள், கல்வி முகாமைத்துவச் செயல் முறைகளாக இருக்கும்.

மாணவர் சேவை முகாமைத்துவத்தில் மாணவர் தேவைகள், நலநோம்பு, மாணவர் பற்றிய அறிக்கைகள், ஒழுக்காற்றுக்குழு நடவடிக்கைகள், மாணவர் வழிகாட்டற் சேவை, விளையாட்டு என்பவை அடங்குகின்றன. மேலும், துணைச்சேவைகளான அலுவலகப் பதிவுகள், பொது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபர் சேவைகள், பற்றுச்சீட்டுக் கடிதப் பரிமாற்றம். தாபனவங்கி, கட்டடப் பராமரிப்பு, பொருட்கள் பண்டங் கள் தர உள்ளீடுகள், விநியோகம், மாணவர் சேர்வு ஊழியர் குழு, ஆசிரியர் குழு, நிர்வாகம் என்பவை அடங்குகின்றன.

மற்றும் சமூகத் தொடர்புகள், வளங்களை ஒன்றி ணைத்தல், வருடாந்த அறிக்கைச் செயற்பாடுகள், விழாக்கள் என பாடசாலையானது பல பரிமாண முகாமைத்துவச் செயன்முறைகளை உள்ளடக்கிய ஒரு தொகுதியாக இயங்கு கின்றது. இதில், வகுப்பறை தொடர்பாக ஆசிரியரின் மிக முக்கிய முகாமைத்துவப் பாத்திரங்களாக,

1) வகுப்புப் பொறுப்பாசிரியர் பாத்திரம்
2) பாடப்பொறுப்பாசிரியர் பாத்திரம் என்பவை முக்கியம் பெறுகின்றன. இவ்விரு பாத்திரங்களையும் ஒரு ஆசிரியரே பெறும் சந்தர்ப்பங்களும் உண்டு.

**வகுப்புப் பொறுப்பாசிரியர் பாத்திரம்**

சகல வகுப்பறைக் கற்றல் செயன்முறைகள் அனைத்திற் கும் வகுப்புப் பொறுப்பாசிரியர் பொறுப்பாக இருப்பார். வகுப்பறை முகாமைத்துவம், கட்டுப்பாடு, ஒழுக்கம், மாணவர் நலன் பேணல் என்பவற்றின் பின்வரும் செயன் முறைகளுக்கு முகாமைத்துவ வகை கூறல்களை வகுப்புப் பொறுப்பாசிரியர் மேற்கொள்ளவேண்டும்.

1) உன்னதமான - கவின்நிலையான வகுப்பறைச் சூழலைப் பேணல்.
2) வகுப்பு நேரசூசி காட்சிப்படுத்தல், வகுப்பறைப் பொருட்களை ஒழுங்காக வைத்திருத்தல், சுத்தம் பேணல்.
3) மாணவர் உடல் - உளச்சுத்தம், சுகநல வேலைத்திட்டம், மாணவர் சீருடை கவனித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) முறைசார் வகுப்பு மாணவத் தலைவர் முறைமை, அவரது கடமைகளை ஒழுங்கமைத்தல்.

5) ஆலோசனை கூறல், நல்லொழுக்கம், ஒத்துழைப்பு, சமாதானம், கூட்டுறவு ஆகியவைமூலம் நன்மனப்பாங்கு ஏற்படுத்தல். வகுப்பிற்கு வரும் பாடப்பொறுப்பாசிரியர் பணிகளை இயைபுபடுத்தல்.

6) வகுப்பு நிர்வாகம் தொடர்பாக தரஇணைப்பாளர், பிரிவுத் தலைவர், அதிபருடனான தொடர்புகள், பெற்றோர் களுடனான தொடர்புகள்.

7) தினவரவு இடாப்பு, பாடப்பதிவு, கணிப்பீட்டு - மதிப்பீட்டுப் புள்ளிகள் பதிவு, மாணவர் முன்னேற்ற அறிக்கை, வசதிகள் சேவைக் கட்டணம், ஏனைய நிதி தொடர்பான பற்றுச்சீட்டுக்கள், மாணவர் முன்னேற்ற வருடாந்த அறிக்கைகளைப் பேணல்.

**பாடப்பொறுப்பாசிரியர் பாத்திரம்**

வகுப்பறையின் பிரதான கல்விச் செயன்முறை-பாடத்துறை சார்ந்த கலைத்திட்ட முகாமைத்துவம், கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளுக்கு வழிகாட்டுவதே பாடப் பொறுப்பாசிரியரது பாத்திரமாக உள்ளது. இவர் தனது பாடத்தைக் கற்பிப்பதுடன், பாடசாலையில் அப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் குழுவிற்குப் பொறுப்பாகவும் தலை வராகவும் செயற்படவேண்டிவரும். அவருடைய கடமைகளாக:

- ஆசிரியர் கைநூல், வழிகாட்டி, பாடத்திட்டம் என்பவற்றிற்கு ஏற்ப ஆண்டுத்திட்டத்தினூடு வேலைத் திட்டத்தை ஏனைய ஆசிரியர்களோடு இணைந்து தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், வழிகாட்டல் - மேற்பார்வை செய்தல், ஆலோசனைகளை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வகுப்புப் பாடங்களுடன் பாடப்பதிவுகளைக் கற்பிப்பதுடன், அதனுடன் இணைந்த இணைபாடவிதான நடவடிக்கைகள் செயலமர்வுகள், போட்டிகள், சுற்றலாக்கள் முதலியவற்றை ஏற்பாடு செய்தல்.
- குறித்த பாடத்தைக் கற்பித்தலுக்கெனத் தர உள்ளீடுகள், கற்பித்தல் உபகரணங்கள், தொழில்நுட்பசாதனங்களை ஏற்பாடு செய்தல்.
- மாணவர்களிற் கணிப்பீட்டுத் தேர்சியடைவுகளை ஆய்வு செய்தல், மேலதிக உதவி தேவைப்படும் மாணவர்களை ஏனைய ஆசிரியர்களுடன் இணைத்து இனம்கண்டு பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தமது பாடம் தொடர்பான புத்தாக்கங்களை, கையெழுத்துச் சஞ்சிகைகளை உருவாக்கல், ஒப்படைகள் தயாரித்தல், மேலதிக நூல்களைப் பயன்படுத்தல், நூலகத்தை முழுமையாக உபயோகிக்க வழிகாட்டல்.
- ஆசிரிய குழாத்துடனும், அதிபருடனும் ஏனைய எல்லா நடவடிக்கைகளிலும் ஒத்துழைப்போடு வேலை செய்தலும், பாடசாலை வேலைகள் தொடர்பாகப் பொதுப் பொறுப்பை ஏற்றலும்.
- தன்னுடைய பாடம் தொடர்பாகப் புதிய விடயங்களைப் பிரயோ கித்தல், சேவைக்காலச் செயலமர்வுகள்- தொடருறு கல்விச் செயலமர்வுகளிற் பங்குபற்றல்.

புதிதாக நியமனம் பெற்றுவந்த ஆசிரியர் கருணா மடத்தடி விநாயகர் கனிஷ்ட பாடசாலையில் 8ஆம் தர வகுப்புப் பொறுப்பாசிரியராகச் செயற்படவேண்டியேற்பட்டது. நீர் மடத்தடி விநாயகர் கனிஷ்ட வித்தியாலய அதிபராயின் வகுப்புப் பொறுப்பாசிரியரின் பொறுப்புப் பற்றிக் கருணாவிற்கு விளக்கமளிக்கும் விதத்தைப் பின்வரும் தலைப்புகளினூடாக விபரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வகுப்புப் பொறுப்பாசிரியர் ஒருவர் பாடப்பொறுப் பாசிரியரில் இருந்து வேறுபடும் விதத்தை விதந்துரைக்க.
2) நிர்வாக - முகாமைத்துவ அபிவிருத்தித் துறைகளுடன் தொடர்புபடுத்தி வகுப்புப் பொறுப்பாசிரியரின் பொறுப் புக்களை வரிசைப்படுத்துக.
3) பாடப்பொறுப்பாசிரியரின் வேலைகளை இலகுபடுத்தும் வகையில் வகுப்புப் பொறுப்பாசிரியரின் முகாமைத்துவ அணுகுமுறைகள் எவ்வாறு இருக்கும்.

தற்போது கல்வியியற்றுறையானது மனிதவள முகாமைத்துவ அணுகுமுறைகளினூடாக விருத்தியடை கின்றது. மேலும், கல்விப் பயன் நுகர்வியல், (Educational Utinity), என்ற செயல்முறை வெளிவரத் தொடங்கியுள்ளது. புதிய கல்வியியல் வளங்கள், நுட்பம் என்பவை முன்னர் ஒரு சிறப்பார்ந்த சேவையாகவே உள்ளது. அனைவருக்கம் உரித்தாக்கப்படவில்லை. வகுப்பறைகளில் கூட கெட்டிக் கார - வளமுள்ள மாணவர்களே பயன்கள் பெற்றனர். ஆனால், இன்று நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வியியல் அமம்சங்கள் யாவருக்கும் கிடைக்கப்பெற வேண்டும் என்பதே கல்விப்பயன் நுகர்வில் வழியாகத் தரப்படுகின்றது. நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் வளமுள்ள மாணவர்கள் அனைவரும் ஏதோ ஒருவகைத் தேர்ச்சியைப் பெற வேண்டும். இதற்கு ஆசிரியர் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெறவேண்டியுள்ளது.

முன் ஆரம்பக் கல்வியில் இருந்து கல்வியும் கற்றலும் வாழ்க்கை முழுவதும் தொடர, பாடசாலைக் கல்வி வழி காட்ட வேண்டும். ஆனால், பெரும்பாலானவர்களின் கல்வி இடைநடுவில் நின்றுவிடுகின்றது. இதைத் தீர்க்க ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வகுப்பறை முகாமைத்துவத்தில் "எவ்வாறு கற்கவேண்டும்?" என்பதைக் கற்க வழிகாட்டாமையே ஆகும். இது சிறுவயதிலிருந்தே ஏற்படுத்தலாம். கற்பவர்கள் ஆசிரியர்களாக (Self Teacher) நலைமாற்றம்பெறுவது எவ்வாறு என்பதை ஆசிரியர்கள் கற்பிக்க புத்தாக்கச் செயன்முறை களைப் பிரயோகிக்கவேண்டியுள்ளது. கற்றலுக்காகக் கற்றலை முகாமைப்படுத்தும் போது சுயமாகவே ஆக்கத்திறன் பிறக்கின்றது. இது எல்லா மாணவர்களிலும் ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகும். கற்றலானது வாழும்வரை தொடர வேண்டும். வாழவேண்டுமானாற் கற்கவேண்டும். இக்கற்ற லானது நோக்கத்துடன் முகாமைப்படுத் தப்படும்போது மகிழ்ச்சிகரமான கற்றற் சூழ்நிலை உருவாகும். இதற்குப் பாடசாலைத் தரத்தில் உள்ள பல்வேறு இடைநிலைகளை ஆசிரியர்கள் உணரவேண்டும். இவ்வினைகளின் ஊடாக ஆக்கத்திறன் ஆற்றலை வளர்க்கும் ஆசிரியர் உயர்வாண்மை யாளராகப் பிரகாசிக்கலாம்.

**போதனா முகாமையில் ஆசிரியரின் ஆக்கத்திறன் பாத்திரம்**

ஆசிரியர் தனது கற்பிக்கும் செயன்முறையின் ஊடாக ஆக்கத்திறன் உள்ளவராக மிளிரும்போது, மாணவர்களின் கற்றல் வினைத்திறனாகும். கற்றலும், கற்றலின் வழிகாட்டலும் ஒரு கலையாகும். ஆசிரியர்களிடம் இருந்து வெளிப்படும் ஆக்கசக்தியை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் ஆக்கத்திறன் சக்திகளை விருத்தியாக்கலாம். கற்றற் சந்தர்ப்ப ஆக்கம் ஒரு கலைஞனுக்குரிய ஆக்கத்திறனைக் கொண்டதாக அமையின், மாணவர்களக்குக் கற்றல் அனுபவம் சுவையான தாக விசேட தரத்துடன் கூடியதாக அமையும். எனவே, ஆசிரியர் தொடர்ச்சியாக ஆக்க வேலைகளில் ஈடுபடுபவராக இருக்கவேண்டும். ஆக்கத்திறனுள்ள ஒருவர் என்ற வகையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் இருக்கவேண்டிய குண இயல்புகளாக சுதந்திரமான சுயாதீன சிந்தனை, இயல்பான தன்மைக்கு மெருகூட்டலும் கௌரப்படுத்தலும், இயற்கை நியதியிலும் சமூக நியதியிலும் புதிய தொடர்புப் பாங்குகைள அறிவதில் தீர்க்கதரிசனம், சிந்தனைத்திறன், செயற்படுத்தும் ஆற்றல், தனக்குச் சொந்த மான ஆக்கத்திறன்களைச் சமர்ப்பிப்பதிற் பயமின்மையும், ஆத்ம சக்தியையும் கொண்ட இயல்புகளையும் கொண்டிருப் பார்.

மேலும், இவர் புதிய ஆக்கங்களுக்கும், சமூக நீதிக்கும் இடையிற் பொருத்தப்பாட்டைக் காண்பவராகவும், புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதிலும், புதிய அனுபவங் களைக் கட்டியெழுப்புவதிலும் வெற்றியுள்ளவராக இருப் பார். இவை அவருடைய போதனா முகாமைத்துவ ஆற்றலை விருத்தியாக்கும். நவீன கல்விப் போதனா முகாமையில் ஆக்கத்திறன் பற்றி ஆராய்ந்த ஜக்சன், மெஷிக் ஆகிய அறிஞர்கள் ஒரு ஆக்கத்திறனை ஆக்கச்செயல் எனத் தீர்மானிப்பதற்குப் பின்வரும் நான்கு நியதிகளை எடுத்துக் காட்டியுள்ளனர்.

1) **புதுமை** - ஆக்கப்படுவது புதிதாக தனித்தன்மை வாய்ந்ததாக, பொதுவாக காணப்படாத ஒன்றாக இருக்க வேண்டும்.
2) **பொருத்தமான தன்மை** - தேவைகளுக்கும் விருப்புக் களுக்கும் பொருந்தும் தன்மை.
3) **மாற்றிப் பயன்படுத்தல்** - ஒரு விடயத்தை அல்லது பொருட்களைக் கையாளும்போது அணுகுமுறையில் உண்டாகும் தீவிர இடப்பெயர்ச்சி.
4) **சுருக்குதல்** - ஒரு விடயத்தை விரிவாக பெரிதுபடுத்திக் கூறாமல் சுருக்கமாக கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்திறனூடாக ஒரு செயலின் பெறுமானமும் அழகும் உயர்வடைகின்றது. உளவியலறிஞர் மாஸ்லோ பின்வருமாறு ஆக்கத்திறன் பற்றி எடுத்துரைக்கின்றார். "தைரியம், துணிவு, சுயஏற்புடைமை, சுயமான இயக்கம், ஆகியவற்றை ஆக்கத் திறனுடையவர் கொண்டிருப்பார். அவர் ஓர் எழுத்தாளராக, விஞ்ஞானியாக, ஓவியராக, சமையல் செய்யும் பெண்ணாக இருக்கலாம். இங்கே சமையல் செய்யும் பெண்ணை எடுத்துக் கொள்ளுங்கள் அவள் தாயாக, னைவியாக, மகளாக, மனையைப் பேணி பொருள் வசதியின்றியே வீட்டை அழகாகப் பேணுதல் சிறந்த உபசரிப்பு, சுவையான உணவு வகைகளைச் சமைத்தல் போன்ற அவளது அழகியல் ஆக்க இயைபுகளில் புதுமை, புதுமை படைப்பு, ஆக்கஆற்றல், கண்டுபிடிப்பு ஆகிய அனைத்து இயல்புகளும் பிரகாசிக் கின்றது" என்றார்.

லிவிங் ரெய்லர் ஆக்கத்திறன் பற்றி பின்வரும் ஐந்து நிலைகளை எடுத்து இயம்புகிறார்.

1) **வெளிப்பாட்டுநிலை** - சுதந்திரமாகத் தமது ஆக்கங்களை வெளிப்படுத்தல்
2) **ஆக்கநிலை** - சில நுட்பங்களைப் பிரயோகித்துச் சிலவற்றை உருவாக்குதல்.
3) **கண்டுபிடிப்பு நிலை** - புதுமை படைக்கம் திறன் - ஆய்வு, ஆற்றல் - விருப்பு - அர்ப்பணிப்பு மூலம் நிகழும்.
4) **புத்தாக்க நிலை** - மரபுரீதியான நிலையிலிருந்து விலகுதல்.
5) **உடன் தோன்றுதல்** - ஒரு செயலைச் செய்து கொண்டிருக் கும்போது தற்செயலாகத் தோன்றுதல்.

இவ்வகையான ஆக்கத்திறன்களை எமது பாடசாலை களில் ஏற்படுத்த பல தடைகள் உள்ளன. வரையறைகள் உள்ளன. நெகிழ்ச்சி அற்ற நேரஅட்டவணை, பொதுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை சித்திகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தல், பாடாமையக் கலைத்திட்டம், ஒருமைப்பாடு பற்றிய ஆசிரியர்களுடைய மனப்பாங்கு என்பவை ஆக்கத்திறன் செயற்பாடுகளுக்குத் தடையாக உள்ளன. இவற்றின் தாக்கங்களை நீக்கி மாணவர்களின் ஆக்கத்திறன்களை ஊக்குவிக்கப் பின்வரும் வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

- ஆசிரியரிடம் மாணவர்கள் வினாக்களை உசாவும் கேட்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குதல், மாணவர் புதிய கருத்துக் களை ஆக்கங்களை முன்வைக்கும் பொழுது அவற்றின் பெறுமதியைத் தெளிவுபடுத்திக் காட்டல்.
- சுய வழிப்படுத்தப்பட்ட கற்றற் செயற்பாடுகளை ஊக்கு வித்தல் வாசிக்க, புத்தாக்கங்களை ஆக்க வழிகாட்டல்- ஊக்குவித்தல்
- புதிய கற்றல் செயற்பாடுகள்மூலம் சிந்தனைச் சக்தியைத் தூண்டல், வழமையான பாடச் செயற்பாடுகளுக்கு மேலாக; புத்தாக்கச் செயற்பாடுகளாகிய ஓவியம், இசை, நடனம், எழுத்தாக்கம், நாடகம், கவிதைத் துறைகளில் ஈடுபடச் சந்தர்ப்பங்களை அளித்தல்.
- புத்தாக்க ஆய்வுகளில் ஈடுபடுதல், விமர்சனம், அழகியலுணர்வு, இரசித்தல், கலையுணர்வு என்பவற்றை ஏற்படுத்தல்.

ஆக்கத்திறனானது ஒரு ஆசிரியரை, ஒரு சிந்தனையாளரை, அல்லது முகாமையாளரை அல்லது பிரச்சினையுணர்ந்து தீர்ப்பவரை, அவருடைய வழமையான சிந்தனைத் தொடரிலிருந்து விலகச்செய்து, வேறுபட்ட ஆக்கபூர்வமான சிந்தனைத் தொடருக்கு வழிசமைக்கின்றது. அதன் விளைவுகள் எல்லோருக்கும் பயனுடையதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்கத் திறனை, நுண்ணறிவு, எண்ணங்களில் தடங்கலின்மை, நெகிழ்ச்சி, புதியன புனையும் திறன், மீள் வரைவிலக்கணங்கள், மீள ஒபங்குபடுத்தும் ஆற்றல், தொகுப்பு, முடிவுக்கு வருதல் போன்ற பண்புகளை உயர்வடையச் செய்கின்றன. இவ் ஆக்கத்திறனை விருத்திசெய்யப் பின்வரும் பண்புகள் முக்கியம் பெறுகின்றன.

- **விழிப்பு** - சுற்றாடல் தொடர்பான உணர்வு, அவதானம் செலுத்தித் தகவல்களைச் சேகரித்தல்.
- **பதிவாக்கம்** - இலக்குகளைத் துணிதலும், அடை தலும், நம்பகமும், கூர்ந்து கவனித்தலும், வகை கூறலும்.
- **அபத்து நிலைமைகளை எதிர்நோக்கல்** - மாற்று அணுகுமுறைகளை மாற்றி அமைத்துக்கொள்ளும் திறன்.
- **புதுமை நாட்டம்** - சம்பவங்கள், நிலைமைகள் தொடர் பான உள ரீதியான காரண - காரிய விளைவுகளில் ஆக்கத்திறன்களில் தனிச்சிறப்பான தீர்வுகளைக் காணல், புதுமைகளை ஏற்றல்.
- **நெகிழ்ச்சித் தன்மை** - பல்வேறு விடயங்களைப் பல்வேறு கோணங்களில் நோக்கல், தன் மூலஅபிப்பிராயத்தைத் திருத்தி அமைத்தல், மாற்று அணுகுமுறைகளைப் பரீட்சித்தல்.

**ஆசிரியரின் நேரவள முகாமைத்துவப் பாத்திரம்**

கற்பிக்கும் கலையான ஆசிரியத்துவத்தில் நேர முகாமைத் துவம் மிகவும் முக்கியம் பெறுகின்றது. உலகின் மிக உன்னத முதன்மை வளமாக நேரமே உள்ளது. பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் போதனா முகாமைத்துவத்தில் நேரத்தை மிகவும் பயன்பாடுள்ள வகையில் திட்டமிட்டுப் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துதல் வேண்டும். ஆசிரியர்கள் தமது கற்பித்தற் செயற்பாடுகளில் எவ்வாறு நேரம் திட்டமிட்டுப் பயன் படுத்தப்படுகின்றது என்பதும்; எவ்வளவு உண்மையான விளைவினைக் கொண்டுவருகிறது என்பதும் எப்போதும் கவனத்திலிருக்க வேண்டிய விடயங்களாகவுள்ளன. நேரத்தைச் சேமித்துவைக்கவோ நிறுத்தி வைக்கவோ முடியாது. அதனை இழந்தால் இழந்ததாகவே இருக்கும். எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தை முற் கூட்டியே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் எமது பாடசாலை முறைமைகளிற் பெருமளவு நேரம் விரயமாக்கப் படுகின்றது.

பாடசாலையில் ஒரு 40 நிமிடப்பாடம் 30பேர் கொண்ட வகுப்பறையில் நடைபெறவில்லையானால் 40×30=1200 நிமிடங்கள், அதாவது 20 மணித்தியாலங்கள் வீணாக்கப்படுகின்றது என்ற முறையில் நோக்கும்போது எமது நாட்டின் கல்வி அபிவிருத்தியை நடைமுறைப்படுத்தும் பாடசாலைகள் நேரம் தொடர்பாக எவ்வளவு விழிப்புடன் இருக்கவேண்டும் என்பதை இயம்புகின்றது. நேரத்தை திருடுபவையாக:

- திட்டமற்ற வேலை ஒப்படைப்பு, தீர்மானம் இன்மையும், தாமதமும்
- ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம், நெருக்கடி முகாமை.
- தெளிவற்ற பொறுப்பு ஒப்படைப்பு, குறிப்பிட்ட பணி களில் அதிக ஈடுபாடு.
- சுய கட்டுப்பாடு, சுய அபிவிருத்தி, ஒழுக்கம் என்பன இன்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பணிச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்காமை, தொடர்பாடல் திறனின்மை.

இவ்வாறான நடவடிக்கைகளைக் குறைத்து, நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்த, நேரப்பயன்பாட்டுக்கான திட்டங்களை நாளாந்த, வாராந்த, மாதாந்த, தவணை ரீதியாக அமைத்துச் செயற்பாடுகளின் முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளலாம். மேலும், சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, சிறந்த பிரத்தியேக நேரத்திட்டமிடலை மேற்கொள்வதுடன்; மாணவர்கள் ஆற்றக்கூடிய பணிகளை அவர்களுக்குக் பகிர்ந்தளித்தல் செய்ய இயலாத வேலைகளைத் தவிர்த்தல், சுறுசுறுப்புடன் இயங்குதல் மற்றவர்களையும் இயங்க வைத்தல் என்பவை நேரவிரயத்தைத் தடுக்கின்றன. மேலும், கடந்த காலத்தை மீளாய்வு செய்தலும் நேர முகாமைத்து வத்தில் முக்கியம் பெறுகின்றன.

மனம் நன்கு செயற்படக்கூடிய காலைவேலைகளைத் தெரிவுசெய்து ஆசிரியர்கள் நன்கு பயன்படுத்த; பயன்களைப் பல மடங்காகப் பெறலாம். மேலும், நீண்டநேரம் ஒரு வேலையைத் தொடர்ந்து செய்வதாலும் வினைத்திறன் குன்றுகிறது. சாதாரண மனிதர்களுக்கு மன ஒருமைப்பாடு இயல்பாக, ஆகக்கூடியது 15-20 நிமிடங்களே ஆகும். அதன் பின்னர் குறையத் தொடங்கும் 60வது நிமிடத்திற் பூச்சிய நிலைக்கு வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆகவே, ஒவ்வொரு மணித்தியால இடைவேளையின் பின்பும் ஐந்து நிமிட வேளைவேளை எடுத்துக்கொண்டு வேலையில் ஈடுபடல் வெற்றியைக் கொடுக்கும். மற்றும் வகுப்பறை - பாடசாலைச் சூழல்-சிறந்த கவின்நிலை கொண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பின் ;நல்ல நேரப்பயன்பாட்டிற்கு உதவும். போதிய வெளிச்சம், காற்றோட்டம், அமைதி என்பன நேரத்தின் உச்சப்பயன்பாட்டிற்கு உதவும்.

திறமையாக, வினைத்திறனுடன் கற்பிக்கமுடியாத சூழ்நிலை, வேலைப்பழுவின் தாக்கங்கள் ஏற்படலாம். செலவிடும் நேரத்தின் அளவுக்கு வேலைகள் திருப்தியாகப் பூர்த்தியடையாது போகலாம். அவ்வாறான சூழ்நிலைகளில் இடைவேளைகளை அல்லது வேலைகளை மாற்றி ஒழுங்கு செய்வது நன்று. இன்று ஆசிரியர்கள் வேலைச்சுமையுடன் பல்வேறு பிரச்சனைகள், அறைகூவல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதால் அழுத்தங்களுக்கு உட்படவேண்டி ஏற்படுகின்றது. அவ்வேளைகளில் இடைவேளைகளை ஒழுங்குசெய்து மீண்டும் புத்துணர்சியுடன் பணியாற்ற ஆரம்பிக்கலாம். இவை தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்துத் தமது ஆளுமை, தலைமைத் துவப் பண்புகளினூடாக மேற்கொள்ளக் கூடியவையாகும்.

சுயமதிப்பீடு நேரத்தைச் சிறப்புற முகாமை செய்ய விரும்பும் அனைவரும் மேற்கொள்ளவேண்டிய தொன் றாகும். தனது நேரம் எவ்வாறு செலவளிந்துள்ளது எதிர் பார்த்த விளைவுகள் எந்தளவிற்கு அடையப்பட்டன என்பவை போன்ற சுய மதிப்பீட்டு அம்சங்களை அடிக்கடி ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும். இது குறைபாடுகளைத் தீர்க்க உதவும். ஆசிரியர் பங்குகொள்ளும் பல்வேறு கூட்டங்கள், முக்கிய பத்திரிகைச் செய்திகள், நூல்களிலிருந்து பெறப்படும் தகவல்களைக் குறிப்பெடுத்தல், சுயமாகச் சுருக்கெழுத்துக் குறியீட்டு முறையை விருத்தியாக்கல், தலைப்புக்களை இடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க்கோடிடல், நட்சத்திரக் குறியீடுகளை உபயோகித்தல் போன்றவற்றைச் சுற்றறிக்கைகள், கடிதங்கள், அறிக்கைகள் என்பவற்றை வாசிக்கும்போதே நேரத்தை மீதப்படுத்தலாம்.

**ஆசிரியரின் கல்வி அறிவுறுத்தற் பாத்திரம்**

கோட்பாட்டுத் தர ரீதியான அறிவு, திறமை, அபிவிருத் திக்குரிய கற்றல் - கற்பித்தலை நடைமுறைப் படுத்தல், முறை சார்ந்த பாடவிதானக் கற்பித்தல் என்னும் செயன்முறைகளின் கீழ் ஆசிரியரின் அறிவுறுத்தற் பாத்திரம் இன்னும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆளுமை மற்றும் நடத்தை வளர்ச்சிக்குரிய மாணவர்களின் கற்றல் அனுபவங் களைச் செயற்படுத்தல், இணைப்பாடவிதான அனுபவங்கள் மூலம் யதார்த்தமான வாழ்க்கை அனுபவங்களைப் பெறும் சந்தர்ப்பங்களை வழங்கல் தனிப்பட்ட குணஇயல்புகளை சமூக சக்தியாக விருத்தி செய்தல் மாணவர்களின் தலைமைத்து வத்தையும், ஆளுமையையும் விருத்திசெய்தல் என்பவற்றை நிறைவேற்றுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் வேண்டும். இவ்வறிவுறுத்தல் பாத்திரம் இன்று மிக முக்கியமான பாத்திரமாக, தனித்துவமான பாத்திரமாக விருத்தியடைந் துள்ளது. வழிகாட்டல் ஆலோசனைச் சேவை: இது மாணவர் களின் ஆளுமை விருத்திக்குத் தேவையான சக்தியையும், நடைத்தைகளையும் ஏற்படுத்துவதற்குச் சாதகமான முறை யில் மாணவரது நடத்தைப் பாங்கை மாற்றுதல் பற்றிய நடத்தை விருத்திப் பகுதியாகவுள்ளது. இன்னும் எல்லாப் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்விசார் மற்றும் தனியாள் பிரச்சனைகளை ஒரு மாணவன் எதிர்கொள்ளும்போது, கல்விசார் வழிகாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆற்றுப்படுத்தல்) - Educational Guidance மற்றும் கல்விசார் ஆலோசனை (சீர்மியம்) Educational Counseling வேண்டப் படுகின்றன. சுற்றாடலில் தேவைகளுக்கும், கேள்விகளுக்கும், எதிர்பார்க்கைகளுக்கும் ஈடுகொடுக்கமுடியாத நிலை ஏற்படு கின்றது. மேலும் கல்விச் செயல்முறையில் நாளாந்தமும் கல்விச் சுற்றுவட்ட முடிவிலும், மாணவர்கள் பலபிரச்சினை களையும் இடர்களையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது. இந்நிலையில் ஆற்றுப்படுத்தல் சீரிமிய நடவடிக்கைகளும் பணிப்பு நடவடிக்கைகளோ அல்லது திணிக்கும் நடவடிக்கை களோ அல்ல. மாணவர்களுக்காக ஆசிரியர் அல்லது சீர்மியர் மேற்கொள்ளும் தீர்மானங்களும் அல்ல. அல்லது மாண வரின் பிரச்சினைகளை ஆசிரியர் உள்வாங்கித் தாமே சுமக்கும் நடவடிக்கையுமல்ல.

பிரச்சினையுடன் வரும் மாணவர் தாமே சிந்தித்து, தாமே நியாயங்கண்டு, தாமே சில பொருத்தமான தீர்மானங்களை எட்டுவதற்கு உதவுதலே ஆற்றுப்படுத்தலும், சீர்மியமும் ஆகும். தன்னைத் தன்னூடாகப் பார்க்க இது உதவுகின்றது. இதனை இரு நிலைகளில் நோக்கலாம்.

1) மாணவரின் தனியாள் ஆற்றல், அவருக்கே உரிய தனித்துவமான நிலைபரங்கள், அவரின் பலமும் பலவீனமும் முதலியவற்றை யதார்த்த நிலையில் புரியவைத்தல்.

2) சூழலின் தேவைக்கும் கேள்விக்கும் ஏற்றவாறு தம்மை மாணவர் மதிப்பீடு செய்யவும், உருவாக்கிக் கொள்ளவும் உரிய, உளஆற்றலை வளர்க்க உதவுதற். இவ்வகையில் ஆசிரியர் தனது அறிவுறுத்தல் பாத்திரத்தில் வெற்றிபெற விழிப்புணர்வு உள்ளவராகவும், மாணவர்பால் உற்சாகமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகரமும், நட்பும், நம்பிக்கை யும், உடையவராக இருத்தல் வேண்டும். கல்வி ஆளுமை, பொறுமை, நேர்மை, சமநோக்கு, சமகணிப்புடைமை, கூட்டுறவு மனப்பாங்கு, பல்துறையாற்றல் முதலாம் பண்புகள் ஆசிரியருக்கு வேண்டப்படுகின்றன. இப்பண்புடைய ஆசிரியர்களே மாணவர்களின் உள நலத்தைப் பேணி, கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் நல்ல தொழிலைச் செய்ய உறுதியை ஏற்படுத்தலாம்.

**விவகார ஆய்வு**

க.பொ.த. உயர்தரம்வரை கல்வி கற்றுள்ள ரவி, பாடசாலைக் கல்வியின் பின்னர் தொழிலை எதிர்பாத்து இருப்பவனாவான். வேலைகளுக்கு விண்ணப்பித்தபோதிலும் இதுவரை அவனுக்கு வேலை ஏதும் கிடைக்கவில்லை. ரவி ரேடியோ, தொலைக்காட்சி, கணினி ஆகியவற்றைத் திருத்துவதில் மிக விருப்புடையவன். இருப்பினும், அதற்கான திறமைகளை அவன் வளர்த்துக்கொள்ளவில்லை. தொழில் ஏதுமின்றி வெறுமனே நாளைக் கடத்தும் மேற்படி நிகழ்ச்சி யின் அடிப்படையிற் பின்வரும் வினாக்களை அணுகுக.

1) தொழில் ஒன்றைப் பெறுவதற்கு ரவிக்குத் தடையாக இருக்கும் அவனது கல்வியிலுள்ள மூன்று குறைபாடு களைத் தருக.

2) ரவி போன்ற மாணவனுக்கத் தொழிலுலகிற்கு எளிதில் பிரவேசிக்க பாடசாலை எவ்வாறு உதவ முடியும்.

3) 2இல் நீர் குறிப்பிட்ட ஒரு விடையை அடிப்படை யாகக் கொண்டு பாடசாலை மட்டத்திற் செயற் படுத்தக்கூடிய செயற்றிட்டம் ஒன்றைத்திட்டமிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியரின் விழுமியமுகாமைப் பாத்திரம்**

பாடசாலைக்குள் செயற்படுத்தப்படும் கல்விச் செய்முறை; மாணவரிடம் விழுமிய நடத்தை விருத்தியை ஏற்படுத்தும். இதற்கு முன்னுதாரணமாக ஆசிரியர் விளங்க வேண்டும். சமூகத்தின் இளம் தலைமுறையினர் எதிர்பார்க்கும் முன்மாதிரியான நடத்தைப் பாங்கை, தானாக வெளிப் படுத்தும் நல்லொழுக்கப் பண்புள்ள, ஒருவராக ஆசிரியர் விளங்கவேண்டியது. விழுமிய முகாமையின் அடிப்படைத் தேவையாகவுள்ளது. சமூகத்திலே நிலவும் நீதி, நியாயங்கள், சமூக விழுமியங்கள், கலாச்சாரப் பெறுமானங் கள் ஆகிவற்றைத் தற்காலச் சமூகத்திற்குப் பொருத்தமான விதரத்தில் தர்க்க ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும், இளம் தலைமுறையினருக்குச் சமர்ப்பிக்கும் திறனும், மனப்பாங்கும் கொண்ட ஒருவராக ஆசிரியன் நல்ல சமூகத்தைப் பிரதி நிதித்துவப்படுத்த வேண்டும்.

ஆகையினால் ஏனைய தொழில்களில் ஈடுபட்டிருப்ப தனைவிட சமூகப் பழக்கவழக்கங்கள் பற்றியும், கலாச்சாரப் பாங்குகள் பற்றியும், சிறந்த விளக்கமுள்ள புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூகநடத்தைப் பாங்கை மட்டும் வெளிக்காட்டுகின்ற வகையில் நடந்துகொள்வது அவசிய மாகும். அதனாலேயே ஆசிரியர் தொழிலுக்குரிய சிற்சில சமூகமயமான நற்பழக்கவழக்கங்களைக் கட்டியெழுப்பு வதற்கு பல சமூகங்கள் முயற்சி எடுத்தவண்ண முள்ளன. இதிலிருந்து ஒரு சமூகத்தின் இளந்தலை முறையினரை மாற்றி அமைக்கும்பொழுது மாணவரின் சமூகம் மற்றும் சுய முன்னேற்றத்தின் மீது ஆர்வமுள்ள ஒருவராக ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் எதிர்பார்பினூடாக ஆசிரிய விழுமிய முகாமைத்துவப் பாத்திரம் கட்டியெழுப்பப்படுகின்றது.

இன்றை சமூகத்திலும், உலகிலும் விஞ்ஞானம் தவறாகவும், தாறுமாறாகவும் செயற்படுகின்றது. சனத் தொகைப் பெருக்கம், தர்மத்திற்குத் தகாத பொருளாதாரம், தீய செயல்களின் அதிகரிப்பு என்பவற்றாற் பெரும் வேதனை கள், துன்பங்கள் அமைதி இன்மைகள் நிலவி வருகின்றன. இவற்றைத் தீர்க்கம் ஆரம்ப அடிப்படை நிலையங்கள் பாடசாலைகளே. அதிலும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் அன்பு, சத்தியம், தர்மம் சாந்தி, அகிம்சை ஆகிய விழுமியங்கள் முகாமைப்பண்புளே இவற்றைத் தடுக்கக் கூடிய சக்திகள், ஆசிரியர் தன் உயர் வாண்மையால் அர்ப்பணிப்பான தியாகத்தால், ஆன்மீக ஞான ஒளியால்நல்ல மாணவர் பரம் பரையையும், எதிர்காலத்தில் நற்பிரஜைகளையும் உருவாக்க முடியும். மனிதவிழுமியங்கள், மேம்பாட்டுக் கல்வியே இன்று எல்லாக் கல்வி நிலையங்களிற்கும் ஆதாரமாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை முகாமைத்துவம்

ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை, அந்நாட்டின் நிகழ்காலப் பாடசாலை வகுப்பறைகளே தீர்மானிக்கின்றன. வகுப்பறையானது, நித்தம் பல்வேறு மாணவர் நடத்தைகள் நிறைந்து காணப்படும் ஓர் இடமாகும். ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் உயிரோட்டமாகப் பங்கேற்கும் மாணவர்கள் உளர். சிலர் அத்தருணத்தில் அடுத்தவருடன் சண்டையிடுவர். மற்றும் சிலர் தேவையற்ற ஒலிகளை எழுப்பிக் குறும்புகளில் ஈடுபடுவர். வேறுசிலர் அருகிலுள்ளவர்களுடன், சண்டையிடுவர். மேற்படி நடத்தைகள் கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளுக்குத் தடைகளை விளைவிப்பன வாகும்.

இத்தகைய தடையான நடத்தைகளை இயன்றவரை குறைக்கவும், கற்றலுக்கு ஏற்புடைய நடத்தைகளை தோற்றுவிக்கவும் ஆசிரியர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனால், வகுப்பறையிற் சிறந்ததொரு கற்றல் - கற்பித்தற் சூழ்நிலையினை உருவாக்க முடியும். இதன் நிமித்தம் வகுப்பறையில் கருமமாற்றதல் வகுப்பறை முகாமைத்து வத்தின் முக்கிய கூறாகவுள்ளது. வகுப்பறையில் மாணவர் களது இயல்புகள் காரணமாகத் தோன்றும் மாணவர் நடத்தைகளும், ஆசிரியரது செயல்களும் இடைவினைகளை ஏற்படுத்துகின்றன. இவற்றை இருபகுதிகளாக நோக்கலாம்.

1) உளவியல் சார்ந்த மற்றும் உயிரியல் சார்ந்த காரணிகளாற்றோன்றும் மாணவர் நடத்தைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) சமூகம், கலாசாரம் மற்றும் பொருளாதாரம் என்பன சார்ந்த காரணிகளால் தோற்றம்பெறும் மாணவர் நடத்தைகள்.

பிரச்சினைகள், பயம், ஏக்கம், பதட்டம் போன்ற அசாதாரண காரணங்களால் உண்டாகும் அசாதாரண நடத்தைகள், அன்பு காட்டப்படாமை காரணமாக வெளிப் படுத்தப்படும் வன்முறைகள் சார்ந்த நடத்தைகள், கட்புல செவிப்புல இழப்புக்கள், உடல், உளம் சார்ந்த குறைபாடுகள், விசேட தேவைகள் தொடர்பான விடயங்கள் என்பவை உளவியல் - உயிரியல் தொடர்பான காரணிகளாற்றோன்றும் மாணவர் நடத்தைகளாகவுள்ளன.

மாணவர்களது சமூக அந்தஸ்து, பொருளாதார நிலைமைகள், கலாசாரப்பின்னணி என்பவற்றால் தோன்றத் கூடிய நடத்தைகளைச் சமூகம், கலாசாரம், பொருளாதாரம் போன்ற காரணிகளால் உருவாகும் மாணவர் நடத்தைகள் எனலாம்.

மேற்படி மாணவர் நடத்தைகள் தவிர, ஆசிரியரது பல்வேறு செயல்கள், நடத்தைகள் என்பனவும் வகுப்பறை யிலுள்ள மாணவர்களின் நடத்தைகள்மீது செல்வாக்கச் செலுத்துகின்றன. ஆசிரியர் உரிய நேரத்திற்கு வகுப்பறைக் குச் செல்லாதிருத்தல், அனைத்து மாணவர்மீதும் நியாயமான கவனத்தைச் செலுத்தாது விடல், சில கற்பித்தற் கோலங்கள், கற்பித்தல் முறைகள் காரணமாகவும், கற்றலுக்குப் பாதகமான நடத்தைகள் தோன்றலாம். எனவே, மேற்படி தமது செயல்களைத் தவிர்த்துக் கொள்வதனால் மாணவர்களது வகுப்பறைக்குப் பொருந்தாத நடத்தைகளைக் குறைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹென்சன் (1970)** - வகுப்பறை முகாமைத்துவம் என்பது தனிச்சிறப்பான செயற்பாடுகளையுடையது. இவற்றினூடாக ஆசிரியர் நல்ல நிலைமைகளை உருவாக்கிப் பேணலாம். இந்நல்ல நிலைமைகள் தான் மாணவர் வகுப்பறையில் கல்விப் பணிகளை ஆற்றுவதற்கு தம் இயல்பான ஆக்கத்திறன்களைப் பயன்படுத்த உதவ முடியும்.

**பொரன் (1985)** - வகுப்பறை முகாமைத்துவம் என்பது கற்றலுக்கான உதவி என்ற வகையில் வகுப்பறையை ஒழுங்கு செய்வதும் கற்றலுக்கான தமது அணுகுமுறைகளைத் தனிப்பட்ட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்வதுமான வழிமுறை யாகும். மாணவர் விரும்பத்தக்க அறிவுசார் விளக்கம் ஏற்படும் வகையில் ஆசிரியர் சிறந்த முகாமைத்துவத்தினூடாகத் தமது பணிகளைச் செய்ய முடியும். தமது கற்பித்தலை முன்வைக்க முடியும்.

**லெம்லேட் (1988)** - வகுப்பறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே வகுப்பறை முகாமைத்துவமாகும். இது பாட ஏற்பாடுகளைத் திட்டமிடுதல், நடைமுறை களையும், வளங்களையும் ஒழுங்கு செய்தல், மாணவர் முன்னேற்றத்தைக் கவனித்தல், வரக்கூடிய பிரச்சினைகளை எதிர்பார்த்தல் என்பவையாகவுள்ளன.


**பேராசிரியர் சபா ஜெயராசா (2003)** - வகுப்பறை முகாமைத்துவம் ஒரு ஒழுங்குமுறையிலமைந்த ஆற்றுகை யாகும். திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், தொடர்பாடல், காலம், தர உள்ளீடுகள், மனிதவிழுமியங்கள், ஆளுமை இடைவினைகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தச் செயற்படுநிலைப் பண்புக்கூறுகளின் தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையிற் பரந்த வீச்சுக்களைக் கொண்ட வகுப்பறை முகாமைத்துவத்தில் மாணவர் நடத்தைகள்மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான சிறந்த விளக்கங்களை ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். அதன் நிமித்தம் கலைத்திட்டம், கல்வி உளவியல் பிரயோகங்கள், மனிதவள மேம்பாடு, ஆளுமை, கல்வி வழிகாட்டல் ஆலோசனை, கல்விச் சமூகவியல், கல்விக்கோட்பாடுகள், முறையியல்கள், தொழிநுட்பங்கள், வளங்கள், நேரம், கணிப்பீடு என்ற அம்சங்களில் நிபுணத்துவமுடைய ஆசிரியரா லேயே வகுப்பறை முகாமைத்துவத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தலாம். மேலும், வகுப்பறையில் நிகழும் சமூகத் தொடர்புகள், இடைவினைகள், வகுப்பறை முகாமைத்து வத்தில் முக்கியம் பெறுகின்றன.

வகுப்பறையின் இடைவினைகள் தொடர்பாக சமூக மயமான சோதனையின் தரவுகளின் பிரகாரம் தயாரிக்கப் பட்ட திட்டத்தை அவதானிக்க.




**வினா:**

1) சிவன், பாலன் ஆகியோரைச் சிறப்பிக்கக் கூடிய சமூக மயமான பெயர்கள் எவை?

2) சிவன், பாலன் ஆகியோரிடையே இவ்வாறான வேறு பாடுகள் தோன்றக் காரணங்கள் எவையாகவுள்ளன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) சிவன் - பாலன் ஆகியோரின் வேறுபாடுகளைக் குறைக்கும் வகுப்பறை முகாமைத்துவப் பிரயோகங் களை உதாரணங் களுடன் விளக்குக?

**விடைகள்:**

1) சிவன் - சமூக நட்சத்திரம், பாலன் - தனிப்படுத்தப் பட்டவன்

2) குடும்பப்பின்னணி, (செல்வம் - வறுமை), தேவைகள் நிறைவு - நிறைவில்லை, சமூகச்சூழல், பாதிப்புக்கள், குடும்பப்பிரச்சினைகள் (குடும்பத்தில் தனிப்பிள்ளை)

3) பாலனைக் குழு வேலைகளில் ஈடுபடுத்தல், திறமை களைப் பாராட்டுதல், ஊக்குவித்தல், இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், தலைமைத்து வப் பொறுப்புக்களை வழங்கல்.

**சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்தின் அடிப்படைகள்**

1) நேரம் தவறாமை, பல நிர்வாகக் கல்விப் பிரச்சினை களை இது அகற்றும்.

2) நன்கு திட்டமிட்ட ஆயத்தநிலை (பாடம். கற்பித்தல் வளங்கள்)

3) விரைவாக வேலையில் ஈடுபட ஆயத்தமாதல் - உறுதியான விரைவான, வினைத்திறன் மிக்க அணுகுமுறை, பொருத்த மான உபாயங்கள், உடனடியாக மாணவர் கவனத்தை ஈர்த்தல்.

4) குரலைச் சிறப்புறப்பயன்படுத்தல், வகுப்பறைச் செயற் பாடுகளில் உன்னிப்பான கவனம், விடயங்களைச் சரியாகப் பகுப்பாய்வு செய்தல்.

5) நெருக்கடி நிலைகள், பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது தெளிவாக - உண்மையாக- யதார்த்தமாகச் செயற்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மாணவர்களை ஒப்பீடு செய்தலைத் தவிர்த்தல், நிச்சயமான வாக்குறுதிகளைக் கொடுத்தல் - அவற்றை நிறைவேற்றல்.

7) வகுப்பறையைச் சிறந்த முறையில் ஒழுங்கமைத்தலும், வழமையான வேலைகளை மாணவர்களுக்குப் பகிர்ந் தளித்தலும்.

8) மாணவர்களின் பல்வேறு பிரச்சினைகளைக் கவனித் தல், தனிக்கவனம் செலுத்துதல், ஆசிரியர் மாணவர் தொடர்பை உயிர்ப்பாக வைத்திருத்தல்.

இவ்வாறான அடிப்படைகளினூடாக மாணவர் நடத்தைகளை வகுப்பறையில் முகாமை செய்கையில் ஆசிரியர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். வகுப்பறையில் அமுலாகும் சட்டங்கள், மரபுகள், நியமங்கள், தகுதிப்பிரமாணங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தி, மாணவர்களின் சுய கட்டுப்பாட் டொழுங்கை உருவாக்கி, வகுப்பறை வினைத்திறனை அதிகரிக் கலாம். வகுப்பறைச் சட்டங்களின் மிகக் கடுமை யான நடைமுறை, கடும் தண்டனைகள் என்பவை நீண்டகால நோக்கில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இது விடயத்தில் கூடுதல் கவனம்செலுத்த வேண்டும். வகுப்பறைக்குப் பொருந்தாத நடத்தைகளை இயன்றவரை குறைப் பதற்கு மானுடவியல் வழிகாட்டல் முறைமைகளைக் கையாளல் இதனுடன் தண்டனைகளாற்கூட சில பொருத்த மற்ற நடத்தைகளை நீக்கலாம். மேலும் தண்டனைகள் வழங்கும் போது மிகமிக அவதானமாக ஆசிரியர் செயற்பட வேண்டும். தண்டனையால் மாணவர்களின் எதிர்கால ஆளுமையில் பாதிப்பினை நிகழ்த்தாத முறையில் ஆவன செய்ய வேண்டும். இவ்விடயத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது சுயகட்டொழுங்கு, சுய தூண்டல் என்பனவாயிலாக மாணவர் நடத்தைகளை முகாமை செய்தல் ஒரு பிரதான உத்திமுறையாகவுள்ளது. மாணவ நடத்தை களை முகாமைத்துவம் செய்ய ஆசிரியர் சிறந்த ஆளுமைப் பண்புடையவராக மிளிர வேண்டும். மாணவர்களிடம் வரவேற்பைப் பெறவியலாத அல்லது தன்னலங்கொண்ட புகழை விரும்பும் ஆசிரியர்களால் மாணவர்களின் நடத்தை களைக் கட்டுப்படுத்தல் கடினமாகும். சிறந்த முன்மாதிரி யினை அளிக்கவியலாத ஆசிரியரால் தம் மாணவர்களின் தீய நடத்தைகளைக் கட்டுப்படுத்தல் கடினமாகும். முன்மாதிரி நியாயமாக நடந்துகொள்ளல், நல்லியல்புகள், வசீகரம், தகுந்த ஆடையணிகளைக் கைக்கொள்ளல், வளைந்து கொடுக்காத தன்மை, நேர்மை என்பன பொருந்திய ஆசிரியரால் மாணவர் நடத்தைகளை முகாமை செய்து வகுப்பறைச் செயற்பாடு களை வினைத் திறனாக்கலாம். இன்று மேற்கத்தைய வகுப்பு மாதிரிகள். வயது வந்தோர், ஆசிரியர்களைக் கௌரவிக் காமை, கட்டொழுங்குகளைப் பேணாது கலாச்சாரப் பண்பிகள் படிப்படியாகக் குன்றிவிடும். நடவடிக்கை களினால், எதிர் கால வகுப்பறைகளில் சிக்லான நடைத்தைகள் நிறைந்துவிடக் காரணமாகலாம். எனவே இவ்வாறு விரைவாக மாறிக் கொண்டிருக்கும் சமூக - கலாசார-மானுடவியல் இயல்புகள் பற்றி அசிரியர்கள் மிகுந்த விழிப்போடு இருக்க வேண்டும். இவ்விழிப்பினூடு கல்விக்கோட்பாட்டுசார் அறிவு, சுய அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் மாணவர்களின் நடத்தைகளை முகாமை செய்ய ஒவ்வொரு அசிரியரும் தாங்களாகவே புதிய சுய பிரவேசங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களது நடத்தைகளோடு கருமமாற்றல்**

உங்கள் பாடசாலையில் நீங்கள் முகம்கொடுக்க நேரிடும் பல முரண்பாடாண சந்தர்ப்பங்களில் எவ்வாறு கருமமாற்ற வேண்டும். எனச் சிந்தித்துச் செயற்படவும், மாணவர்களின் பாதக நடத்தைகள் ஏற்படுவதில் அல்லது அத்தகைய நடத்தைகளை ஊக்குவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும், தாக்கங்களை விளைவிக்கும் ஆசிரியர் நடத்தை களும் பற்றிய திறனாய்வு மிக அவசியமானது. கீழ்வரும் விடய ஆய்வுப் பட்டியலை ஆராய்க:

1. 10ஆம் தர வகுப்பில் விஞ்ஞான பாடநேரத்தில் மௌனமாகச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு மாணவர்களுக்கிடையில் இரகசியமாக நிகழும் பேச்சை ஆசிரியர் கண்டபோது அது பற்றிக் கரிசனை எடுக்கவில்லை.
2. மாணவர்கள் ஒரு வீடியோக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் தருணத்தில், அதனைக் கவனமாகப் பார்க்குமாறும், இல்லாவிடில் வீடியோவில் இடம் பெறுவதைப் பற்றி ஓர் ஒப்படையைத் தாம் அளிப்பதாகவும் திரு. சுந்தரம் ஆசிரியர் கூறுகின்றார்.
3. பரீட்சை நடைபெறும் தருணத்தில் ஒரு மாணவன் தனது முழங்கையினால் மற்றொரு மாணவனை இடிக்கிறான். இடிபடும் மாணவன் "நிறுத்தடா மடையா" எனக்கத்துகிறான்.
4. 8ம் தர மாணவர்களில் ஒரு குழுவினர் ஆசிரியர் உரையாடிக் கொண்டிருக்கையில் எதிர்ப்பக்கத் திலிருந்த மாணவியர் மூவர் சிறு கண்ணாடியில் முகம் பார்த்தபடி தலைசீவியவாறு உதடுகளில் சாயமிட்டுக் கொண்டிருப்பதை ஆசிரியர் காண்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 10ஈம் தர மாணவர்கள் குழுச்செயற்பாடொன்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் அவர்களில் ஒரு மாணவன் "இவ்வகுப்பு நேரத்தை வீணாக்குகின்றது" எனக் கத்துகின்றான்.

6. வகுப்பு ஆரம்பமாகுந் தருணத்தில் ஒரு மாணவி தனது கதிரையில் அமர ஆயத்தமாகும்போது மாணவன் ஒருவன் அவளது கதிரையைப் பின்புறமாக இழுத்து விட, இவள் கீழே விழுந்துவிடுகிறாள்.

வகுப்பறையில் மாணவர்களிற் பல்வேறு பொருத்த மற்ற நடத்தைகள் ஏற்படுகின்றன. இவை பெரும்பாலும் பல்வேறு உளவியல், சமூக, பொருளாதாரச் சார்ந்த காரணி களால் தோற்றம் பெறுகின்றது. அவற்றுட் சில ஆசிரியரது குறிப்பிட்ட நடத்தைகள் காரணமாகவும் உண்டாகின்றன. ஆசிரியர்களது அத்தகைய நடத்தைகளை ஆசிரியர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இனம்காணவே மேற்கூறிய பகுதிகள் தரப்பட்டுள்ளன. மேற்கூறிய விடைய ஆய்வுப் பட்டியலின் ஒவ்வொரு சந்தர்ப்பம் தொடர்பானவும் நட வடிக்கை எடுக்க வேண்டிய விதம் பற்றிய செயற்பாட களை வரையறுக்க.

**வகுப்பறைக் கவின்நிலை முகாமை**

பற்றுணர்வு, விசுவாச, விழுமியம், மனப்பாங்கு, புலக் காட்சி, ஊக்கல், இலக்குகளை அடைதல் போன்றவற்றை வகுப்பறைக் கவின்நிலை பிரதிபலிக்கும். இத் பயன்தரும் கல்வித் தொழிற்பாடுகளுக்கான மாணவர்களின் கூட்டுச் சக்தியை வெளிப்படுத்தும், ஆக்கத்திறனை அதிகரிக்கும். பாடசாலையில் உயிர்த்துடிப்புடன் காணப்படும் அலகாக வகுப்பறையே நிகழ வேண்டும். எமது பிரதேச வகுப்பறை களில் வளங்கள் அரிதாகவே உள்ளன. வகுப்பறை உள்ளகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின்நிலைச் சூழலை உருவாக்க இவ்வளங்களும், சாதனங் களும் அவசிய தேவைகளாகவுள்ளன. இவற்றுடன் சாதகமான மனித இடைவினைகளும் வகுப்பறைக் கவின்களுக்கு ஆதாரங் களாக வுள்ளன. வகுப்பறை தொடர்பான முழுமையான கவின் நிலையின் அம்சங்களாக மானுடக் கவின்நிலை, சகபாடி களின் நிலை, முகாமைத்துவக் கவின்நிலை என்பனவாக வுள்ளன.

இங்கு மானுடக் கவின்நிலையானது மனிதத் தொடர் புகளை வகுப்பறை அங்கத்தவர்களுக்கிடையில் முன்னேற்ற வும் அவர்களுடைய மனப்பாங்கு பாடசாலை - சமூகத்தை நோக்கி வளர்க்கவும் உதவும் ஆய்வுகள் மூலம்சாதகமான மானுடக் கவின்நிலை அம்சங்களாக: சௌகரியம், நட்பு, வளர்தல், ஆக்கபூர்வ நெருக்கம், உற்சாகம், நிதானம் என்பன வாகவுள்ளன. இதுபோலவே சகபாடிகள் கவின்நிலையில் மாணவரிடையே வகுப்புரீதியாக எழும் கூட்டுணர்வு முக்கியம் பெறுகின்றது. முகாமைத்துவக் கவின்நிலையில் முகாமைத்துவப் பங்குகள், பங்கு கொள்ளல், ஜனநாயகப் பண்பு, ஒத்துச் செல்லல், தன்னாட்சி, திறந்ததன்மை, என்பவை அடங்குகின்றன.

கல்விசார் கவின்நிலையில் வகுப்பறை அங்கத்தவர் களான மாணவர்களின் உணர்வுகள், நம்பிக்கைகளில் இருந்து தோற்றம் பெறுகின்றன. இவை கற்கக் கற்றல் தேர்ச்சி, செயல் சார் ஆய்வுகளை மேற் கொள்ளல், ஒப்படை வேலைகளில் வெற்றி காணல், புத்தாக்கங்களை மேற் கொள்ளல் என்பவை யாக விரிகின்றன. இக்கல்விசார் கவின் நிலையானது வகுப் பறையில் ஆட்கொள்ளப்படும் கற்பித்தல் - கற்றல் அணுகு முறைகள், மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு ஏதுவான காரணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகியவற்றிலும் செல்லவக்குச் செலுத்தகின்றன. கற்றலுக்கான புரண சந்தர்ப்பம் இங்கு வழங்கப்படுகின்றன. பல்வேறு பரிமாணங்களையுடைய வகுப்பறைப் பரிமாண கவின்நிலை அம்சங்கள் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மேலும் ஆசிரியர்களுடைய வகுப்பறை முகாமைத்துவக் கற்பித்தல் அணுகுமுறைகள் திய வகிபாகங் களையும் சந்தர்ப்பங்களையும் வகுப்பயையில் ஏற்படுத்தலாம். இது தொடர்பான ஒரு நிறு வகுப்பறைக் கவின்நிலைச் சம்பவம் ஒன்றை அவதானிக்க:


சிவபூதவாயர் வித்தியலயத்திற்கு அண்மையில் நியமனம் பெற்று வந்த இரு ஆசிரியர்கள் பற்றி அவ்வித்தியாலய அதிபரினால் முன்வைக்கப்பட்ட விடயஙகள் வருமாறு

"ஆசிரியர் செந்திலின் வகுப்பில் கற்பிக்கும் போது நடாத்தும் குழுச்செயற்பாடகள் பாடசாலைக்குத் தலையிடி யினைக் கொடுக்கின்றது. அதிக இரைச்சலினால் ஏனைய வகுப்புகளிலும் வேலை செய்யமுடியாத நிலையுள்ளது. விரிவுரை முறையில் கற்பிக்கும்ஆசிரியர் கிறிஸ்ணாவின் வகுப்பில் மாணவர்கள் எப்போதும் அமைதியாக இருப்பர். எவ்வாறு இருப்பினும் செந்திலின் வகுப்பு மாணவத்ாகள் எல்லா விதத்திலும் திறமையானவர்கள்.

1. இவ்விரு ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பத்தல் செயலொழுங்கு தொடர்பாகப் பயன்படத்தும் முறையி யல்கள் இரண்டினைத் தருக.
2. மேற்படி இரு முறையியல்களின் சிறப்பியல்புகள் மூன்றினைத் தனியாகத் தருக.
3. உம்மை சிவபூதவராயர் அசிரியராக நினைத்து உமது வகுப்பிற்கேற்ற குழுச்செயற்பாட்டு கவின்பாட்டு கவின்நிலையுடன் கூடிய கற்றல் செயற்றொடர் ஒன்றைத் திட்டமிடுக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வகுப்பறைக் கவின்நிலை முகாமையானது பாடசாலைக் கவின்நிலை தொடர்பான சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது. பாடசாலையின் முகாமைத்துவத் தலைவரான அதிபரின் தலைமைத்துவம், பிரதி அதிபரிகள், பகுதித் தலைவர்கள், அசிரியர்கள், ஊழியர்களின் நியமம்சார் கட்டமைப்புக் கவின்நிலை என்பன பாடசாலையின் கவின் நிலையைத் தீர்மானிக்கின்றன. ஒரு வெற்றிகரமான பாடசாலைக்கு ஆதாரங்களாகவும் இவை உள்ளன. கிழே தரப்பட்டுள்ள இடைத்தொடர்புக் கோலத்தைக் கவனிக்க.

1. இப் பாடசாலையின் நியமம்சாரா கவின்நிலை ஒழுங்கமைப்புக்கள் **3** தருக.
2. நீர் குறிப்பிட்ட நியாயம் சாராகவின்நிலை ஒழுங் கமைப்புக்கள் உருவாவதற்குவாக அமைந்த காரணிகள் தருக?
3. ஆசிரியர் என்ற வகையில் கற்பித்தல் அனுபவங்களினூடகப் பாடசாலை நடவடிக்கை களில் இந்நியமம் சாராக் கவின்நிலை ஒழுங்கமைப்புக்களினால் ஏற்படும் சாதக - பாதக விளைவுகளை உதாரணங்களுடன் விமர்சிக்குக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகள்:**

1. ஆசிரியர் சமூகம், மாணவர் சமூகம், ஆசிரியர் - மாணவர் சமூகம்
2. நியாயம் சார் கவின்நிலை ஒழுங்கமைப்பின் சிவப்பு நாடா முறையிலான இறுக்கமான பொருத்தமற்ற கட்டப் பாடுகள், தனிநபர் தேவைகள் நிறைவேற்றப்படாமை, நாள்தோறும் சந்தித்தல் உணர்வு, நட்புறவு - அன்னி யோன்னிய உதவி தொடர்புகள்.
3. குறிப்புகள்
   1. சாதகமானவை பாடசாலை ஆளணியினருடன் சுமூகமான இடைத்தொடர்பாடல் வேலைத்திறன் அளித்தல், செயற்திட்டங்களை ஒற்றுமையுடன் செயற்படுத்தி நிறைவேற்றல். ரீதியான விமர்சன நோக்கினூடு பிரச்சினை தீர்வுகள், தனியாள் சுதந்திர மாகக் கருத்துக் கூறல்.
   2. பாதகமானவை - பாடசாலை பொது நோக்கை அடைவதில் தடைகள், முறைசாரா அமைப்பு முரண்பாடுகள் அதிகரிப்பு, புதிய பிரச்சினைகள் தோன்றல், றைசார் தலைமைத்துவத்திற்கு சவால் நிறுவன நோக்கை அடைவதில் தடைகள்.

**வகுப்பறைச் சீராக்கப் பிரச்சினைகள்**

பாடசாலையின் ஒழுங்கு முறைகள், சட்டதிட்டங்கள், கொள்கை வகுப்பறைச் சீராக்க வழிநடாத்த உதவுகின்றன. ஆரம்ப காலங்களில் வகுப்பறைச் சீராக்கங்களில் ஆசிரியரின் செல்வாக்கு மிக உயர்ந்திருந்தது. ஆசிரியர் ஓர் ஒழுக்க சீலராகக் கருதப்பட்டு வந்தார். அவர் மாணவரிடையே ஒழுக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பது வகுப்பறைக்குள் மட்டு மன்றி வெளியிலும் நிகழ்ந்தது. இத்தகைய நோக்கங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப் பல வகையான அணுகுமுறைகளும் பின்பற்றப் பட்டன. தண்டனை முறைகளும பின்பற்றப்பட்டன. ஒரு வகுப்பாசிரியர் எதிர் நோக்கும் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வொன்றில் (கொழும்பு மாவட்டம்) கல்வியாளர் சில்வா அவர்கள் பாடசாலையில் அடிக்கடி நிகழும் பிரச்சனை களை இனம் கண்டார். அவையாவன:

- வகுப்பறையிற் பார்த்து எழுதுதல்
- வகுப்பறையிற் கதைத்தல்
- அமைதியீனம், மூர்க்கத்தனம்
- எதிர்த்துப் பேசுதல், மரியாதையற்ற பேச்சு
- வரவு ஒழுங்கீனம், கவனமின்மை
- பிடிவாதகுணம், சண்டையிடுதல்
- அனுமதியின்றி வகுப்பறையை விட்டு வெளியேறல்

இவையாவும் முக்கிய பிரச்சினைகள் என்ற வகையிற் பட்டியல் செய்யப்பட்டிருந்தாலும் உண்மையில் அவை ஒழுக்காற்றுப் பிரச்சினையாக உள்ளனவா? அல்லது தவறான நடத்தைகளின் சீராக்கத்திலிருந்து எழுகின்றனவா என ஆராயவேண்டியுள்ளது. தவறான நடத்தை என்ற சொல் அறிவாற்றல் மற்றும் எழுச்சி சார்பான துறைகளில் வகுப்பறைச் செயற்பாடுகளுக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனங்களி லிருந்து விலகிச் செல்வதைக் குறிக்கவும் பயன்படுகிறது. இத்தவறான நடத்தைகளினால் வகுப்பறைக் கவின்நிலை முகாமைத்துவம் சீர்குலைகின்றது. இதைத் தடுக்க ஆசிரியர் பல்வேறு உத்திகளை கையாளக்கூடிய ஆற்றல் உள்ளவராக இருக்கவேண்டும். பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தண்டனை வழங்கல் முறைமையினால் மாணவர் பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது மனித உரிமைகளும் மீறப்படுவதான விமர்சனங் களும் இன்று எழுந்துள்ளன. மேலும், ஆசிரியர்கள் தண்டனைகள் வழங்கும் போது கீழே தரப்படும் பிரச்சினை களும் எழுகின்றன.

1. தண்டனையானது தற்காலிகமாக மாத்திரமே தவறான நடத்தைகளைத் தடுக்கின்றது அவற்றை முற்றாக நீக்கிவிடுவதில்லை. அதாவது தண்டனை துர்நடத்தையைக் கட்டுப்படுத்தும் ஓர் இடைக்கால நடவடிக்கையே அது பிரச்சினைக்கான தீர்வாக இருக்க முடியாது.
2. தண்டனை கொடுத்தல் மாணவர்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கும். அவர்களது உடல் - உளத்திற்கும் நீண்ட காலப் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். ஆசிரியர்களே பழிவாங்கப்படலாம்.
3. தண்டனையின் விளைவுகள்எதிர்வுகூற முடியாதவை.
4. தண்டனை வழங்குபவரையும், தண்டனை வழங்கும் சந்தர்ப்பங்களையும் தவிர்த்துக் கொள்ள மாணவர்கள் கற்றுக் கொள்கின்றார்கள்.

வகுப்பறையில் தோன்றும் தவறான நடத்தைகளை நீக்க ஸ்கின்னருடைய நடத்தைவாத உளவியற் கோட்பாடு உதவுகின்றது. தேவையான நடத்தைகளை மீள வலியுறுத்தி யும், தேவையற்ற நடத்தைகளைக் கவனிக்காமல் விடுதல் மாணவர்களின் சுய சீராக்கத்திற்கும், நடத்தைப் பிரச்சினை களை வெற்றி கொள்வதற்கும் உதவும். மேலும், மாணவர் களின் வகுப்பறை, நல்ல நடத்தைகளை முன்னேற்ற புகழ்ச்சி யும் - வெகுமதியும் மிக முக்கிய மீள வலியுறுத்தி களாக வுள்ளன. புகழ்வதற்குரிய சந்தர்ப்பங்களாக மாணவர் முன்னிலையில் பொதுவாகப் புகப்தல், தனிப்பட்ட முறையில் கூறுதல், பெற்றோரும் ஏனைய ஆசிரியரும் பார்க்கத்தக்க வாறு புகழ்தல் என்பன உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் வரலாற்று ரீதியான வகுப்பறை முகாமைத்துவப் போக்குகள் தொடர்பான விபரங்களும், எதிர்காலவியல் (Futurology) தொடர்பான வகுப்பறை முகாமைத்துவ சவால்களை ஆசிரியர் இனம்காணக் கூடியவ ராக இருக்கவேண்டும். இங்கு எதிர்காலவியல் என்பது இன்றைய செயற்பாடுகளின் நாளைய விளைவுகளைக் கணித்துரைப்பதாகவுள்ளது. மற்றும் நாளைய எதிர்பார்ப்பிற் கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிடுவதாகவும் உள்ளது. எவ்விதமான வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான நாளைய தேவைகள் எவை என்பதையும், இன்றைய பொறுப் பற்ற செயற்பாடுகள் எதிர்கால மாணவர் வாழ்வை எவ்வாறு பாதிக்கும் என்பதைத் தெரிந்து செயலாற்ற வேண்டியதும் ஆசிரியரது மிகப் பெரிய பொறுப்பாகவுள்ளது. ஆக்கத்திற னுடைய ஆசிரியர் எதிர்காலவியல் நோக்கில் தனது வகுப் பறையை முகாமை செய்யத் தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். ஆக்கத்திறனுடைய ஆசிரியர் வகுப்பறை முகாமைத்துவ திறமைமூலம் மாணவரின் உயிர்ப்பான உடலையும், உள்ளத்தையும் தூண்டி அறைகூவல்களுக்கு மாணவர்களின் ஆற்றலை விவேகமான வகையில் வழிப்படுத்தலாம். தனது பொறுப்பு - பணிப்புகள் - ஆற்றுகைகள், அதற்கான முகாமைத்துவ நுட்பமுறைகள் மற்றும் உத்திகளைத் தெரிவு செய்வதற்கும், திட்டமிடு வதற்கும், காலத்தையும் - உழைப்பையும் பயன்படுத்துவார். கற்றல் தொடர்பாக மாணவர்களின் உயிர்ப்பான வழிகோலு கின்ற மாணவர் மையக் கற்றற் செயன்முறைகளைப் பயன் படுத்துவார். ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்களின் வெவ் வேறு ஆற்றல்களுக்கும், ஆர்வத்திற்கும் இடமளிக்கும் வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட கற்றற் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பார். இவை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆக்கத்திறனையும் - கண்டுபிடிக்கும் ஆற்றலையும் கற்கக் கற்றல் தோச்சிகளையும் வழங்கும்.
- உடன்பாடான மனப்பாங்குகள், பெறுமானங்கள், ஆளிடைத் தொடர்புகள், நடத்தை மாற்றங்கள், முழுமை யான ஆளுமை வளர்ச்சிக்கு வழிகோலும் கவர்ச்சிகர மானவையாகவும்நடைமுறைப்படுத்தப்பக்கூடியவையாக வும் இருக்கும்.
- மாணவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியவையாக இருக்கும்.
- அறிவு, ஆரோக்கியமான வாழ்க்கை முறை, பொறுப்பு வாய்ந்த நடத்தை, ஆகியவற்றை வளர்க்கத்தக்க வகையில் உயிர்ப்புடன் செயற்பட்டுக் கற்கவகை செய்யும்.

மாணவர் மைய எண்ணக்கருக்கள், ஒத்துழைத்துக் கற்றல், கதைகள், பாடல், குறுக்கெழுத்தப் புதிர்கள், விளை யாட்டுக்கள், பங்கேற்று நடித்தல் என்பவற்றின் மூலமும், வாழ்க்கைத்திறன் நுட்பமுறைகளான - சுய அபிமானத்தை மேம்படுத்தல், பொறுப்புடன் தீர்மானம் எடுத்தல், மறுதலிக் கும் ஆற்றல், கற்பித்தல் ஊக்கங்களின் தரஉள்ளீடுகளின் பயன்பாடு என்பவற்றினூடாக ஆசிரியர் மகிழ்ச்சிகரமான கற்றல் முகாமைச் சூழலை ஆக்கிக் கொள்ள லாம்.

**வகுப்பறை முகாமையிற் கூட்டாகக் கற்றல்**

நவீன - எதிர்கால கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிற் கூட்டுணர்வு, குழுவுணர்வு அதனூடாக கற்றலே மிக உயர்ந்த பயனுடையதாக இருக்கும். இங்கு மாணவர் ஒருவருக் கொருவர் உதவிபுரிந்து சமூகத்திறன்களைப் பெறுவர் உடன்பாடாகத் தங்கி வாழ்வர். கூட்டாகக் கற்றலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயப்பாடகளே அதிகமாக இருக்கும. ஆசிரியர் தம் மாணவர் களுக்கு பல்வேறு பணிகளை ஒப்படைப்பதன் மூலமும் ஒவ்வொரு மாணவரதும் கற்றல் தொடர்பான பொறுப்பை முழுக்குழுவிடமும் ஒப்படைப்பதன்மூலமும், ஒரு தனிப் பெறுபேற்றை எதிர்பார்ப்பதன்மூலமும் ஒற்றுமையை உயர்வாக்கி கற்றலில் உயர்வினைத்திறனாக ஆக்குவார். இங்கு ஊக்கல் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வழங்கப்படும்.

சமவயதுக் குழுவினரூடாகக் கற்றல் அதாவது கற்றல் சோடி என்ற வகையில் இரு மாணவர் சேர்ந்து கற்றல். உதாரணமாக இருவர் சேர்ந்து வாசித்த தலைப்புப் பற்றி பரஸ்பரம் வினவி - விடை அளிப்பார் இம்முறையினூடாக மாணவர்க்குத் தமது சமவயதுடைய ஒருவருடன் சௌகரிய மான ஒரு சூழலில் பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் குழுவுக்குள் ஒத்தாசை வழங்குவதனூடாக அறிந்தவற்றைத் தொடங்கி; அறியாதன பற்றிய அறிவை வளர்த்துக்கொள்வர்.

முறையாக ஒரு கதையின் சம்பவங்களை, பிரச்சினை களைக் குழுவாக ஆராய்தல், இதனூடாகப் பிரச்சினை களுக்கான தீர்வுகள், முடிவுகள், பகுப்பாய்வுக்காக ஆர்வ மூட்டல், தீர்வுகள் பொதுமையாக்கங்கள் என்பவற்றைப் பரீட்சித்தல் என்பவற்றின் செயற்படுமுறையிலான விவகார ஆய்வு (Case Study) இன்று இடைநிலை மாணவர்களுக்கான கற்றல்- கற்பித்தல் முறையாகவுள்ளது.

ஆசிரியரது விதிக்கப்பட்ட வாழ்க்கையை அல்லது அமைந்த உரிய வாழ்க்கையைச் சம்பவம், அல்லது தீர்வுக் கதைகள் சார்ந்த விடயங்களை மாணவர்களின் வயதிற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானவாறு தெரிவு செய்துகொள்ள வேண்டும். கதை - சம்பவம் தொடர்பாக பல்வேறு செயற்பாடுகளைப் பொருளுள்ளதாக அமைத்துக் கொள்ள வேண்டும். விடயத்தினூடாக தம் கருத்துக்களை மதிப்பிடு வதற்கும், உணர்வுகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கும், மாணவரைத் தூண்டலாம்.

- பிரச்சினை யாது?
- பிரச்சினை ஏற்படவதற்கான காரணங்கள் யாது?
- பிரச்சினை உண்டு என்பதை உறுதிப்படுத்தம் அல்லது இல்லை என மறுதலிக்கும் சான்றுகள் எவை?
- ஆய்வினூடாக எவ்வாறான முடிவுகளை பிரேரணை களைப் பெறலாம்?

இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்களைக் குழுவாக ஈடுபடுத்திப் புதிய கதையுருவாக்கங்களை ஏற்படுத்தி பிரச்சினை தீர்க்கும் முறைமையை உருவாக்கலாம், இத னூடாக மாணவர்களது தன்னடிமானம் உயர்வடையும். தமது செயல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் குணத்தைப் பெறுவா. "நான் நல்லபடி இருக்றேன், நான் என்னை விரும்பு கின்றேன், நான் ஆக்கத்திறனுடையவன், எனக்கு ஏனை யோருடன் இணைந்து கற்றுக் கொள்ள முடியும்' என்ற உணர்வுகளை மாணவர்களுக்கு வழங்கலாம். இதற்கு ஆசிரிய வகுப்பு முறை முகாமைத்மிறனுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடகளைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங் களைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

மாணவரது பண்புகள், பாடத்தின் விடய உள்ளடக் கம், பாடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம், பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசமுள்ள வசதிகள், கற்பித்தற் சாதனங்கள், மாணவரைக் கவரத்தக்க நுட்பமுறைகள், குறிக்கோளுடனும் கணிப்புக் களுடனும், தொடர்புடைய நுட்பங்கள், வளர்க்கப்பட வேண்டிய அறிவு, திறன்கள், மனப்பாங்கு என்பவற்றிற் கவனம் செலுத்தவேண்டும். மேலும், நவீன குழுமுறையான கூட்டாகக் கற்றற செயற்பாட்டு பிரயோகங்களில கற்றல இடர்பாடள்ள - மனவெழுச்சிப் பிரச்சினையுள்ள விசேட கல்வித் தேவைகளை இனம் கண்டு அவர்களைக் கற்றற் செயற்பாடுகளிற் குழுவாக ஈடுபட வைக்க ஆசிரியர் ஈடுபட வேண்டும். குழுக்களுடன் ஆசிரியரும் கூட்டாக இணைந்து செயற்படல் மிகமுக்கியம். இது மானிடக் கற்பித்தல் (Human TEACHING) முறையியலுக்கு அடிப்படையாகின்றது.

**மானிடக் கற்பித்தல் முறையும் முகாமைத்துவமும்**

இன்றைய பாடசாலைகளில் நவீன மானுடவியற் கற்பித்தல் முறைகளே வேண்டப்படுகின்றன. தனிநபர் அபிவிருத்தியாளர் என்ற வகையில் ஆசிரியர் வெகுசனத் தொடர்பு நிலைப்பாடு - விமர்சனப்பாங்கு ஆகிய தனிநபர் திறன்களை விருத்தியாகக் கூட்டாகக் கற்றல் நுட்பங்கள் உதவுகின்றன. இதன்மூலம் ஆசிரியர் பிள்ளைகளிடம் தம்மைப்பற்றிய நன்மதிப்பைக் கட்டியெழுப்பவும், பல்வேறு வகுப்பறை முயற்சிகளின் வாயிலாக அவர்களது சமூகத்திறன் களை விருத்திசெய்து கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றார்.

**இதன் அம்சங்களாக:**

1. கற்றலுக்கு உதவுபவர்:-ஆசிரியர்கலைத்திட்டம், மனப் பாங்குகள், சிறப்பித்தல் என்பவற்றைக் கற்பித்தலுக்குப் பதில் அவற்றைப் பிள்ளைகளில் இருந்து தோற்றுவித்துக் கொள்ளப் பல்வேறு கூட்டாகக் கற்றலில் மானுடவாத நுட்பங்களைப் பயன்படுத்துவார். ஜனநாயகவாதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களை ஆசிரியர்களால் எடுக்கப்படின் அது சர்வாதிகார - மானுடவாதமல்லாத முகாமைத்துவப் பண்பாகும். சுதந்திரமான கருத்துக்களை பிள்ளைகள் வெளிப்படுத்தவும், அதிகமானோர் விருப்பத்திற்கமைய முடிவுகளை மேற்கொள்ளவும் இடமளிக்கப்படும். அவர் ஒரு விடயம் தொடர்பாக உரையாடும்போது பல்வேறு கோணங்களில் அதனை நோக்க, பிள்ளைகளை ஊக்குவிப்பார். அவர்களது கருத்துக்களையும், பதில் அபிப்பிராயங்களையும் ஆசிரியர் மதிப்பார்.

2. மாணவர்களது கற்றல் திறன்களை நம்பிக்கையோடு நோக்குபவர்:- மாணவர்களை அவதானித்து, உற்று நோக்கிப் பரிசோதித்து மாணவர் கற்க விருப்பமுடையவர் என்பதை ஆசிரியர் நம்பவேண்டும். மாணவர்கள் வெற்றுப் பாத்திரங்கள் அல்லர். பொருத்தமான ஆர்வத்தை உருவாக்கினால் அவர்கள் சுயமாகவே தூண்டப்பட்டுக் கற்பர். ஆசிரியர் செய்ய வேண்டிய ஆர்வத்தைத் துண்டடல், அதன்வழி கற்றலுக்கு வழி காட்டடல், மாணவர்கள் கற்றவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ள உதவுதல் என்பதாக இருக்கும்.

3. உலகளாவிய ரீதியில் மானிடப் பிரச்சினைகளை நேலாக்குபவர்:- இன்றைய கலைத்திட்ட நோக்கம். 'உலக மனிதனை உருவாக்குதல்' இவ்வுலகில் உலகளாவிய ரீதியான மனிதத்தன்மைகள், ஒன்றே குலம், மனித உரிமைகள், உயர்வு தாழ்வு வேறுபாடு அற்ற நிலை, புரிந்துணர்வு, சமாதானம், ஒற்றுமை என்ற எண்ணக் கருக்கள் மூலம் உலகமே ஒரு குடும்பம் என்ற நோக்கில் எமது இனம் நம்பிக்கை, கலாசாரம் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பதுடன் அவற்றைத் தாண்டி உலகளாவிய ரீதியில் ஏனையவர்களின் கலாசாரங்களையும் பண்பாடுகளையும் உயர்வாக மதிக்கும் மனப்பாங்குகளைக் கொண்ட கற்றற் செயற்பாடுகளை ஆசிரியர் வகுப்பறையில் ஒழுங் கமைக்க வேண்டும். உலகளாவிய தொடர்பைத் தான் கற்பிக்கும் பாடத்தின் வாயிலாக வெளிப்படுத்திக் காண்பிக்கும் திறனும் ஆளுமையும் ஆசிரியருக்கு அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாண்மையுள்ள ஆசிரிய ஆளுமை

ஒரு வாண்மையுள்ள நல்லாசிரியர் ஆளுமையுடையவராக இருப்பார். ஆசிரியர் மாணவர்ளின் ஆளுமையை அளவிட முயற்சி செய்வது போன்று மாணவர்களும் ஏனைய ஆசிரியர் -அதிபர் -சமூகமும் ஆசிரியரின் ஆளுமையைப் பற்றிச் சிந்திக்கின்றது. மேலும் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியில் ஆசிரியரின் ஆளுமை பல்வேறு விதத்தில் செல்வாக்குப் பெறுகின்றது. ஆசிரியர் என்ற முறையில் ஆசிரியர்கள் தங்கள் ஆளுமைக் குறைபாடுகளை நிக்கி, ஆற்றல்களை வளர்த்தல் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவும்.

ஆளுமை என்பது ஒவ்வொருவருக்கும்உரிய தனித் தன்மைகளை, ஆற்றல்களைக் குறிக்கின்றது. ஆளுமையின் வளர்ச்சி குடும்பம் - பாடசாலை - சமூகச்சூழ்நிலை - அசிரியர் ஆகிய பரிமாண நிலையில் வளர்கின்றது. பிறரிடம் அன்பு காட்டுதல், பிறருக்காகத் தனது உரிமைகளை விட்டுக் கொடுத்தல். எதிர்காலத்தில் தான் அடைய விளைவிக்கும் இலட்சியங்களில் உறுதி என்பன மனித ஆளுமையின் பாற்பட்டது. ஆசிரியர் மாணவர்களுக்கு வழங்கும் கல்வியின் நோக்கம் மேற்கூறிய மனிதத் தன்மைகளைப் பெற்று ஆளுமையை வளர்ச்சியடையச் செய்யவே ஆகும்.

ஆசிரியர் வழங்கும் கல்வியின் பயனாக எழும் ஆளுமை சமநிலைப்பட்டதாயும், இசைந்த வளர்ச்சிக்கு வழிகாட்டுவதாகவும், உடல், அறிவு, திறன்கள், அழகு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி, நல்லொழுக்கம், சமூகவியல்பு ஆகியன இணைந்து வளர்ச்சிபெற வாய்ப்பளிப்பதாகும். ஒருவரது நடத்தைகளின் முழுமையான அமைப்பானது முழுமையாகப் பரிண மிக்கின்றது. பிரிட்ஸ் என்ற அறிஞர் "ஆளுமை என்பது ஒருவரின் உயிரியல் ரீதியானன மனப்பான்மை, மனவிருப்பு, போக்கு, ஆற்றல், தொடர்பாடல் திறன் சவால்களை வெற்றிகொள்ளல் என்பனவும் அவரால் அபிவிருத்திசெய்து கொள்ளும் மனப்பான்மைப் போக்குகளின் பொதுவான கூட்டு ஆகும். இது அபிவிருத்தி அடையும் தன்மை கொண்டது" என்றார். எனவே, ஆசிரியர்கள் தமது ஆளு மையை அபிவிருத்தி செய்து மாணவர்களிக் ஆளுமையையும், கல்வியையும் விருத்தி செய்யலாம். எனவே வாண்மையுள்ள ஆசிரியருக்கு ஆளுமைபற்றிய நிபுணத்துவ அறிவு மிக முக்கியமாகும்.

**ஆளுமை பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்**

**ஒல்போர்ட்:-** சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் உண்டாகும் தனிச்சிறப்புடன் கூடிய சீராக்கம் ஆளுமை யாகும். இது ஒருவரிடையே இருக்கும் உளவியல் பிரயோக முறைகளின் செறிவான ஒழுங்கமைப்பாகும்.

**சிறில்பேர்ட்:-** பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஒருவர் துலங்கும் போது வெளிப்படுத்தும் உடல் - உள செயற்பாடு களின் ஒழுங்கமைப்பு ஆளுமையாகும்.

N.L **மன்:-** தனிப்பட்டவரிடம் காணப்படும் அமைப்புக் களினதும் நடத்தைக் கோட்பாடுகளினதும் விருப்பு, மனப் பாங்கு, ஆற்றல்கள், திறன்கள், உளச்சார்புகள் என்பவற்றின் மிகச் சக்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆர்னஸ்ட்:-** சூழலுக்கான ஒரு தனிப்பட்டவரின் சீராக்கத்தை அல்லது பொருத்தப்பாட்டைத் தீர்மானிக்கும் நடத்தைப் போக்குகளினதும், சிந்தனைப் போக்குகளினதும் சிந்தனை முறைகளினதும் இணைப்பே ஆளுமையாகும்.

**தமிழ் மரபில் ஆளுமைப் பேராசிரியர் சபா. ஜெயராசா**

தமிழ் மரபில் மெய்ப்பாடுகளில் அல்லது மன வெளிச்சிகளின் அடிப்படையாகக் கொண்டு ஆளுமைக் கோலங்களை வகைப்படுத்தும் பண்பு நெடுங்காலமாக வேரூன்றி இருந்தது. பண்டைய சித்தமருத்துவ வியலாளர்கள்: குளிர் உடம்பினர், சூட்டு உடம்பினர், சளி உடம்பினர் என்ற வாறு உடம்புடன் தொடர்புபடுத்தி ஆளுமைக் கோலங்களை தொன்மையான மருத்துவக் கண்ணோட்டத்தில் விளக்கினார். தமிழ்க்காலக் கணிதர்கள் ஒருவர் பிறக்கும்போதுள்ள கிரக நிலையை அடியொற்றி அவரின் ஆளுமையை விளக்கினர் எனத்தெரிவிக்கின்றார்.

இவ்வகையில் ஒருவருடைய நடத்தைகளின் முழுமை யான அமைப்பே ஆளுமையாகும். அவர் பிறரிற் கொண்ட செல்வாக்கு அவருடைய ஆளுமைப் பரிமாணங்களைப் பொறுத்ததாகும். சூழலுடன் -சமூகத்துடன் பொருத்தப்பாடு பெறுவதைத் தீர்மானிக்கும் ஒருவருடைய உள்ளார்ந்த அமைப்பாக ஆளுமை உள்ளது. ஒருவருடைய பண்புக்கூறுகள், விருப்புக்கள், வெளித்துலங்கும் நடத்தைகள், சிந்தனைக் கோலங்கள், மனவெழுச்சி வெளிப்பாடுகள் முதலியவை ஆளுமையின் கூறுகளாகவுள்ளன. தவறான பொருத்தப்பாடு, இசைவான பொருத்தப்பாடு முதலியவற்றை விளங்கிக் கொள்வதும், உள நெருக்குவாரங்களை எவ்வாறு நேர்மக மாகக் கையாள்வது என்பதைத்தெரிந்து கொள்வதும், தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பெறவும், பிறருக்குத் தீங்கு தராது வாழ்வதும் ஆளுமையின் பரிமாணங்களாகவுள்ளன.

நவீன உளவியலாளர் செல்டன்' உடற்கட்டுமான இயக்க அடிப்படையில் மனிதர்களுடைய ஆளுமைப் பண்புகளைப் பின்வருமாறு பாகுபடுத்தினார்.

1. ஓய்வாகவும் - அமைதியாகவும் - சாந்தமாகவும் இருப்பார்.
2. துடிதுடிப்பாகவும், சாதனையாளராகவும், போட்டியிடுவோராகவும் இருப்போர்.
3. தனிமை விரும்புவோராயும், தன்மயமான சிந்தனை உள்ளோராயும் இருப்போர்.

மாணவர்கள் ஒரு ஆசிரியரைப் பின்பற்றுவதற்கு அவர் பொருத்தமான முதிர்ச்சிபெற்ற ஆளுமையுடையவராக இருக்கவேண்டும். ஆனால் சாதாரண மனிதர்களிடையே காணப்படும் ஆளமைக்குச் சமமான பெரும்பாலான அசிரியர்களிடம் காணப்படுவதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பக்கச்சார்பின்றி நடுநிலையாகத் தொழிற்படும் திறமையும், மனவெழுச்சியும் முதிர்ச்சியும் ஆசிரியர்களிடையே இருக்கவேண்டிய மாணவர்கள் மதிக்கும் இரு முக்கிய பண்புகளாகும். ஆசிரியரின் சமூகமயமற்ற பண்புகளில்லாத நிலை: மாணவர்களின் ஆளுமை மீது விரும்பத்தகாத செல்வாக்கினை ஏற்படுத்தும். ஆசிரியர் தமது ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்து மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டும்.

ஆசிரியர் கூற்றுக்கள்.

1. சட்டதிட்டங்களையும் கொள்கைகளையும் வகுக்க இந்தப் பிள்ளைகளுக்கு உரிமையில்லை. அது எனக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. "இதனை எவ்வாறு செய்ய வேண்டும்" என்பதனை நாம் எல்லோரும் சேர்ந்து தீர்மானிப்போம்.

ஆசிரியர் வகுப்பறையில், தான் வகிக்கும் ஆளுமைப் பாத்திரங்களுக்கு ஏற்பவே வகுப்பறைச் செயற்பாடுகளை வினைத்திறனுடையதாக்கலாம். சர்வாதிகார தடையில்லாத சூழ்நிலைகளைத் தவிர்த்து ஜனநாயக சூழ்நிலையில் மாணவர்களிடையே தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் உருவாக்கி நட்புறவுடன் ஆசிரியர் தனது ஆளுமையை வகுப்பறையில் வெளிப்படுத்தி வெற்றி காணலாம்.

ஒருவர் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மற்றவர்களைப்பற்றிக் கனியாது செயற்படுவது தன்னாதிக்க நடத்தையாகும். இதனைத் தவிர்த்துத் தனதும் மற்றவர்களி னதும் மகிழ்ச்சிக்குரிய வகையில் நோக்கங்களைப் பூர்த்தி செய்துகொள்வது ஒருமைப்பாட்டு ஆளுமை நடத்தையாகும். ஆசிரியரின் ஒருமைப்பாட்டு நடத்தையினால் மாணவர் களிடையேயும் ஒருமைப்பாட்டு ஆளுமை நடத்தைகள் ஏற்படும். ஆசிரியரின் தன்னாதிக்க ஆளுமை நடத்தைகள் மாணவரி டத்தே தன்னா;கக தீய பிரதிபலிப்புக்களை ஏறபடுத்தும்.

**ஆளுமை உருவாக்கத்திற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

குடும்பம் - வீடு - அயற்சூழல் - முன்பள்ளி ஆகியவை அடங்கும் வாழ்வில் முதல் ஐந்து வருடங்களே பிள்ளைகளின் ஆளுமை உருவாக்கத்திற்கு அடிப்படையான காலம், ஆகும். குழந்தையைப் பராமரித்து வளர்க்கும் முறைகள், அதன் தேவைகளை நிறைவேற்றுதல், அதற்கு வழங்கு அன்பு, காப்ப, கணிப்பு, தாய் தந்தை இருவரினதும் தொடர்புகள், வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகும் மனஎழுச்சி சூழ்நிலைகள், கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகள், பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியின் பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றன.

தொடர்ந்து அயலவர்கள், சமவயதுக் குழுவினர், மிகமுக்கியமாக ஆரம்பக்கல்வி கற்கும் பாடசாலை, தொலைத்தொடர்பு சாதனங்கள், பொது அமைப்புக்கள், கோயில்கள் என்பவை மாணவர்களின் மனிதர்களின் ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துபவையாக உள்ளன. மேலும் ஒருவருடைய பரம்பரை இயல்புகள், உடல் உள நிலை, சரீரத் தன்மைகள், இயல்புகள் என்பவையும் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கிரேக்க தத்துவஞானி ஹிப்போகிரடிஸ் (கி.மு- **460-377**) பின்வருமாறு மனித ஆளுமையை இயம்புகின்றார்.

1. இளகியமனம் - அதிக இரத்தமுள்ள இவர்கள் சுறுசுறுப்புள்ள புத்துணர்வாளர், திறந்த மனதுள்ள வர்கள்.
2. கடுமுணர்ச்சி - சுறுசுறுப்புள்ள சினங்கொள்ளும் தன்மையுடையோர், ஆர்வமற்ற, அமைதியான பண்புகள்.
3. சோம்பலுணர்வு - சுறுசுறுப்பற்ற ஆர்வமற்ற அமைதியான பண்புகள், தோய்ந்த, பதகளிப்பான இயல்புள்ளோர்.
4. உளச்சோர்வு - சோகம் நிறைந்த, கவலை தோய்ந்த, பதகளிப்பான இயல்புள்ளோர்.

மேலும், ஷெல்டன்(1940) என்பவர், மனிதர்களுடைய சரீர வகைகளை அடிப்படையாக வைத்து பருத்த வட்ட சரீரமுடையோர் சாப்பாட்டில் விருப்பு, உடற் சுகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் பார்ப்பவர்களாகவும், இளகியமனமுள்ள சமநிலைத் தன்மை களை இயம்புவர் என்றும் சக்தி வாய்ந்த தசைநார்கள் கொண்ட அகன்ற தோள்கள் சிறிய தோள்கள் சிறிய எடையை உடையவர்கள், செயலூக்கமள்ளவர்களாகவும் நேர்த்தன்மை உள்ளவர்களாகவும் இருப்பர். மெல்லிய உடல் மென்மையான தோல் உடையோர் உணர்ச்சி பூர்வமானவர், குழுவுணர்ச்சி யற்ற உணர்ச்சிவசப்படும் சோகமானவர்கள் எனத்தெரிவிக் கின்றார்.

இவ்வாறான ஆளுமை இயல்புகளை ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மாற்றங்களுக்கும், வளர்ச்சிகளுக்கும் உள்ளாக்கி இருக்கின்றன. மேலும் மனிதர் களுடைய குணப்பண்புகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஆளுமையிலும் தாக்கங்களை விளைவிக்கின்றன.

| **நடத்தைகள்** | **நிலைமைகள்** |
| --- | --- |
| மாணவர்களின் மாறுபாடான நடத்தைகள் | பெற்றோர்களினாற் புறக்கணிக்கப்படுதல் |
| ♦ தாக்கும் எண்ணம்<br>♦ கொடுமை<br>♦ கட்டளைக்குப் பணியாமை<br>♦ துன்பம் விளைவிப்பவர், குழப்பம் விளைவிப்பவர். | ♦ முறையற்றவிதத்தில் அல்லது அவசியமற்ற முறையில் கருத்தரித்தல்<br>♦ தாய் பிள்ளையின் மீது விரோதம் கொள்ளல்<br>♦ தாய் பாலியல் ரீதியான நடத்தையில் நன்னடத்தை இல்லாதிருத்தல் தாய்க்கும் தகப்பனுக்கும் இடையில் நல்ல தொடர்பு இல்லாதிருத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாணவர்களின் நெறிபிறழ்ந்த நடத்தைகள் | பெற்றோர்களின் கவனிப்பின்மை |
|---|---|
| ♦ கெட்டவர்களுடன் உறவாடல் | ♦ அசுத்தமான வீடு, பெற்றோர் குடிப்பழக்கம் |
| ♦ குழுரீதியில் மாறுபாடான செயல்கள் | ♦ கட்டுப்பாடு குறைதல் |
| ♦ களவெடுத்தல் | ♦ இலகுவான அல்லது எல்லை கடந்த ஒழுக்கக் கட்டுப்பாடு |
| ♦ பாடசாலையைப் புறக்கணித்தல் | ♦ தாயின் (உளரீதியான) மடமைத்தனம் |
| ♦ இரவாகும் வரை வீட்டிற்கு வராதிருத்தல். | |

| மாணவர்களின் விதிவிலக்கான நடத்தைகள் | குடும்பம் பற்றிய விரக்தி அல்லது உளச்சோர்வு |
|---|---|
| ♦ தனிமை நாட்டம் | ♦ தந்தை அதிகம் விமர்சனத்துக்கு ஆளாதல் |
| ♦ அதிக வெட்கம் | ♦ பெற்றோர்கள் சமுதாயப் பழக்கவழக்கமின்றி இருத்தல் |
| ♦ உளச்சோர்வு | ♦ தாயின் எதிர்பார்ப்புக்கள் அதிகமாதல் |
| ♦ பற்றுணர்வு உள்ளமை | ♦ பிள்ளைகளிடையே விரோத மனப்பான்மை இருத்தல் |
| ♦ எப்போதும் பணிவுள்ளமை | |

இவ்வாறாக மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை அல்லது அவற்றில் தாக்கங்களைக் குடும்பம் - வீட்டுச் சூழ்நிலை பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனைக் கணித்து ஆசிரியர் செயற்பட வேண்டியுள்ளது. மேலும் ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு பின்வரும் ஆளுமை வளர்ச்சிக்கான அடிப்படைகளை வழங்கவேண்டும்.

பிள்ளைகளுக்கு அளவுகடந்த சுதந்திரத்தை வழங்காது அன்பையும், பாதுகாப்பையும், உச்சஅளவில் வழங்கல் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையைத் தேவைக்கு அதிகமாகச் செல்லமாக வளர்த்தலோ அல்லது கவனிக்காமல் இருத்தலோ கூடாது. அவனுக்குரிய இடத்தை வழங்க வேண்டும். விளக்கமான ஆனால் சுதந்திரத்திற்குப் பாதகம் அல்லாத கட்டுப்பாட்டை வீட்டில் நடைமுறைப்படுத்தல். பிள்ளையின் வளர்ச்சியில் சுய ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள அவனுக்கு உதவியளித்தல் என்பவை மூலம் அவனது ஆளுமையை உயர்த்தலாம். மேலும், கற்றல் பயிற்சிகள், பின்பற்றல்கள், ஏனையவர்களின் கருத்துக்கள், அனுபவங்கள் என்பவைளும் ஆளுமை வளர்ச்சியிற் செல்வாக்குச் செலுத்துகின்றது. முதிர்ச்சி அடைந்த ஆளுமைப்பண்புகளாக: சுயவிரிவு, சுயமதிப்பீடு, தன்னம்பிக்கை, தன்னிசைவு, சிருஷ்டிப்பு, சுயஅபிவிருத்தி, சாதனைபுரிதல், என்பன உள்ளன.

1. சுயவிரிவு:- தனிப்பட்ட ஒருவர் முழுமையான வாழ்வை திருப்தியாக நடாத்திச் செல்ல. அவரது திறன்கள், நடத்தைகள் பல்வேறு திறன்கள்பட்ட துறைகளுக்கு விரிவடைவதையே இது இயம்புகின்றது. குறிப்பிட்டவர் சுயவிரிவு பெற்றுள்ள துறையில் தடைகள் ஏற்படும்போது ஸ்தம்பித நிலையை அடையாது வேறு துறைகளினூடு வெற்றிப்பாதையை அமைத்தலுக்கு இது வழியாக இருக்கும்.
2. சுயமதிப்பீடு:- ஒருவர் தன் குறை நிறைகளை சயமாக மதிப்பீடு செய்து பார்க்கவும் தன்னைப்பற்றித் தானே சிந்திப்பதற்கும் முடியுமானவராக இருக்க வேண்டும். அப்போது தான் ஒருவர் தன் குறைபாடுகளை ஒருவர் திருத்திக்கொள்ள முடியும். தன்னைப்பற்றிய சிறந்த யதார்த்த நிலையை எதிர்கொள்ளும் திறனே சுயமதிப்பீடு ஆகும். இதை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்ட வேண்டும். இவ்வழிகாட்டல் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் அவசியமாகும்.

3. தன்னம்பிக்கை:- தனது நல்ல கொள்கைகள், செயல்கள் என்பவற்றில் ஒருவருக்குத் தன்னம்பிக்கை இருக்க வேண்டும். அப்போதுதான் தடைகளை - சவால்களை எதிர்கொள்ளும் பலமான ஆளுமை உண்டாகும். ஒருவர் தன்னாற் சுமக்கமுடியாத மாத்திரத்திலிருந்து விலகி சுமக்கக் கூடிய பொறுப்புக்களை ஏற்கப் பின்வாங்காத நிலைக்கும் தன்னம்பிக்கை அவசியம். சுய கௌரவம் தமது பெறுமானம் பற்றிய நம்பிக்கைகள் ஆளுமை முதிர்ச்சிக் கான அடிப்படைகளாகின்றன.

4. தன்னிசைவு:- ஆளுமை முதிர்ச்சி பெற்ற ஒருவரின் செயற்பாடுகள் அவரது வாழ்க்கை முறைகளோடு அனுகூலமான முறையில் இணைந்துள்ளன. அதாவது அவரது வாழ்க்கைச் செயல்கள் பெறுமதி அடிப்படையில் பெறுமதி பொதிந்ததாக சமூகம் ஏறறுக்கொண்ட முறைகளைச் சார்கின்றது இதுவே தன்னிசைவாகும்.

5. சிருஷ்டிப்பு:- புதுமையான செயல் முறைகளையும், ஈடு இணையற்ற திட்டங்களையும், தனித்துவமான வழி காட்டல்களையும் ஏற்படுத்தக்கூடிய ஆளுமை வழிகள் உருவாகுதலை இது குறிக்கின்றது.

6. சாதனை புரிதல்:- திட்டமிட்ட எதிர்பார்ப்புக்களை அல்லது விருப்பப்பட்ட விளைவுகளை வெற்றிகரமான தொரு முடிவு நிலைக்கு கொண்டுவருவதனை இது குறிக்கின்றது. ஆசிரியர்களாலும் சரி மாணவர்களாலும் சரி, உங்களுக்கு முன்னாற் குறிக்கோள்களை வைத்திருப் பதுடன் அவற்றுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதை இவ் ஆளுமை வெளிப்பாடு இயம்புகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சுயஅபிவிருத்தி: - புதிய மாற்றம் தவிர்க்க முடியாத சவால் களை எதிர்கொள்வதற்கு ஏற்ற மனத்தோற்றப்பாடகள், மனப்பாங்குகள், ஆற்றல், திறமைகள், ஆளுமைகள் என்பவற்றை அடைவதில் ஆர்வம் காட்டுவதனை இது குறிக்கின்றது. நீங்கள் செய்ய வேண்டும். எனத் தீர்மானிக்கின்ற எந்தவொருவிடயத்தையும் செய்து முடிக்க இயலும் என்பதை நீங்கள் உணர்தல். அதற்குத் தேவைப்படுகின்ற ஆற்றலையும் - திறமையையும் நீங்களே கொண்டிருக்கின்றீர்கள் என்ற ஆளுமையாற்றலாக சுய அபிவிருத்தி பரிணமிக்கின்றது.

**ஆளுமை விருத்தி**

ஆளுமை அபிவிருத்தி அடையும் விதம்பற்றிய விளக்கமானது ஆசிரியர்களுக்கு மிக அவசியமாகும். இது தொடர்பாக ஸிக்மன் புரொய்ட்டின் உளப்பகுப்புக் கோட்பாடு, யூங்கின் முழுமையான ஆய்வுக் கோட்பாடு, அல்பிரட் அவர்களின் தனி உளவியல்கோட்பாடு, ஜாரலின் தனியார் அபிவிருத்திக் கொள்கை., கால்ரோஜர்சின் உளநிறைவுக் கோட்பாடு, எனப்பல உள்ளன. இவற்றில் சிலவற்றில் பிரயோகங்களை ஆசிரியர் அறிய வேண்டும்.

மனித நடத்தையின்மீது உணர்வற்ற உள்ளத்தின் முக்கியத்துவத்தையும், இயற்கையான வளர்ச்சியையும் இணைத்து ஆளுமை அபிவிருத்தி தொடர்பான சிக்மன் புரய்ட்டின் விளக்கங்கள் முக்கியம் பெறுகின்றன. மனித ஆளுமையை அபிவிருத்தி செய்யும் போது உணர்வு நிலையிலும் பார்க்க உணர்வற்ற நிலையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியவரும் இவரே. அவர் உளச் செயற்பாடுகளை பின்வரும் மூன்று பிரிவுகளாக பிரித்துக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உணர்வு நிலை:- உள்ளத்தின் மேற்பகுதி அல்லது சிந்தனை நிலை இதுவாகும். எண்ணிச் செய்யும் நடத்தைகள் எல்லாம் உணர்வு நிலை சார்ந்தவை. இது முதலாம் கட்டம்.

2. கீழுணர்வு நிலை:- முயற்சியுடன் ஞாபகப்படுத்திக் கொள்ளல் என்பதினூடு உள்ளத்தின் மேற்பகுதிக்கு கொண்டுவரக்கூடிய பகுதியாகும் இது இரண்டாம் கட்டம்.

3. உணர்வற்ற நிலை:- உள்ளத்தில் உள்ள உணர்வுகளை மீளக் கொண்டுவர முடியாத பகுதியாகும். பிறந்தநாள் முதல் பெறும் அனுபவங்கள் பல திரும்பவும் உணர்விற்கு அல்லது ஞாபகத்திற்கு கொண்டுவர முடியாதவாறு உணர்வற்ற நிலைக்கு உள்ளாகின என பிராய்ட் கூறுகின்றார். மேலும் உளத்தின் ஆழமான பகுதி விசாலமான பகுதி இதுவாகும். மனித நடத்தைகளின் பெரும் பகுதி உணர்வற்ற நிலையினாற் கட்டுப்படுத்தப் படுகின்றது.

சிக்மன் பிரய்ட் மனித ஆளுமை வளர்ச்சியை பின்வரும் மூன்று நிலைகளில் எடுத்துக் காட்டுகின்றார். அவை மகிழ்ச்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இட் (id), யதார்த்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஈகோ (Ego) அகம், உயர்ந்த அறநெறிப் பரிமாணங்களைக் கொண்ட சுப்பர் ஈகோ (Super Ego) அதியம்.

1. இட் (id) மனிதனின் உணர்வற்ற மனநிலையினுள் இருக்கும் இட் காரணிப்பகுப்பு, விருப்புக்கள், ஆசைகள், கவர்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவ் இட் காரணிப் பகுப்பிற்கு பலம் வழங்குவது "லிபிடோ" என அழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் காம ஆசையாகும் எனப் பிராய்ட் இயம்புகின்றார். மிகவும் முதிர்ச்சியுற்றதும், நுண்ணறிவானதுமான இட் காரணப் பகுப்பின் நோக்கம் திருப்தியைப் பெற்றுக் கொள்ளுவதாகும். உடனடித் திருப்தியை நாடும் இட் கட்டுப்படுத்தப்படுவது இன்ப துன்பங்களின் அடிப்படையிலாகும். பாலர்களின் நடத்தைகள் முழுவதும் கட்டுப்படுத்தப்படுவது "இட்" காரணிப்பகுப்பினாலாகும்.

2. ஈகோ (Ego) அகம்: 'இட்' காரணிப்பகுப்பின் தேவைகள் முழுவதையும் உரிய முறையில் நிறைவேற்றிக்கொள்ள சூழல் இடமளிக்கமாட்டாது என்பதைப் பாலர்கள் ஒரு கட்டத்தில் உணர்வர். பட்டினியில் இருக்கும் குழந்தை தான் அழுவதாற் பயனில்லை என்று தாய் வந்து உணவு தரும் வரை அழாமல் இருக்கும். சூழல் அல்லது மெய்மைக்கு ஏற்ப சீராக்கம் பெறுதலை இரண்டாம் கட்டமான 'ஈகோ' கொண்டிருப்பதாக பிராய்ட் தெரிவிக்கின்றார். சூழலுக்கப் பொருந்தும் விதமாகவும், மெய்மைக்கு ஏற்பவும் தொழிற்படும் அகம் கட்டுப் படுத்தப்படுவது மெய்ம்மைக் கொள்கையினாலாகும். இது போலன்றி ஈகோ மெய்மையானதும், நுண்ணறி வானது மாகும். அது கவனமாகக் கட்டுப்படுத்திக் கொள்ள முனைகின்றது.

3. சுப்பர் ஈகோ (Super Ego): பாலர்கள் காலப்போக்கில் பெற்றோர்களின் கட்டுப்பாடுகளையும், அறிவுறுத் தலையும் தாண்டி அகத்திலும் உயர்ந்த இன்னொரு உளஅமைப்பு உருவாகின்றது. இது சுப்பர் ஈகோ அல்லது அதிகம் எனப்படும். சட்டதிட்டங்களை மதித்து, ஒழுக்கப் பண்புகளைப் பேணி, நடத்தைகளைக் கட்டுப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல் சுப்பர் ஈகோவின் இயல்பாகும். இது உயர் மானுட விழுமியங்களை பற்றற்ற ஆன்மீக நடத்தைகளின் வெளிப்பாடுகளைக் காட்டுகின்றது.

எப்போதும் திருப்தியை நாடும் 'இட்'டுக்கும் சுப்பர் ஈகோவின் சுபாவத்திற்கும் வெளியுலகத்தின் வேறுபட்ட தேவைக்கும் இடையிற் சமநிலை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஈகோ (அகம்) தொழிற்படுகின்றது. இட், ஈகோ, சுப்பர்ஈகோ என்ற ஆளுமையின் அபிவிருத்திகள் இவை மூன்றுமல்ல. ஆளுமையின் கட்டமைப்பிலேயே இவற்றின் தொடர்புகள் உள்ளன. வளர்ந்தவர் ஒருவரின் வாழ்க்கையில் ஒவ்வோர் அளவிலும் இட், ஈகோ, சுப்பர்ஈகோ என்பன உள்ளடங் கியிருக்கும். முற்றாகவே இட் காரணிப்பகுப்பிற்கு கட்டுப் பட்டுள்ளோர் திருப்தியை நாடி நல்லொழுக்க முறைகளைக் கைவிட்டு மிருகங்கள்போல நடந்து கொள்வர். சுப்பர் ஈகோவின் பக்கம் சார்ந்துள்ளவர்கள் மனச் சாட்சிக்குப் பொருத்தமாக நல்லொழுக்க ஆளமையுடையவர்களாக வாழ்வர்.

இட், உதாரணம் - கைமுறிய அடிப்பேன்

ஈகோ, உதாரணம் - அவன் திருப்பி அடித்தால் ... என எண்ணி நடத்தையைக் கட்டுப்படுத்திக் கொள்ளல். சுப்பர்ஈகோ, உதாரணம் - எப்படியும் மற்றவருக்கத் துன்பம் விளைவித்தல் கூடாத என்ற கொள்கைப்பற்று.

ஆளுமையின் இம்மூன்றினதும் முரணான கோரிக்கை களைச் சமப்படுத்தவன் மூலம் பிள்ளையின் ஆளமையைக் கட்டி எழுப்பலாம். பிராய்ட்டின் கருத்துப்படி பிள்ளையின் அபிவிருத்தியின் ஒவ்வொரு பருவத்திலும் (வாய்வழி இன்பநிலை - 1வயதுவரை, குதவழி இன்பநிலை 2,3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுவரை, பாலுறுப்பின் இன்பநிலை 4 வயது, மறைநிலை - 5 வயதிலிருந்து குமரப்பருவம் வரை) அவனது பாலியற் தேவை நிறைவேற்றப்படுவது, நிறைவேற்றப்படாததைப் பொறுத்து அவனின் ஆளுமையின் அடிப்படை கட்டியெழுப்பப் படுகின்றது.

எலெக்ரா (Electra) சிக்கல், (தந்தையை நேசித்த தாயை வெறுத்தல் சிக்கல்). ஈடிப்ஸ் (Oedipus) சிக்கல் (தந்தையை வெறுத்துத் தாயை நேசிக்கும் சிக்கல்) மூலம் எதிர்ப்பாலியரின் மீது இருக்கும் இயல்பான ஆர்வம் வெளிப்படுகின்றது. இவ்வகையிற் பிள்ளையின் ஆளுமை எதிர்ப்பாற் கவர்ச்சி, அவர்களின் அங்கீகாரம், கணிப்பு என்பவற்றினூடும் வளர்க்கின்றது. மற்றும் ஆளுமை விருத்தியிற் பாதிப்புச் செலுத்தும் வேறு இரு காரணிகள் பற்றியும் பிராய்ட் எடுத்துக் காட்டியுள்ளார். அதாவது; ஈரோஸ், கண்டேஸ் என்பவை யாகும்.

ஈரோஸ் என்பது வாழ்வதற்கும் பாலியல் இச்சைக்குமான ஈடுபாடாகும். அதன்மூலமே பலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. கண்டோஸ் என்பதன்மூலம் கருதப்படுவது மரணத்தின் மீதுள்ள விருப்பாகும். இவை ஆளுமையின் இரு கோணங்களாகவுள்ளன. பிள்ளையின் அபிவிருத்தியில் குடும்பத்தின் மூலம் அடிப்படை பாலியல் விருப்பங்களில் தான் வாழ வேண்டியதற்குரிய சக்திகளையும் எதிர்பார்ப்புக்களையும் விருத்தியாக்க ஊக்குவிப்புக்கள் கிடைக்க வேண்டும். கவலையுடனிருத்தல், பின்னடைவு, தோல்வி மனப்பான்மைபோன்ற நடத்தைகள் கண்டோஸ் பாற்பட்டது. பிள்ளைப் பருவத்தின் போது தனக்குக் கிடைக் காத சந்தர்ப்பங்களினால் வெறுப்பான ஒரு மனப்பாங்கு வரஇடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராய்ட்டைத் தொடர்ந்து யுங் அகமுகிகள் (Intranets), புறமுகிகள் (Extraverts) என இருவகையாக ஆளுமைப் பரிமாணங்களை இயம்பினார். அகமுகிகள் அகவயத் தன்மை கொண்டவர்கள், தன்மயமாக வாழ்பவர்கள், கடும் பிடிவாதம் கொண்டவர்கள், இவற்றிற்கு எதிர்மறையான பண்புகள் புறமுகிகளிடம் காணப்படும். இவர்கள் புறவயமாகச் சிந்திப் பவர்கள், தனிமைப்படாது கூட்டாகச் செயற்படுவார்கள். தமது உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்பவர்கள், பயன் கொள்வகையினராக இருப்பர்.

மேற்கூறிய இருபண்புகளையும் சமநிலையாகக் கொண்டிருப்ப வர்கள் இருமுகிகள் (Ambiverts) ஆவர் மேலும் ஆளுமை யான இன்றைய நவீன காலத்தில் கோட்பாட்டுப் பண்புடையோர், அழகியற் பண்புடையோர், பொருளியற் பண்புடையோர், சமூகப்பண்புடையோர், அரசியற் பண்புடையோர், சமயப்பண்புடையோர் என்றவாறாக நோக்கி ஆராயப்படுகின்றது. இப்பண்புகளின் கூட்டு மொத்தமாகச் **சமநிலை ஆளுமை** கொண்ட மாணவர்களை எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க ஆசிரியர்கள் சமநிலை ஆளுமைப் பண்புடையவர்களாக இருக்கவேண்டும்.

**சமயநிலை ஆளுமை**

உடல், உள-சமூக-மனவெழுச்சி ஆகிய அம்சங்களிலே சமநிலையைப் பெற்றவர்கள் சமநிலை ஆளுமையுடைய வர்கள் எனலாம். இச்சமநிலை ஆளுமையை உடல், உளம், சமூகம், மனவெழுச்சி ஆகிய அம்சங்களால் தொடர்ந்து பேணலாம். உடற்சமநிலையைப் பெற்ற ஒருவர், உளச்சம நிலையைப் பெற்றவராக இருக்க இடமுண்டு அவ்வாறே, உடல் - உளச் சமநிலைப் பண்புகளைப் பெற்றவர்கள்; சமூக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவெழுச்சி ரீதியாகச் சமநிலை பெறாதவர்களாகவும் இருக்கலாம்.

பெரும்பாலும் நல்ல உடற்சமநிலையை உடையவர் களின் நரம்புத் தொகுதி, மூளை, முண்ணான் ஆகியவை சிறப்பாக இயங்கும். இவ்வியக்கம் உளச் சமநிலையைக் கொடுக்கும். இவ்வாறானவர் அமைதியாகவும் மனநிறை வாகவும் வாழ்வர். இவரால் சூழல் தாக்கங்களுக்கு சரியாக முகம் கொடுக்கமுடியும். கடுந்துயரங்கள் அவற்றைத் தாங்கும் சக்தி உளச்சமநிலையுடைய வர்களிடம் காணப் படும். நரம்பு நோய், நரம்புத்தளச்சி என்பவற் றால் ஏற்படும் துன்பங்களுக்கு ஆளாகாமலிருப்பார். உள நோய்கள் சமநிலை ஆளுமையில் தாக்கங்களையும் சிதைவுளையும் ஏற்படுத்து கின்றன. சாதாரணமாக உள நோய்கள் இருவகையாகும்.

1. நியுரோசிஸ் (நரம்புக்கோளாறு)
2. சைக்கோஸிஸ் (உளக்கோளாறு)

இவை ஒருவருடைய சமநிலை ஆளுமையைக் குறைக்கின்றன. உலகின் பெரும்பாலானவர்களுக்கு இந் நோய்கள் உள்ளன. விகிதாசாரத்திலே மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உள நோயாளர் நூறுபேரை ஆராய்ந்தால்; ஒரு சதவீதமானவர் சைக்கோஸிஸ் வகையினராகவும், அறுபது சதவீதத்தினர் நியூரோஸிஸ் வகையினராகவும் உள்ளனர். ஏனையவர்கள் உளநெருக்கீடுகள் உடையவர்கள். துன்பநிலை நரம்பு நோய்கள், பீதிநிலை நரம்பு நோய்கள், வீறுகோணோய் நரம்பு நோய்கள் (ஹிஸ்ரீரியா), காக்காய் வலிப்பு இவ்வாறான நரம்பு நோய்களால் ஒருவருடைய மரணம் சம்பவிக்காது ஆனால் உலகிற் பெரும்பாலானவர்களின் ஆளுமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பாதிப்படையச் செய்கின்றன. இலங்கையில் யுத்தத்தாற் பாதிக்கப்பட்ட பகுதிகளிற் சுமாராகக் கூறக்கூடிய மக்களம், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப்பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள், மாணவர்கள் இந்நரம்பு நோய்களால் தாக்கங்களுக்குள்ளாகி வருகின்றனர். இவர்களுக்கான சரியான உதவிகளையும், வழிகாட்டல்களையும் ஏற்படுத்த வேண்டிய அவசிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

ஆளுமைச்சிதைவை ஏற்படுத்தும் இந் நரம்பியல் நோய்கள் ஏற்படக் குடும்பக் காரணிகள், பாடசாலைக் காரணிகள், சமூகக் காரணிகள் பங்கு கொள்கின்றன.

**தாயின் அரவணைப்புப் பரிசோதனை**

குழந்தைக்குத் தாயின் அரவணைப்பு மிக அவசியமானது. உளவியலறிஞர் ஹறாலோ, போல ஆகியோர் தாயின் அரவணைப்பு பிள்ளையின் நடத்தை மனப்பான்மை என்பன ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் என பரிசோதனைகள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர். ஒரு தொகுதிக் குரங்கக் குட்டிகளைத் தாயின் அவரணைப்பிலும் மற்றுமொரு தொகுதிக் குரங்கு குட்டிகளைத் தாயிடமிருந்து பிரித்து தனியாக செயற்கைத் தாய் போன்ற கம்பியிலாப் பொம்மையை உருவாக்கி அதன் முலையிலிருந்து பால் குடிக்கும் வசதி செய்யப்பட்டது. வளர்ந்து அவை இளங்காலத்தை அடைந்ததும் இவ்விரு தொகுதிக் குரங்குக் குட்டிகளையும் இயற்கைச் சூழலுடன் வளரும் குரங்குக் குட்டிகளுடன் விடப்பட்டன.

அதன்பின் அவற்றின் நடத்தைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. தாயுடன் உறவாடி வளர்ந்த குரங்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிகள் அன்பு, காதல், பாலியல், தாய்மை, தந்தைகுரிய இயல்புகள், உணவு அருந்துதல் என்பவற்றில் இயல்பான, திருப்தியான நடத்தைகளை வெளிக்காட்டின. தாயிடமிருந்து பிரித்து வளர்க்கப்பட்ட குரங்குக்குட்டிகள் மேற்கூறிய பிரச்சனைகளிற் பல பிரச்சினைகளை எதிர்நோக்கின. முரண்பாடுகள் உள்ளவையாக ஒன்றை ஒன்று தாக்குப வையாக, தனிமையை நாடுபவையாக இருந்ததுடன், தாய்மையடைந்த குரங்குகள் பல நோய்களுக்கு உட்பட்டன. தமது குட்டிகளுக்குப் பால் கொடுக்க மறுத்தன. சோகமும், விரக்தியும் நிறைந்த நடத்தைகளை வெளிக்காட்டின.

இவ்வாய்வு விளைவுகள் மனித இனத்துக்கும் பொருந்தும் என்பதை மேலும் பலவகை ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன. தாயின்பிரிவு, தாயின் இறப்பு, விவாகரத்து, தாய் தந்தை சண்டை என்பவை பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் ஊறு விளைவிக்கின்றன. தாயின் பிரிவால் ஏற்படும் உளக்கோளாறுகள் ஆளுமைப்பிறழ்வை ஏற் படுத்தும். இன்றைய சமூக, குடும்பச் சூழ்நிலைகளில் ஏற்படும் பெரும்பாலான பிரச்சிகைளுக்கு மேற்கூறப்பட்ட காரணங் களே அடிப்படைகளாகவுள்ளன. தாயைத் தொடர்ந்து முன் ஆரம்ப, ஆரம்பக் கல்வி ஆசிரியை; வளர்ப்புத் தாயாக அப்பிள்ளையைப் பொறுப்பேற்று அவர்களது ஆளுமை களை விருத்தியாக்கத்தமது ஆளுமைகளை வளர்க்க வேண்டும்.

1. தாயாருக்கும் பிள்ளைக்கும் இடையே நிலவும் தொடர் பினாற் பிள்ளையினுள் வளர்க்கக்கூடிய நான்கு திறன்களை எழுதுக.
2. தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தாயின் நடத்தைக் கோலத்திற்கேற்ப பிள்ளையினதும் வளரும் நடத்தை இயல்புகள் 4 தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தாயின் நடத்தைக் கோலம் | பிள்ளையின் நடத்தை இயல்பு |
|---|---|
| தைரியம் அளித்தல் | ........................................ |
| தூண்டுகோலாகவிருத்தல் | ........................................ |
| பாராட்டு | ........................................ |
| நியாயபூர்வமாகவிருத்தல் | ........................................ |

3. சமூகமற்ற செயற்பாடுகளுக்கேற்ப இன்று தாயின் பாத்திரம் பல்வேறு மாற்றங்களுக்கு ஆளாகியுள்ளது. இக்காரணத்தினால் ஆரம்பப்பிள்ளையின் வளர்ச்சியில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர்க்க நீர் பயன்படுத்தும் 3 தீர்வுகளை விபரிக்க.

4. ஆரம்ப இடைநிலைக் கல்வி ஆசிரியர்கள் வளர்ப்புத் தாயாராகச் செயற்பட வேண்டியதன் அவசியம் இன்று ஏன் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது?
   1. ஆளுமைக்குறைபாடு என்றால் என்ன?
   2. ஆளுமைக்குறைபாட்டை ஏற்படுத்தும் குடும்ப பாடசாலைக் காரணிகளைத் தருக?
   3. ஆளுமையை அளவிடும் முறைகளைத் தருக.

**விடைகள்**

1. ஆளுமைக் குறைபாடானது சமநிலை ஆளுமைப் பண்புகளிற் பலவோ அல்லது ஒன்றோ இல்லா திருத்தல், சிதைவடைதலைக் குறிக்கின்றது. மேலும் சமூகத்தால் விரும்பப்படாத தீய பழக்கங்கள் நடத்தை களுக்கு உட்பட்டு அவற்றிலிருந்து மீள முடியாத தன்மையும் ஆளுமைக் குறைபாட்டு நிலையை எடுத்தியம்புகின்றது.

அ) குடும்பக் காரணிகள் - தாயின், தந்தையின் அரவணைப்புக் கிடைக்காமை, தாய் தந்தை உறவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிசல், பிரிவு, விவாகரத்து, இருவரும் இறத்தல், இருவரில் ஒருவர் பிள்ளையை ஏற்றுக்கொள்ளாமை, பிள்ளையின் உளவியல், உடலியற் தேவைகள், விருப்பங்கள், அவாக்கள் நிறைவேறாமை.

ஆ) பாடசாலைக் காரணிகள் - சிறந்த ஆசிரியர் மாணவர் உறவின்மை, மாணவர்களுக்கு காப்பு, கணிப்பு மதிப்பளிக்காகமை, பாகுபாடு காட்டல், மாணவர்களின் திறன்களுக்கு மதிப்பளிக்காமை, அங்கீகரிக்காமை, மகிழ்ச்சிகர மற்ற, வகுப்பறைக்கு கவின்நிலை கடுமையான தண்டனை முறைகள், மாணவர் உரிமைகளைப் பேணாமை, சரியான ஆலோசனை வழிகாட்டலின்மைகள்.

இ) ஆளுமை விபரக் கொத்து முறை, தரமிடு அளவு கோள்முறை, சமூகமான முறை, புறத்தோற்றமுறை, சுயசரிதை முறை, றோஷாமைதடம், பேட்டிமுறை, நவீன நடத்தைப்பதிவுமுறை.

**ஆசிரியர் ஆளுமையில் அழகியற் கலைகள்**

இன்றைய கல்வி உளவியற் செல்நெறிகளில் மாணவர் களினதும், ஆசிரியர்களினதும், கற்போரினதும் ஆளுமையை விருத்தியாக்குவதும், சமநிலை ஆளுமையை ஏற்படுத்த வழிகாட்டுவதும் அழகியற் கலைகள் என இயம்பப்படு கின்றன. அழகியற் பாடங்களை ஆசிரியரும் மாணவரும் கற்பதன் மூலம் மனிதர்களிடையே இயல்பாகக் காணப்படும் இரசித்தல் திறன், ஆக்கத்திறன், வெளிப்படுத்தும் திறன், விமர்சிக்கும்திறன், சுயமதிப்பீடு செய்யும் திறன், ஏனையவர் களின் உணர்வுகளை மதிக்கும் மனப்பாங்கு, என்பன விருத்தியாகும். சமநிலையான ஆளுமை வளர்ச்சிக்கு இவை உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாதாரண மனிதன் அழகியற் பொருட்களை விரும்புகின்றான் ஆசிரியரான ஞானி அழகை விரும்புகின்றான்" என கிரேக்க அறிஞர் பிளேட்டோ இயம்புகின்றார். அழகியலுணர்வு (Esthetic sence) மனிதப் பண்புகளை, ஆளுமைகளை வளர்க்கும் என்றார் கவியரசர் இரவீந்திரநாத்தாகூர் இந்நோக்கில் அழகை விரும்பும் கல்விச் சமூகம் ஒன்றை உருவாக்க அழகியலுணர்வு இரசனை என்பன முதலில் ஆசிரியர்களிடம் வளர்க்கப்பட வேண்டும்.

அழகியற் கலைகளை இரசித்தல் இன்பத்தைத் தோற்றுவிக்கின்றது. யாதேனும் நிகழ்வுப் புலன்களை வருடுவதால் ஒருவருள் ஏற்படும் மானசீகமான திருப்தியும் இன்பமும் இரசித்தலாகப் பரிணமிக்கின்றது. இன்பத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் உலகில் எல்லாப் பொருட்களுக்கும் உண்டு. புலன்களை வருடும் எல்லாம் இவற்றைக் கொண்டுள்ளன. இன்பத்தைத் தோற்றுவித்தலின் ஆரம்பம் புலனுணர்வாகும். ஐம்புலன் உணர்வுகளினூடாகச் சுவைகள் தோன்றுகின்றன. புலன்களை வெளிப்படுத்தும் உணர்வுகள் காரணமாக மனம் அழகியலனுபவங்களை பெறுகின்றது. இத்தகைய அனுபவங்களைப் பெற ஆர்வமுள்ளவர்க்கு காதில் விழும் பாடல் கவிதை, கண்முன்னே விழும் சித்திரம், நடனம், நாடகம் என்பன புலன்களைத் தூண்டி அழகியலுணர்வை - இரசிப்பை வெளிப்படுத்துகின்றன.

இரசனையால் ஏற்படும் சுவை பேரின்பத்திற்கு ஈடாக கருதப்படுகின்றது. இதற்குக் காரணம் சுவையும், மகிழ்ச்சியும் ஒன்றானவையல்ல. உயர்ந்த சுவையானது ஆசைகளிலிருந்து விடுபட்ட ஒன்றாக உள்ளது. மகிழ்ச்சி என்பது ஒருவன் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளும்பொழுது ஏற்படுவ தாகும்.

**தலைமைத்துவ அழகியல்**

ஆளுமையுடைய ஆசிரியர்கள் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராக இருப்பர். இத்தலைமைத்துவப் பண்புகளை அழகியலுணர்வு மேலும் விருத்தியாக்குகின்றது. பலவிதமான திறமைகளைப்போல குறைபாடுகளையும் உடைய பாடசாலைச் சமுதாயத்திற் கற்றல் கற்பித்தற் பொது வேலைகளில் ஈடுபடத் திறமை வாய்ந்த தலைமைத்துவம் தேவை. தொடங்கும் ஆற்றல், எதிர்காலத் தூரதரிசனம், தொடர்புபடுத்தும் ஆற்றல், புதியவற்றை அமைக்கும் ஆற்றல் என்பன தலைமைத்துவத்திற்கு அவசியமான குணங்கள். இக்குணங்களை விருத்திசெய்ய அழகியல் ஆக்கத்துறைகள் வளப்பிரதேசங்களாகவும் கற்பிக்கும் கலையிற் புதிய பிரவேசங்களாகவும் உள்ளன.

பாடசாலைச் சமூகத்தைப் பற்றிய பண்பு ரீதியான செயற்படும் கணிப்பீட்டில் அங்கு கணிப்பீட்டு வலையமைப் பிற் பல நெறிமுறைகள் காணப்படும். இவை உயர் இரசனைத் தன்மை, ஆன்மீகத்தன்மை, வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் மனித நடத்தை தொடர்பான விசேட அறிவு, காருண்யத்தை அபிவிருத்திசெய்யும். இது மனிதன்மீது மனிதன் அனுதாபம் செலுத்தி ஆறுதல் அளிக்கும். எல்லா மனிதருள்ளும் உயர் அழகியல் இரசனைத்தன்மைகள், உயர் மதிப்புத் தன்மைகள் உருவாகி இருப்பதனால் மட்டுமே இந்நிலையிருக்கும்.

விசேடமாக உயர் அழகியல் இரசனை ஆன்மீக வளர்ச் சிக்கு வழிவகுப்பதால் மனிதருள் காருண்ய தலைமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் இதனால் தலைமைத்துவ அழகியல் அம்சங்கள் விருத்தியடையும்.

1. ஆக்கச்சிந்தனை - திறன்விருத்தி
2. பயனுறுதி வாய்ந்த வாழ்க்கைக்குத் தேவையான திறன் மனப்பாங்கு விருத்தி
3. தனது இன - தேசிய தனித்துவங்களை உணர்தல்
4. விமர்சன ஆற்றல் விருத்தி
5. வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் திறன் விருத்திகள்
6. கூட்டுணர்வு - பங்குபற்றல் முகாமை - குழுவாகச் செயற்படும் ஆற்றல் விருத்தி.

சூழலில் பெற்றுக் கொள்ளப்படும் அனுபவம், இரசிப்பு, அவதானித்தல், வாய்ப்புப்பார்த்தல், பிரயோகம் என்பன தலைமைத்துவ அழகியலில் ஆக்கத்திறன் அடிப்படை களாகும். சூழலின் அடிப்படையில் மன ஒருமைப்பாடு தோன்ற மனதில் கற்பனைகள் எழும். சுவையை அனுபவிக் கும் ஆற்றலுடன் ஒருவன் தான் கண்ட அழகினை அனுபவித்து அந்த அழகினை எண்ணக் கோலங்களாக மனதில் இருத்திக் கொள்வதற்கு மனதை ஒருநிலைப்படுத்தும் திறன் உதவுகின்றது. இது பின்னர் ஆக்கத்திறன் கருவாகின்றது. இவ்வாக்கத்தின் கரு தலைமைத்துவ ஆற்றலை விருத்தியாக் கின்றது. ஒரு கலைத்திறனாக ஆசிரியர் மிளிர இது உதவு கின்றது.

கலைஞன் தனது படைப்புக்காக ஆக்கத்திற்காக பயன்படுத்தும் கரு சிறிய அனுபவமாக இருக்கலாம். அனுபவம் இரசனையின் மூலம் மனதில் பதிகின்றது. உயர் இன்பத்தை ஏற்படுத்துகின்றது. கலையாக்கம் ஒன்றிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளும் புறமும் உள்ள உண்மைகளும் உள்ள கிடக்கைகளும் வெளிப்படுகின்றன. இரசனை அனுபவித்தால் இதை உணரலாம். இவ் இரசனை ஞானத்தின் பாலானது அறிவிற்கும், தர்க்க ஞானத்திற்கும் அப்பாற்பட்டது. இரசனை மூலம் இரசிகன் தனது அறிவினால் மட்டுமன்றி, உள்ளத்தினாலும் யதார்த்தத்தை அனுபவிக்கின்றான். அந்த யதார்த்தம் அவனது சொந்த அனுபவமாக மாறுகின்றது. வாழ்க்கையில் அறிந்து கொள்ள முடியாத உலகின் உண்மை களை அவன் அறிந்து கொள்கின்றான். இவ்வாறானவன் ஆளுமையுடைய ஆசிரியரின் பண்புகளைப் பெற்றிருப்பான். அவனது தலைமைத்துவ ஆற்றல் விருத்தியானதாக இருக்கும்.

**இரசனை அனுபவம்**

வேகமாக, ஓய்வில்லாமல் இயந்திரவாழ்க்கை வாழ்ந்து மனத்தாங்கல்களுக்கு உட்பட்டுவரும் இன்றைய பாடசாலை கள்; சமூகச் சூழலிலேயே ஆறுதலையும் உளவிருத்தியையும் ஏற்படுத்தும் ஒரே ஊடகம்: கலையாகும். கலையை இரசிக்கும் மனிதன் முரடனாக இருக்கமாட்டான். அவனது நடை, உடை, பாவனை அழகாக இருக்கும். அழகியல் பற்றிய அறிவுடன், இரசனை அனுபவமும் அவனை வளம்படுத்தும். இரசனை அனுபவத்தை ஆசிரியர்கள் எதிர்காலச் சந்ததி களான மாணவர்களுக்கு வழங்கவேண்டும். இனப்பற்றுள்ள தேசப்பற்றுள்ள, பாடசாலை குடும்பப் பற்றறுள்ள ஆளுமை யான மாணவர்களை உருவாக்க இரசனை உணர்வு பயன்படுகின்றது என நவீன உளவியலாளர்கள் தெரிவிக் கின்றனர்.

இரசனை அனுபவம் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்யும். நல்லெண்ணங்களால் உடலும் உள்ளமும் புத்துயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதலே இதற்குக் காரணம். அழகியல் இரசனை அனுபவம் வாழ்க்கையின் அச்சாணி போன்றது.

மாணவர்களிடம் இரசனை அனுபவத்தை ஏற்படுத்த விரும்பினால் முதலில் ஆசிரியர் இரசனை உடையவராக இருக்க வேண்டும். கலைஞன் தான் பெற்ற இரசனை அனுபவத்தை ஏதோ ஒரு வழியில் ஊடகத்தினூடாக வெளிப்படுத்தும் போது அச்செயலை நாம் கலையாக்கம் என்கின்றோம். இதற்கு அனுபவம் பெறல், இரசித்தல், கற்பனை ஆக்கம் என்ற விரிவாக்கம் வழிவகுக்கின்றது. அனுபவங்களின் வெளிப்பாடும் ஆரம்பமாகின்றது. ஆக்க மானது உண்மை நன்மை அழகு என்பவற்றைக் கொண்டிருப் பதுடன்.

1. சுயநுகர்வு - அனுபவத்தைப் பெற்றபோது தான்பெற்ற இரசனை அளவு
2. எளிமை - இரசனையை வெளிப்படுத்தும் தெளிவு ஊடகத்தின் திறன் நுட்பங்கள்
3. நேர்மை - நியாயமான தன்மை, மெய்ம்மை

ஆகியவை கலைப்படைப்பின் மெய்ம்மைகளாக வுள்ளன. இவையே கலைப்படைப்பின் பெறுமதிகளை நிச்சயிக்கும். சிறந்த கலையாக்கம் இரசிகனின் இரசனை அனுபவ மட்டத்தினை உயர்த்தும். ஆசிரியன் கலைஞனாக இருந்து மாணவர்களை இரசிகர்களாக்கி பாடத்தைக் கற்பிக்கும் முறைமைகூட ஒருவகைக் கலையாகவே மிளிர்கின்றது. ஆளுமையுள்ள, அழகியலுணர்வுள்ள கலைஞனாக கற்பிக்கும் கலையை இயம்பும் ஆசிரியர்கள் மாணவர் - சமூக மத்தியில் உயர்வான நிலையிலேயே இருப்பர். இவருடைய கற்பித்தலை மாணவர் இரசித்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் பெற்றுக் கற்றலுடன் திறனாய்வு சிந்தனை மூலம் விமர்சனங்களும் செய்யும் தூண்டல்களையும் பெறுவர். மேலும் கலை இரசனை உணர்வு ஒழுக்க விழுமியங்களையும் ஏற்படுத்துகின்றன.

இரசனை அனுபவமானது ஒவ்வொருவருடைய தனித் தன்மைகளுக்கு ஏற்பவும்; அனுபவம், ஆற்றல், ஆளுமை களுக்கு ஏற்பவும் வேறுபடக் கூடியன. கலைகளில் இரசனை அனுபவத்தை சுவை என்ற வகையில் 'நவரசம்' எனப்பாகு படுத்தியுள்ளார்.

1. அன்பு - சிருங்காரம் - மகிழ்ச்சிக்குரியது. மனித உள்ளங்கள் ஒருவர் பாலுள்ள பிரியத்தினால் வெளிப்படுவது.

**கற்றல் அடிப்படை என்ற முறையில் அன்பு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கருணாரஸம் - (கருணை - மானுட நேயக் குறியியல்புகள், துன்பத்தில் உதவுதல்.
3. ரௌத்திரம் - கோபம் - எதிரியினிடத்தில் வெறுப்புணர்வு
4. வீர - வீரம் - சக்தி, நன்நடத்தை, காரணர்கள் உந்தப்படுதல்.
5. பயானக - பயம் - அச்சத்தை ஏற்படுத்தும் காரணிகளின் விளைவு
6. பீபத்ச - வெறுப்பு - அருவருப்பான நிலயை இயம்புகின்றது.
7. அற்புத - ஆச்சரியம் - இயற்கைக்கு மீறிய சக்திப்பிரவாகம்
8. ஹாஸ்ய - சிரிப்பு - களிப்பினூடாக ஏற்படும் சிரிப்புணர்வு
9. சாந்தி - அமைதி - உலகப்பற்றுள்ள இன்ப ஆளுமைகளில் இருந்து தோன்றும்

இந்நவரச இயல்புகளை ஒரு ஆளுமையுள்ள கலைஞர் என்ற வகையில், ஆசிரியர் வகுப்பறையிலும், பாடசாலை யிலும் பிரயோகிக்க வேண்டியிருக்கின்றது. அறிவையும், திறன்களையும், மனப்பாங்குகளையும், ஆசிரியர்களுக்கு ஊட்டுவதுடன் பாடத்தில் ஒரு இரசனைச் சுவையை ஏற்படுத்திச் சிறந்த சுவைஞர்களாக மாணவர்களை உருவாக்கு வதும் ஆசிரியர்களின் முக்கிய செயற்பாடுகளாகவுள்ளன. சுவையான அழகுற அமைந்த பாடத்தை கற்கும்போது மாணவர்களுக்கு ஏற்படும் உணர்ச்சியே இரசனை உணர் வாகும். மனதை இவ்விரசனை மகிழ்விக்கின்றது. சுவையான ஒரு மாற்றத்தையும் ஏற்டுத்துகின்றது. கலைச்சுவையை அனுபவிக்கும்போது ஏற்படும் புத்துணர்ச்சியே இரசனை யாகப் பரிணமிக்கின்றது. இயல், இசை, நாடகம் என்ற வகையில் கலைப்பரிமாணங்கள் இன்று சினிமா தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி, இன்டர்நெட் வரையிற் பல கவர்ச்சிகரமான ஊடகங்களினூடாக மக்களுக்கு கிடைக்கின்றன. இவற்றில் நல்ல அம்சங்களை கல்வித்துறையில் பயன்படுத்தல் பெரு நன்மை விளைவிப்பதுடன் மனித ஆளுமைப் பண்புகளையும் விருத்தியாக்குகின்றன.

பொழுது போக்கை மகிழ்ச்சிகரமாகப் பயன்டுத்த மேற்குறிப்பிட்ட சாதனங்களை, நாடகம், நாட்டியம், சங்கீதக் கச்சேரி, சித்திரக் கண்காட்சி, இயற்கையை இரசித்தல் போன்ற அழகியலுணர்வு சார்ந்த விடயங்களில் ஈடுபடும் போது உள்ளம் புத்துணர்ச்சி பெறுகின்றது. உள நெருக்கீடுகள், இறுக்கங்கள், அழுத்தங்கள் இல்லாமற் போகின்றன. இதனால் ஆளுமை வளர்ச்சியடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

**தேர்ச்சிகள் (Competencies) மையக் கல்வியில் புளுமின் புதிய பாகுபாடு**

தேர்ச்சி எனும் பதம், நீண்ட காலமாக, யாதேனும் ஒரு செயலைச் செய்யும் ஆற்றல் எனும் அர்த்தத்தில் தொழிற் பயிற்சித் துறையில் பயன்படுத்தப்பட்டது. கடந்த சில தசாப்தங்களாக இப்பதம் பொதுக்கல்வித் துறையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. யாதேனும் ஒரு பின்னணியில் ஒருவர் யாதேனும் ஒன்றை வினைத்திறனாகச் செய்யும் ஆற்றலே தேர்ச்சி எனப்படுகின்றது. தேர்ச்சி என்பது அறிவுக்கு மாத்திரம் வரையறைப்பட்டதல்ல. கூடவே அது அறிவைப் பயன்படுத்தும் ஆற்றலையும் குறிக்கின்றது. பெரனவுட் (P.Perrenound, 1997) என்பாரது கூற்றுப்படி, தேர்ச்சி என்பது ஒருவர் தாம் சேகரித்த அறிவை, சிக்கலான, முழுமை யான முன்னனுபவமற்ற சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும், ஒன்றிணைப்புச் செய்வதற்கும் ஆற்றல் பெறுவதாகும். அதற்கமைய அவரது வரைவிலக்கணத் தின்படி, தேர்ச்சி என்பது அறிவை அடிப்படையாகக் கொண்டது எனினும் அறிவுக்கு மாத்திரம் வரையறைப்படாத பல்வேறு சந்தர்ப்பங்களில் வினைத் திறனுடன் செயற்படுவதற் கான ஆற்றலாகும். 1996 இல் ஐரோப்பிய கவுன்சில் மாநாடொன்றின்போது குலஹன் (J.Coolahan), ஒருவர் கல்விச் செயல்களில் செயல்ரீதியில் ஈடுபட்டு விருத்தி செய்துகொள்ளும் அனுபவங்கள், பெறுமானங்கள், நடத்தைத் தன்மைகள் அடிப்படையாகக் கொண்ட பொது ஆற்றலே தேர்ச்சி ஆகும் எனக் குறிப்பிடுகின்றார். அதாவது தேர்ச்சி என்பது ஒரு முழுமையான எண்ணக்கருவாகும். மாணவனொருவன் கற்பதன்மூலம் வளர்த்துக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு உட்பட அறிகைத் திறன்களும், உள இயக்கத் திறன்களை அடிப்படை யாகக் கொண்ட திறன்களும், மனப்பாங்கு உட்பட மனவெழுச்சி பண்புகளும் இங்கு உள்ளடக்கப் படுகின்றன.

**முதன்மையான தேர்ச்சிகள் (Key Competencies)**

தேர்ச்சி சார்ந்த கல்வி என்பது கல்வித்துறையில் முக்கியமான ஒரு தலைப்பாக உள்ளது. உலகின் பல்வேறு நாடுகளின் கல்வி முறைமையில் கலைத்திட்டங்கள், மதிப்பீடு உட்பட கற்றல் - கற்பித்தல் செயன்முறை தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முதலில், கல்வியில் முக்கியமானவையாகக் கருதப்படும் தேர்ச்சிகளை இனங்கண்டுகொள்ளுதல் வேண்டும். பிரதான தேர்ச்சிகள் என்பதால் கருதப்படுவது, வாழ்க்கைக்கும் வாழ்நாள் முழுவதிலும் கற்பதற்குமான ஆற்றலாகும். பல்வேறு கல்வி வேலைத்திட்டங்களினூடாக இனங்காணப் பட்டுள்ள பிரதானமான தேர்ச்சிகளுள் சில தேர்ச்சிகள்கீழே தரப்பட்டுள்ளன.

**சிந்தனை சார்ந்த தேர்ச்சிகள்**

சிந்தனை என்பதுடன் தகவல்கள், அனுபவங்கள் மற்றும் கருத்துக்களின் ஊடாக உணர்வைப் பெறுவதற்காக ஆக்கத்திறனையும் நுண்ணாய்வுத் திறனையும் அறிவாற்றற் செயன்முறைகளையும் பயன்படுத்துவதாகும். சிந்தனைச் தேர்ச்சிகளைக் கொண்ட, பிரச்சினை தீர்க்கத் தெரிந்த மாணவர்கள் உயிரோட்டமான வகையில் அறிவைத் தேடிச் சென்று திறன்களை விருத்தி செய்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழி, குறியீடுகள், சித்தரிப்புகள் தொடர்பான தேர்ச்சி**

இத்தேர்ச்சியைக் கொண்ட மாணவர்கள், சொற்கள், எண்கள், குறியீடுகளை மனப்படங்கள் , சித்திரிப்புகளாகத் தொழில்நுட்பச் சூழமைவு வீச்சொன்றில் வியாக்கியானஞ் செய்யவும், பயன்படுத்தவும் ஆற்றலைக் கொண்டிருப்பர்.

**சுய முகாமை தொடர்பான தேர்ச்சி**

இத்தேர்ச்சி சுய ஊக்கத்துடன் தொடர்புடையது. "என்னால்" படிக்க முடியும், என்னால் யாதேனுமொன்றைச் செய்யமுடியும், எனும் மனப்பாங்குடன், சுயாதீனமாக வாழ்க்கையின் குறிக்கோள்களை அடையத்தக்க ஆற்றலே இதுவாகும்.

**ஏனையோருடன் ஒத்துழைத்துச் செயற்படுதல் தொடர்பான தேர்ச்சி**

இத்தேர்ச்சியைக் கொண்ட மாணவருக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு வகிபாகங்களில் ஈடுபடமுடியும். தமது சொற்களும், செயற்பாடுகளும் ஏனையோர்மீது செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பான விளக்கம் அவர்களுக்கு உண்டு.

**பல்வேறு செயல்களில் ஈடுபாடு, பங்களிப்புத் தொடர்பான தேர்ச்சி**

இத்தேர்ச்சி கொண்ட மாணவருக்குப் பொருத்த மானவாறு குழு அங்கத்தவராகப் பங்களிப்புச் செய்யும் ஆற்றல் உண்டு. குழுவில் ஏனையோருக்கும் பங்களிப்புச் செய்யச் சந்தர்ப்பமளிப்பர்.

மேற்கூறப்பட்ட பிரதானமான தேர்ச்சிகளை அடைவதற்குத் தேவையான நடத்தை மாற்றங்களை அந்தந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்தின் ஊடாக இனங்கண்டுகொள்ளலாம். இவற்றைச் சிறப்பான நடதைக் குறிக்கோள்களாக மேலும் பாகுபடுத்தி, கற்பித்தலையும், மதிப்பீட்டையும் ஒழுங்கு செய்து கொள்ள லாம்.

தேர்ச்சிமட்டத்தை மாணவர் அடைந்துள்ளாரா என அறிவதற்காகச் செய்யப்படும் மதிப்பீடு, நியமஞ்சார் மதிப் பீடாகவே இருத்தல் வேண்டும். குறித்த தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே, ஒவ்வொரு மாணவனும் எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளனரா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். மாணவரிடையே கெட்டிக்காரன் யார்? கெட்டித்தனம் குறைந்தவர் யார்? என வகைப்படுத்தலோ திறமையின்படி மாணவரைத் தரப் படுத்தும் மரபுரீதியான நியதிசார் மதிப்பீட்டு முறையோ இதற்குப் பொருத்தமானதல்ல..

**கல்விக் குறிக்கோள் பாகுபாடு**

கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் எதிர்பார்ப்பு சமனிலை ஆளுமை வளர்ச்சியை ஏற்படுத்துவதாகும். ஆளுமை விருத்தியானது முதன்மையான வகையில் மூன்று பரப்புக்களைக் கொண்டது எனக் கூறலாம். 1956இல் பி.எஸ்.புளும் என்பவரை முதன்மையாகக் கொண்ட ஒரு கமிட்டியினால் ஆளுமை வளர்ச்சிச் செயன்முறையானது அறிதல் ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி, உள இயக்க ஆட்சி என மூன்று ஆட்சிகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் தொடர் பான எளிய பாகுபாடு முன்வைக்கப்பட்டது. (Taxonomy of Educational Objectives) கற்றற் செயன்முறையின்போது மாணவன் இம்மூன்று ஆட்சி களுக்கும் அமைவான கற்றற் பேறுகளை எந்த அளவுக்குப் பெற்றுள்ளான் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள் உட்பட, வேறு மதிப்பீடு முறைகள்மூலம் மதிப்பீட்டு செய்யப்படும்.

புளூம் பாகுபாடு, உலகின் பெரும்பாலான பாடசாலைகளில் நீண்டகாலமாகப் பிரபல்யம் பெற்றுக் காணப்படுகின்றது. கற்பித்தலைத் திட்டமிடுவதற்கும், மாணவரது செயலடைவை மதிப்பீடு செய்வதற்காகவும் இப்பாகுபாடு பெரிதும் பயன்படுகின்றமை தெளிவு. இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் புளூம் பாகுபாடு தவிர, மேலும் சில பாகுபாடுகளும் முன்வைக்கப்பட்டன. 1987 இல் ஈ. எஸ். க்வெல்மாஸ் முன்வைத்த தருக்கத் திறன் விருத்தி பாடசாலைகளிற் பிரபல்யம் பெற்றிருந்த மற்றுமொரு குறிக்கோட்பாகுபாடாகும். இது தவிர, புளூம் இனது மாணவர்களுள் ஒருவரான லோரிஸ் அண்டர்சன் உட்பட ஒரு தொகுதிக் கல்விமான்களால் 1990களில், புளூம் இனது பாகுபாடு 21ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமானவாறு மறுசீரமைப்புச் செய்யப்பட்டு 2001 இல் வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும் புளூம் உட்பட அவரது குழுவினரால் தொடக்கத்தில் முன்வைக்கப்பட்ட குறிக்கோட்பாகுபாடு இன்னமும்கூட பெரும்பாலான பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**புளூம் பாகுபாட்டில் திருத்தம்**

1990களில், புளூம் இனது மாணவர்களுள் ஒருவரான லோரிஸ் அண்டர்சன் உட்பட ஒருதொகுதிக் கல்விமான்களால் 21 ஆம் நூற்றாண்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொருத்தமானவாறு புளூம் பாகுபாட்டைத் திருத்தியமைக்கத் திட்டமிடப்பட்டது. 2001 இல் வெளியிடப்பட்ட இந்தத் திருத்தியமைக்கப்பட்ட பாகுபாட்டிற் பிரதானமான மூன்று வேறுபாடுகள் காணப்படுகின்றன. (1)பெயர்ப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியலில் மாற்றம் (2) கட்டமைப்பில் மாற்றம் (3) வலியுறுத்தலில் மாற்றம் என்பனவே அவையாகும்.


1) பெயர்ப்பட்டியல் மாற்றம்

பெயர்ப்பட்டியலிற் சில மாற்றங்கள் செய்யப் பட்டுள் ளன. புளூம் இனது ஆரம்பப் பெயர்ப்பட்டியல் பின்வரும் ஆறு பெயர்ச் சொற்களைக் கொண்டது.




**பழைய பாகுபாடு**

அண்டர்சனின் திருத்தியமைக்கப்பட்ட பெயர்ப்பட்டி யலில் அப்பதங்கள் வினைச் சொற்களாக மாற்றப்பட்டுள்ள மையைப் பின்வரும் படம் காட்டுகின்றது.




**புதிய பாகுபாடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக, பழைய பாகுபாட்டின் கீழ்மட்டமாகிய "அறிவு" புதிய பாகுபாட்டில் "ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல்" என மாற்றப்பட்டுள்ளது. பழைய பட்டியலில் விளங்கிக் கொள்ளல் / கிரகித்துக் கொள்ளல், புத்தாக்கம் புரிதல் என மாற்றப்பட்டுள்ளது. பழைய பாகுபாட்டில் மதிப்பீட்டுக்கு மேலே புத்தாக்கம் படைத்தல் இடம் பெற்றுள்ளது. அதாவது புதிய பாகுபாட்டின்படி மிக உயர்மட்டத் திறன் "புத்தாக்கம் படைத்தலாகும்" (Creation)

**புதிய பாகுபாட்டின் ஆறு படிமுறைகளும் பின்வருமாறு மேலும் பகுக்கப்பட்டுள்ளது .**

1. ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் (Remembering)
   மீள நினைவு கூர்தல், இனங்காணல், நீண்டகால ஞாபகத்தி லிருந்து குறித்த அறிவை மீட்டல்.

2. விளங்கிக் கொள்ளல் / கிரகித்துக் கொள்ளல் :
   (Understanding)
   பொருள் விளக்கமளித்தல்மூலம், உதாரணங்களை எடுத்துக்காட்டுவதன்மூலம், வகைப்படுத்துவதன்மூலம், அனுமானிப்பதன்மூலம், ஒப்பிடுவதன்மூலம், விபரிப் பதன்மூலம் வாய்மொழியாகவோ எழுத்து மூலமோ வரைபுகள் மூலமோ, பொருளை / அர்த்தத்தைக் கட்டியெழுப்புதல்.

3. விளங்கிக்கொள்ளல் / கிரகித்துக்கொள்ளல்: (Applying)
   யாதேனுமொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தல்.

4. பகுப்பாய்வு செய்தல் : (Analysing)
   பொருள்களைக் கூறுகளாகப் பிரித்தல், பகுதிகளாக வகுத்தல், பகுதிகளுக்கு இடையிலான தொடர்பு எவ்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றானது எனத் தீர்மானித்தல், வேறுபாடுகளைக் காட்டுதல், ஒழுங்கமைத்தல், பண்புகளைக் காட்டுவதன்மூலம் ஒட்டுமொத்த அமைப்பைக் காட்டுதல்.

5. மதிப்பீடு செய்தல் (Evaluating)
விசாரணை, விமர்சனம் போன்றவற்றின் ஊடாக நியமங்களையும், தரங்களையும் அடிப்படையாகக் கொண்டு தீர்ப்புச் செய்தல்.

6. புத்தாக்கம் படைத்தல் (Creating)
கூட்டிணைந்த செயல்சார்ந்த ஒட்டுமொத்த மொன்றினைக் கட்டியெழுப்புவதற்காகக் கூறுகளை / முதன்மையான அம்சங்களை ஒன்றுசேர்த்தல், புதியன படைத்தல், திட்டமிடல் அல்லது உற்பத்தி செய்தல்மூலம் முதன்மையான அம்சங்களைப் புதிய கோலமொன்றில் அல்லது கட்டமைப்பொன்றில் மீள ஒழுங்குபடுத்துதல்.

2) கட்டமைப்பில் மாற்றங்கள்

திருத்தியமைக்கப்பட்டுள்ள பாகுபாட்டிற் கட்டமைப்பு மாற்றங்கள் தெளிவற்றதாக இருந்தபோதிலும், சற்று ஆழமாக நோக்குகையில் அது தர்க்கரீதியானது என்பது தெளிவாகின்றது. புளூம் இனது பழைய அறிக்கைப் பாகுபாடு ஓர், ஒருபரிமாண (One Dimentional) மாதிரியாகும். புதிய பாகுபாடு இருபரிமாணம் (Two Dimentional) கொண்டதாகும். அதில் விளைவுகள் - உற்பத்திகள் சேர்க்கப்பட்டிருப்பதே அதற்கான காரணமாகும்.

"அறிவு" மட்டத்தின் பகுதிகளும் அச்செயன்முறையின் இருபத்து நான்கு கூறுகளும் பின்வரும் அட்டவணையிற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிகைச் செயன்முறைப் பரிமாணம்

| அறிகைப் பரிமாணங்கள் | ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் | விளங்கிக் கொள்ளல்/ கிரகித்துக் கொள்ளல் | பயன்படுத்தல்/ பிரயோகித்தல் | பகுப்பாய்வு செய்தல் | மதிப்பீடு செய்தல் | புத்தாக்கம் புரிதல் |
|---|---|---|---|---|---|---|
| விடய அறிதல் | பட்டியற் படுத்துக | பொழிப் பாக்குக | வகைப் படுத்துக | வரிசைப் படுத்துக | தரப்படுத்துக | சேர்மானஞ் செய்க |
| எண்ணக்கரு அறிதல் | விபரிக்குக | வியக்கியானஞ் செய்க | கையாண்டு பார்க்குக | காரணங் காட்டுக | கண்ப்பீடு செய் | திட்டமிடுக |
| வழிவகை அறிதல் | அட்டவணைப் படுத்துக | எதிர்வு கூறுக | கணிப்பிடுக | பகுதிகளாக்குக | முடிவு செய்க | எழுத்தாக்கம் செய்க |
| அதி அறிகை அறிதல் | பொருத்த மானவாறு பிரயோகிக்குக | செயலுருப் படுத்துக. | கட்டி யெழுப்புக | நிறுவுக | செயற்படுத்துக | யதார்த்தப் படுத்துக. |

*3. வலியுறுத்தலின் மாற்றங்கள்*

புளூம் இனது பழைய பாகுபாடு, அதன் பிதாமகர்கள் எதிர்பாராத அளவுக்கு, கல்வித்துறையிற் பிரபல்ய மடைந்தது. எனவே, புதிய பாகுபாடானது வேண்டு மென்றே, துறையின் சகல அம்சங்களிலும் - குறிப்பாக, கலைத்திட்டம் திட்ட மிடுதல், கற்பித்தல், மதிப்பீடு செய்தல் ஆகிய அம்சங்களில் இன்றியமையாத ஒரு கருவியாகப் பயன்படுத்தத்தக்க வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

*1. அறிதல் ஆட்சி* (Cognitive Domain)

அறிதல் ஆட்சி என்பதாற் கருதப்படுவது, மாணவனி டத்தே கட்டியெழுப்பப்படும் அறிவு, தகவல்களும்; அத்தக வல்கள் தொடர்பான அறிவாற்றல் களுமாகும். மதிப்பீட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான குறிக்கோள்கள் பாகுபாட்டின்போது இந்த அறிகைத் திறன்கள், அறிவு, நுண்ணறிவுத் திறன்கள் எவ்வாறாகப் பிரதானமான இரண்டு பகுதிகளாக வகுத்தப் பகுத்தாராயப் படுகின்றது. அது தொடர்பான மேலதிக விவரங்கள் அடுத்த பகுதியில் தரப்பட்டுள்ளன.

2. மனவெழுச்சி ஆட்சி (Affective Domain)

மனவெழுச்சி ஆட்சி என்பதாற் கருதப்படுவது, கற்பிக்கப்படும் தகவல்கள், கற்பிப்பதற்காகப் பயன்படுத்தப் படும் முறைகள், நுட்பங்கள் , ஆசிரியர்களது செயற்பாடுகள் ஆகியன காரணமாக மாணவரிடத்தே விருத்தியடையும் மனப்பாங்குகள், நற்பண்புகள், பழக்கவழக்கங்கள், விழுமியங் கள் போன்ற நல்ல மனித விழுமியங்கள் கொண்டிருக்கும் பண்புகளாகும்.

டீ. ஆர். கிரத்வோல் எனும் உளவியலாளரின் தலைமையில் மனவெழுச்சி ஆட்சி பாகுபடுத்தப்பட்டு, பிரதானமான 5 மட்டங்களாக அது வேறுபடுத்திக் காட்டப் பட்டுள்ளது.

1. பற்றுதல்

   இது மனவெழுச்சி ஆட்சியின் முதலாவது மட்டமாகும். யாதேனுமொரு தூண்டி அல்லது தோற்றப்பாடு தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதற்காக ஒருவரிடத்தே காணப்படும் விருப்பமே இம்மட்டத்தினாற் கருதப் படுகின்றது.

**உதாரணம்:** புத்தகமொன்றை வாசிப்பதிற் காட்டும் விருப்பம்

2. துலங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரது செயல்ரீதியான ஈடுபாட்டையே இது குறிக்கின்றது.

**உதாரணம்:** புத்தகம் வாசிப்பதில் ஈடுபடுதல்

3. பெறுமானம் வழங்கல்

மாணவனால் யாதேனும் பொருளுக்கு, தோற்றப் பாட்டுக்கு அல்லது நடத்தைக்குப் பெறுமானம் வழங்கப் படுதலாகும்.

உதாரணம்: புத்தகமொன்றை வாசித்தல் நல்லதொரு மாணவரின் பண்பாகும் எனக் கருதி தொடர்ந்தும் புத்தகம் வாசிப்பதில் ஈடுபடுதல்.

4. ஒழுங்கமைத்தல்

ஒருவரிடத்தே காணப்படும் பல்வேறு பெறுமானங்களை ஒன்றிணைத்தலையே இது குறிக்கின்றது. அப்பெறு மானங்களை ஒரு தொகுதியாக ஒழுங்கமைத்தல்.

உதாரணம்: நூல்கள், சஞ்சிகைகளை வாசித்து, வேறு வழிகளில் தகவல் சேகரித்து, அறிவை விருத்தி செய்து கொள்ளும் தொடர்ச்சியான செய்மறையில் ஈடுபடுதல்.

3) உள -இயக்க ஆட்சி (Phychomotor Domain)

உள-இயக்க ஆட்சி தொடர்பாக பல்வேறு பகுப்பாய் வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. டெவ். கிப்லர், ஹாரோ, சிம்சன் ஆகியோர் இந்த ஆட்சியின் குறிக்கோள்களைப் பகுப்பாய்வுசெய்தோர் இவராவர். அவற்றுட் சிம்சனின் பாகுபாட்டைச் சுருக்கமாக நோக்குவோம். அதில் 7 மட்டங்கள் காட்டப்பட்டுள்ளன.

1. புலக்காட்சி: புலனுறுப்புக்களின் மூலம் இயக்கச் செயற் பாடுகளுக்குத் தேவையான வழிகாட்டல்கள் அதாவது நேரடித் தூண்டல்களை வழங்குதல்.

உதாரணம்: - சித்திரக் கண்காட்சியொன்றினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த ஒரு மாணவி சித்திரம் வரைவதில் ஆர்வம் காட்டுதல்.

- நடனக் கண்காட்சியொன்றினைப் பார்த்த ஒரு மாணவி நடனம் கற்பதில் ஆர்வம் காட்டுதல்.

2. ஆயத்தம்: யாதேனும் செயற்பாட்டைச் செய்வதற்கு ஆயத்தமாதல். ஒளிரீதியிலும் உடல் ரீதியிலும் மனவெழுச் சியிலம் ஆயத்தமாக இருத்தல் முக்கியமானதாகும்.
3. வழிகாட்டல் சார்ந்த துலங்கல்: ஆசிரியரது அல்லது போதனாசிரியரது வழிகாட்டலின் பேரில் செயற்பாடுகள் நடன ஆசிரியர் சொல்லித்தருவதற்கேற்ப நடனம் கற்றல் இதற்கான ஓர் உதாரணமாகும்.
4. பொறிமுறை: இம்மட்டத்தில் ஏற்கனவே கற்ற செயற் பாடுகளில் கணிசமான நம்பிக்கையுடனும் தொடர்ச்சித் தன்மையுடனும் ஈடுபடுவதற்கு அவருக்கு ஆற்றல் உண்டு. உதாரணம்: வினைத்திறனுடன் நடனத்தில் ஈடுபடுதல்.
5. சிக்கலான துலங்கல் வெளிப்பாடு: ஏற்கனவே கற்ற செயற்பாடுகளில் நல்ல பாண்டித்தியம் இம்மட்டத்தில் காணப்படும்.

   உதாரணம்: தயக்கமிற்றி மேடையில் நடனமாட முன்வந்து, நன்றாக நடனத்தில் ஈடுபடுதல்.
6. இசைவடைவு: இம்மட்டத்தை அடையும்போது இயக்கத் தொழிற்பாடுகள் மிக உயர்மட்டத்திற்கு விருத்தியடைந் திருக்கும். சந்தர்ப்பத்துக்கு / தருணத்துக்குப் பொருத்த மானவாறு செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

   உதாரணம்: வினைத்திறனுடன் நடனத்தில் ஈடுபடுதல்.
7. ஆக்கம்புரிதல் : உள - இயக்கக் குறிக்கோட்பாகு பாட்டின் அதி உயர்மட்டம் இதுவாகும். யாதேனும் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானவாறு இயக்கச் செயல் களையும் நடத்தைகளையும் படைக்கும் ஆற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தை அவர் அடைவார்.

உதாரணம்: புதுப்பாங்கான ஒரு நடனத்தை முன்வைத்தல். அதில் ஒருவர் சுய ஆக்கமொன்றினை முன்வைத்தல்.

அறிதல் மனவெழுச்சி, உள-இயக்கம் என்றவாறாகச் செய்யும் இந்தப் பாகுபாட்டில், அடங்கியுள்ள மூன்று ஆட்சிகளும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றாக வேறுபட்டவை அல்ல.

உதாரணமாக , ஒரு மாணவன் பேச்சுப்பேசும் சந்தர்ப்பத்தில் இடம்பெறும் நடத்தைகள் யாவும் இந்த மூன்று ஆட்சி களிலும் பங்களிப்புச் செய்யும் பேச்சின் விடய உள்ளடக்கமும் அவற்றின் ஒழுங்கமைப்பும் அறிதல் ஆட்சியிலடங்கும். மலர்ச்சியுடன் பேசும் தன்மை மனவெழுச்சி ஆட்சியில் அடங்கும். அங்க அசைவுகள், சொற்கள் உச்சரிப்புப் போன்ற உடற் செயற்பாடுகள், உள - இயக்க ஆட்சியில் அடங்கும். மாணவனது பேச்சை மதிப்பிடும்போது ஆசிரியர் கவனஞ் செலுத்தும் நடத்தைகள் எவை என்பதைக் கருத்திற்கொண்டு இம்மூன்று ஆட்சிகளை யும் மதிப்பீடு செய்யலாம்.

## 2.3 அறிதல் ஆட்சிப் பாகுபாடு (புளூம்)

அறிதல் ஆட்சியின் கற்றற்பேறுகள் பிரதானமாக இரண்டு வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1) அறிதல்

2) அறிவாற்றல்கள் என்பனவே அவையாகும்.

இவை தொடர்ந்தும் 6 பிரதான பகுதிகளாக வகுக்கப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) அறிதல்

2) விளக்கம் / கிரகிப்பு

3) பிரயோகம்

4) பகுப்பு

5) தொகுப்பு

6) மதிப்பீடு

1) அறிதல்

ஏற்கனவே கற்றவை பற்றிய ஞாபகமே அறிதல் என்பதாகக் கருதப்படுகின்றது. புளூம் பாகுபாட்டின்படி அறிதல் என்பது, மிகக் கீழே உள்ள எளிமையான நடத்தை மட்டமாகும். இந்த நடத்தை மட்டத்தை வெளிப்படுத்துவதற்கு, மாணவருக்குத் தேவைப்படுவது, எளிமையான வரைவிலக்கணங்கள், விடயங்கள், சட்டதிட்டங்கள், வகைகள், பாகுபாடு, கோட்பாட்டு முறை போன்றவற்றை வினாவுக்கு விடையாக மனனமாகக்கூறும் அல்லது எழுதும் திறனாகும்.

**அறிதலின் உப பகுதிகள்**

குறிப்பானவற்றை அறிதல்

கலைச்சொற்கள் பற்றிய அறிதல்

சிறப்பான விடயங்கள் பற்றிய அறிதல்

குறிப்பானவற்றின் பயன்களையும் / பிரயோகங்களையும் அறிதல்

- நியமங்கள் பற்றிய அறிதல்
- ஒழுங்கு வரிசை தொடர்பான அறிதல்
- நியதிகள் பற்றிய அறிதல்
- முறைகள் தொடர்பாக அறிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோட்பாடுகள் பற்றி அறிதல்**

1. கோட்பாடுகள், பொதுமைப்பாடுகள் பற்றிய அறிதல்
2. கொள்கைகள், கட்டமைப்புகள் பற்றிய அறிதல்

**அறிவாற்றல்களும் திறன்களும்**

1. கிரகித்தல் / விளக்கம்

யாதேனும் விடயமொன்றினை விளங்கிக்கொள்ளும் மற்றும் விளக்கும் திறன். இது மூன்று பகுதிகளைக் கொண்டது.

மாற்றியமைத்தல்

கருத்துக்களை ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்திற்கு மாற்றுதல்.

உதாரணம்: சொற்களைக் குறியீடுகளாகவோ, சொற்களாகவோ மாற்றுதல்.

2. வியாக்கியானஞ் செய்தல்

விளக்குதல், கருத்தைத் தெளிவுபடுத்தல்

3. எதிர்வுகூறல்

அர்த்தத்துக்கு அப்பாற்பட்ட வகையிற் பொருளைப் பரப்புதல்

உதாரணம்: தற்கால, கடந்தகால வானிலைத் தகவல்களினூடாக எதிர்வரும் மாதத்தின் மழைவீழ்ச்சி நிலையை எதிர்வு கூறல்.

3. பிரயோகம்

கோட்பாடுகள், கொள்கைகள், விதிகள், கருத்துக்கள், முறைகளைப் பிரயோகித்தல், கற்ற விடயமொன்றை, புதியதொரு சந்தர்ப்பத்திற் பிரயோகிக்கும் திறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:

- கணிதச் செய்கையொன்றினை அறிந்துள்ள ஒரு மாணவன் புதிய கணிதப் பிரச்சினையொன்றைத் தீர்த்தல்.
- மெண்டலின் விதியைத் தாவரங்களின் பிறப்பாக்கப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தல்.
- அறிந்துள்ள பொருளாதார விதியொன்றினைப் பயன்படுத்திப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

4. பகுப்பு

பகுதியாகப் பிரித்தாலும் அப்பகுதிகளுக்கு இடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பை விளங்கிக் கொள்ளும் திறனும்,

1. உறுப்புப் பகுப்பாய்வு - பகுதிகளை இனங்காணல்
2. தொடர்புகளைப் பகுத்தாய்தல் - பகுதிகளுக்கு இடையிலான தொடர்பை இனங்காணல்
3. ஒழுங்கமைந்த கோட்பாட்டுப் பகுப்பாய்வு-பகுதிகள் ஒழுங்கமைந்துள்ள விதத்தை இனங்காணல்.

உதாரணம்:

- குருதிச் சுற்றோட்டத் தொகுதியைப் பகுத்தாய்தல்.
- வரலாற்றில் இடம்பெற்றுள்ள சம்பவமொன்றின் முக்கியமான, முக்கியத்துவம் குறைவான தகவல்களைக் காரணத் தொடர்புகளுடன் இனங்காணல்.

5. தொகுப்பு

முழுமையைக் கட்டியெழுப்பும் வகையிற் பகுதிகளை, கூறுகளை ஒன்றுசேர்த்தல்

1. புதிய கூற்றுகளை உருவாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. திட்டமொன்றினை / செயற்பாட்டுத்திட்டமொன்றினை உருவாக்குதல்.

3. கருத்துநிலையான தொடர்புத் தொகுதியொன்றினை / செயற்பாட்டுத் திட்டமாற்றினை உருவாக்குதல்.

**உதாரணம்:** சுருக்கமெழுதுதல்

- திட்டமொன்று தயாரித்தல்
- சிறுகதை, நாவல், கவிதை புனைதல்
- கட்டுரை எழுதுதல்
- பிரச்சினைக்குத் தீர்வு முன்வைத்தல்

6. மதிப்பீடு

1. யாதேனுமொரு நோக்கத்துக்காக குறித்த நியமங்களைப் பயன்படுத்தி யாதேனுமொன்றுக்குப் பெறுமானத்தைத் தீர்ப்புச் செய்தல்.

   **உதாரணம்:** உயர்தரமுடைய நாவலொன்றில் அடங்கியிருக்கவேண்டிய அம்சங்கள், நியமங்களின் மீது யாதேனும் நாவலொன்றினை விமர்சித்தல்.

2. புறவாரியான தீர்ப்புக் காரணிகளின்படி மதிப்பிடுதல்
   உதாரணம்: யாதேனும் நாவலொன்றினை, சமகால, வேறு நாவல்களுடன் ஒப்பிட்டு விமர்சித்தல் அல்லது மதிப்பீடு செய்தல்.


மேற்படி, பாகுபாடு சில இயல்புகளைக் கொண்டுள்ளது.

எளிமையான குறிக்கோள்களில் ஆரம்பித்துச் சிக்கலான குறிக்கோள்களை நோக்கி உயர்ந்துசெல்லும் வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தந்தக் குறிக்கோளின் உப பகுதிகளை வரிசைப்படுத்தும்போதும் இந்த நியமங்கள் பின்பற்றப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிதல் ஆட்சிப் பாகுபாடு**




கற்பித்தலுக்காகவும், சோதனை உட்பட மதிப்பீட்டுக் காகவும் அறிகைப் பாகுபாட்டைப் பயன்படுத்துவதிற் கிடைக்கும் சில நன்மைகள் உள்ளன.

- மாணவரிடத்தே அறிதல் சார்ந்த நடத்தை மாற்றங்கள் ஏற்படும் சகல கற்றற் பெறுபேறுகளும் இதன்மூலம் உள்ளடக்கப்படும்.
- ஆசிரியர் இக்குறிக்கோட் பாகுபாட்டை ஆராய்வதன் மூலம் மாணவரது நடத்தைகள் உயரிய குறிக்கோள் களை அடையத்தக்க வகையில் தமது கற்பித்தலை ஒழுங்குபடுத்திக்கொள்ளலாம்.
- சோதனை தயாரிப்பவர், இப்பாகுபாட்டை அடிப் படையாகக்கொண்டு மாணவரிடத்தே மதிப்பீடு செய்யவேண்டிய அறிகை நடத்தைகள் விடுபட்டுப் போகாத வகையிற் சோதனைகளைத் தயாரிப்பதற்கு இது நல்ல வழிகாட்டலாக அமையும். அவ்வாறு சோதனைகள் அமைப்பதால் சோதனையின் தகுதியும் உயரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிக்கோள்களுக்குப் பொருத்தமான வினைச் சொற்கள்**

இப்பாகுபாட்டுக்குப் பொருத்தமானவாறு வினாக்கள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய சில வினைச் சொற்கள் (வினைமுற்றுக்கள்) முன்வைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| குறிக்கோள் வகை: | வினாக்கள் தயாரிக்கையிற் பயன் படுத்தக்கூடிய சில வினைச் சொற்கள். |
| அறிதல்: | கூறுவார், பெயரிடுவார், வரைவிலக் கணப்படுத்துவார், விவரிப்பார், பட்டியற்படுத்துவார், (இவை ஞாபகத் தின் மூலம் செய்யும் செயல்களாகும்) |
| கிரகித்தல் / விளக்கம்: | விபரிப்பார், மாற்றியமைப்பார், வேறுபாட்டை, எடுத்துக்காட்டுவார், எதிர்வுகூறுவார். |
| பிரயோகம்: | காட்சிப்படுத்துவார், கணிப்பார், தீர்ப்பார், பயன்படுத்துவார். |
| பகுப்பு: | வேறுபாடுகளைக் காட்டுவார், வேறு படுத்திக் காட்டுவார். பகுதிக ளாகப் பிரிப்பார், உப பகுதிகளை எடுத்துக் காட்டுவார். |
| தொகுப்பு: | படைப்பாக்கம் செய்வார், திட்ட மிடுவார், பொழிப்பாக்குவார், கட்டி யெழுப்புவார், உருவாக்குவார், ஒட்டு மொத்தமாகக் காட்டுவார். |
| மதிப்பீடு : | தீர்ப்புச் செய்வார், விமர்சிப்பார், ஒப்பிடுவார், நியாயப்படுத்துவார், முடிவுசெய்வார். |

**பன்முக நுண்மதி (Multiple Intelligence)**

நுண்மதி மற்றும் நுண்மதிச் சோதனைகள் தொடர்பாக உளவியலாளர்களாற் கடந்த ஏறத்தாள மூன்று தசாப்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துள்நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின்படி நுண்மதி தொடர்பான பன்முக நுண்மதி எண்ணக்கரு முன்வைக்கப் பட்டுள்ளது.

1983 இல் Howard Garner என்பார். தமது Frames of Mind எனும் நூலிற் பன்முக நுண்மதி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நுண்மதி எட்டுப் பரிமாணங்களைக் கொண்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1. சொல் சார்ந்த நுண்மதி Linguistic Intelligent
2. தர்க்க கணித நுண்மதி Logical Mathematical Intelligent.
3. வெளி சார்ந்த நுண்மதி Spatial Intelligent
4. இசை சார்ந்த நுண்மதி Musical Intelligent
5. உடலசைவு சார்ந்த நுண்மதி Bodily Kinesthetic
6. இயற்கை சார்ந்த நுண்மதி Naturalistic Intelligent
7. ஆளிடை நுண்மதி Interpersonal Intelligent
8. ஆளக நுண்மதி Intra personal Intelligent

தற்போது நாம்பயன்படுத்தும் நுண்மதிச் சோதனைகளில் மேற்படி பரிமாணங்களுள் முதலிரண்டு பரிமாணங்கள் மாத்திரமே, அதாவது சொல்சார்ந்த நுண்மதி, தர்க்க கணித நுண்மதி ஆகியன மாத்திரமே உள்ளடங்கி யுள்ளன. எனினும் பிள்ளையின் உண்மையான நுண்மதி ஈவைக் கண்டறிவதற் காக மேற்படி சகல அம்சங்களும் உள்ளடங்கிய வகையில் நுண்மதிச் சோதனைகள் தயாரிக்க முனைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுண்மதிச் சோதனைகளின் பயன்கள்**

- பாடசாலைகளுக்கு / தொழில்களுக்கு ஆட்சேர்க்கும் போது நுண்மதிச் சோதனைகள் பயன்படுத்தப் படுவதுண்டு.
- பொதுவான கற்றல் திறன்கள் தவிர்ந்த ஏனைய திறன்களை அளப்பதற்கு நுண்மதிச் சோதனைகளைப் பயன் படுத்தலாம். (நினைவாற்றல், மொழியாற்றல், தர்க்க ஆற்றல்)
- வழிகாட்டலின்போது நுண்மதிச் சோதனைகளைப் பயன்படுத்தலாம்.
- நுண்மதி சார்ந்த திறன்களை மாத்திரமன்றி மாணவர் / பிள்ளை அதிக திறமைகாட்டும், அதிக ஆர்வம் காட்டும் அம்சம் எது எனக் கண்டறிவதற்காகவும் நுண்மதிச் சோதனைகளைப் பயன்படுத்தலாம்.
- மாணவரை தொழில்கள் சார்ந்த கல்வியில் வழிப்படுத்து வதற்காகவும் நலிவுகள் போன்றவற்றை இனங்காண்பதற் காகவும், நுண்மதிச் சோதனைகளைப் பயன்படுத்தலாம்.

**நுண்மதிச் சோதனைகளின் மட்டுப்பாடுகள் / குறைபாடுகள்**

- நுண்மதிச் சோதனைகளின் பெறுபேறாகக் கிடைப்பது. அச்சோதனையினால் அளக்கப்படும் நுண்மதியேயன்றி பிள்ளையின் இயல்பான நுண்மதி அல்ல.
- நுண்மதியின் விசேடமான திறன்களை (எண்சார்ந்த திறன்கள், சொல் சார்ந்த திறன்கள், நினைவாற்றல், தர்க்க ஆற்றல்) நுண்மதிச் சோதனைகள்மூலம் அளப்பது சத்தியமானதல்ல.
- ஆக்கத்திறன்களை அளப்பதற்கான ஒரு கருவியான நுண்மதிச் சோதனைகளைப் பயன்படுத்துவது சாத்திய மானதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பயிற்சி / அப்பியாசங்கள் நுண்மதிச் சோதனைப் புள்ளிகளிற் செல்வாக்குச் செலுத்த இடமுண்டாகையால், உண்மையான நுண்மதி ஈவை அளந்தறிய முடியாத நிலை ஏற்படும்.
- நுண்மதிச் சோதனையைத் தயாரிப்பதற்காகப் பயன் படுத்தும் மொழி சொற்களைப் போன்றவையும், சோதனையை நடத்துவதற்காகத் தெரிவு செய்து கொள்ளும் சூழலும் சோதனைப் புள்ளிகளில் செல்வாக் குச் செலுத்த இடமுண்டாகையால் உண்மையான நுண்மதி இவை அளந்தறிவது சாத்தியமானதல்ல.
- சோதிக்கப்படுபவரின் உடல், உள தன்மையும் நுண்மதிச் சோதனைகளில் செல்வாக்குச் செலுத்தும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உண்மையான பெறுபேறு கிடைக்க மாட்டாது.

**உளச்சார்பு சோதனைகள் Aptitute Tests**

ஒருவரிடத்தே காணப்படும் உள்ளார்ந்த இயலுமைகளைக் கண்டறிவதற்கும், அளப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒருவகைச் சோதனையே உளச் சார்புச் சோதனை எனப்படுகின்றது. ஒருவர் யாதேனுமொரு செயல் தொடர்பான பயிற்சியில் ஈடுபட்டதன் பின்னர் அச்செயலில் ஈடுபடுவதன் வெற்றி அல்லது வெற்றியின்மை தொடர்பாக எதிர்வு கூறுவதற்காகவே இச்சோதனை நடத்தப்படுகின்றது.

மொழியொன்றினைப் பேசும் திறன், இசையொன்றினைப் பிறப்பிக்கும் திறன் போன்ற யாதேனும், துலங்கல்கள் கூறு / கூறுகள், யாதேனும் அறிவுக்கூறு மற்றும் தேர்ச்சிகள் குறித்த ஒரு துறையில் வழங்கப்படும் பயிற்சியின் ஊடாகப்பெறும் ஆற்றல் தொடர்பாக ஒருவரிடத்தே காணப்படும் நடத்தைப் பண்புகள் அல்லது அறிகுறிகளே உளச்சார்பாகும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரன் என்பவரது அகராதியில் வரைவிலக்கணப் படுத்தப் பட்டுள்ளது.

மேற்படி வரைவிலக்கணத்தின்படி, உளச்சார்புச் சோதனையொன்றில் அடங்கியிருக்க வேண்டிய முக்கியமான இயல்பு, எதிர்வுகூறல் தகுதி (Predictive Validity) ஆகும். உதாரணமாக: ஐந்தாந் தரப் புலமைப்பரிசில் பரீட்சையானது மாணவரது புலமைச் செயலாற்றல் (Scholastic Potential) தொடர்பாக எதிர்வு கூறுவதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.

ஒருவரது எதிர்கால ஆற்றல்கள் தொடர்பாக தற்காலத்திற் செய்யப்படும் எதிர்வுகூறலே உளச் சார்புச் சோதனைமூலம் எதிர்பார்க்கப்படுகின்றது என எளிமையாக விளக்கலாம். எனவே, யாதேனும் கற்கை நெறியுடன் தொடர்பேதுமின்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உளச்சார்புச் சோதனைகள் நடத்தலாம். இலங்கையிற் சில பயிற்சி நிறுவனங்கள் அவற்றின் கற்கை நெறிகளுக்காக மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக உளச்சார்புச் சோதனைகளைப் பயன்படுத்து வதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி...

திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்கள் மிக நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு உளவியலையும், ஆலோசனை வழிகாட்டல், கல்வியியற் பாடத்துறைகளைக் கற்பித்து வருகின்றார். இத்துறைகளை மிகவும் சிறப்பாகக் கற்பிக்கும் ஆற்றலும், பயிற்றுவிக்கும் அனுபவமும்; பிரயோக நிலையில் மாணவர்களின் இடைவினைகளினூடு சங்கமமாகும் தேர்ச்சியும், ஆளுமையும் மிக்க நூலாசிரியரின் சிறந்த படைப்பாக இந்நூல் வெளிவருகின்றது.

சமகாலத்தில் ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள் பல பரிமாணங்களில் விருத்தியடைந்து வருகின்றது. இதனை ஈடுசெய்யும் முகமாகப் புதிய நூல்கள், புத்தாக்கள்கள் தமிழ்மொழிமூலம் வெளிவருவது போதுமானதாக இல்லை. இவ் இடைவெளியைப் பூர்த்திசெய்யும் மிகவும் முயர்ச்சியுடைய முன்மாதிரிக் கல்வியியலாளனாகத் திரு.பா. தனபாலன் திகழ்ந்து வருகின்றார். பத்திரிகை களிலும், சஞ்சிகைகளிலும் எதிர்காலக் கல்வியியல் நோக்கிய கல்வியியற் கட்டுரைகளை எழுதிவருவதுடன், நூலாக்கங்களையும் மேற்கொண்டு வருகின்றார்.

தற்போது ஆசிரியத் தொழிலானது பல்வேறு அறைகூவல்கள் பொருந்தியதாகக் காணப்படுகின்றது. அறைகூவல்களை வெற்றிகொள்ளத் தொடர்ந்து ஆசிரியர்கள் கற்பதுடன் பல்வேறுபட்ட நெறிகளைப் பின்பற்றித் தமது ஆளுமைகளை வளர்க்க வேண்டியுள்ளது. இதற்கு இந்நூல் வழிகாட்டுகின்றது. மேலும், இந்நூலாசிரியரின் ஆக்கங்கள் கல்வியியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நடைமுறைகளை எடுத்தியம்புவதாகவுள்ளமை அடுத்த சிறப்பாகவுள்ளன. கல்வியியலில் ஆய்வுக் கலாச்சாரத்தை, விஞ்ஞான சிந்தனையை ஏற்படுத்திவரும் இந்நூலாசிரியரின் முயற்சிகள் பாராட்டுக்குரியன.

S.K. யோகநாதன் (பீடாதிபதி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org